விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 ஐப்பசி 24 வெள்ளிக்கிழமை (09.11.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 326

MADRAS CEMENTS LTD
ராம்கோ
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# பட்ஜெட் - 2013



(கொழும்பு)

2013ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை நிதி அமைச்சர் என்ற முறையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார். அரச ஊழியர்களுக்கு கொடுப்பனவு உள்ளிட்ட பல சலுகைகளைத் தாங்கிவரும் இந்த வரவு செலவுத்திட்டத்தில், தனியார் துறை மற்றும் கல்வி ஒதுக்கீட்டுக்கு பெரியளவில் சலுகைகள் வழங்கப்படவில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் 2013ஆம் ஆண்டு அரசாங்கத்தின் மொத்த வருமானம் ஆயிரத்து 280 பில்லியன் ரூபாயாக இருக்கின்ற அதேவேளை, மொத்த செலவினம் இரண்டாயிரத்து 520 பில்லியன் ரூபாயாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது. 2013 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டக்குறைப்பு ரூபாய் ஆயிரத்து 240 பில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளது.

## இதன்படி அடுத்த ஆண்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ள முக்கிய திட்ட நடவடிக்கைகள் வருமாறு,

- 2013ஆம் ஆண்டு வடக்கில் மாகாண சபைத் தேர்தல்.
- கல்வித்துறைக்கு 306 பில்லியன் ரூபாய் (மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.1 சதவீதம்) ஒதுக்கீடு.
- அரச ஊழியர்களுக்கான மேலதிக கொடுப்பனவு 1500 ரூபாயாக அதிகரிப்பு.
- நிரந்தர வருமானம் இல்லாத 65 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு 5000 ஆயிரம் ரூபாய்.
- பால்மா வகைகளின் வரி அதிகரிப்பு.
- வெளிநாட்டவர்களுக்கு காணிகளை விற்கத் தடை.
- பாதுகாப்புப் பிரிவினருக்காக மூன்று வருடங்கள் செல்லுபடியாகும் வகையில் நிவாரண வீட்டுக் கடன் வசதி. (ஆயிரம் மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு)
- வாகன வரி 10-20 வீத அதிகரிப்பு.

(02ஆம் பக்கம் பார்க்க)

## பட்ஜெட்டை எதிர்க்க ஐ.தே.க. முடிவு

(கொழும்பு)

2013ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தை எதிர்த்து வாக்களிக்க ஐக்கிய தேசியக்கட்சி முடிவெடுத்துள்ளது.

வரவுசெலவுத்திட்டம் நேற்று சமர்ப்பிக்கப்பட்ட பின்னர், நாடாளுமன்ற கட்டிடத்தில் கூடிய ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற குழுவினர் (20ஆம் பக்கம் பார்க்க)

## பராக் ஒபாமாவிற்கு மகிந்த வாழ்த்து!

(கொழும்பு)

மீண்டும் அமெரிக்க ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ள பராக் ஒபாமாவிற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது வாழ்த்தினைத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியாக 2-வது தடவையாக தெரிவாகியுள்ள பராக் ஒபாமாவிற்கு வாழ்த்துச் செய்தியொன்றை அனுப்பிவைத்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

## ஜயலத் ஜயவர்த்தனவுக்கு திடீர் மாரடைப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன மாரடைப்புக் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முற்பகல் திடீர் மாரடைப்புக் காரணமாக அவர் சிறி ஜயவர்த்தனபுர மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். (20ஆம் பக்கம் பார்க்க)

## பிரதம நீதியரசருக்கு சர்வதேச உதவி!

(கொழும்பு)

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணையின் போது சர்வதேச கண்காணிப்பை நடத்த வேண்டும் என்று சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

இதன்படி ஐக்கிய நாடுகள் சபை இந்த குற்றவியல் பிரேரணை தொடர்பில் கண்காணிப்பை நடத்த வேண்டும் என்று சட்டத்தரணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதற்காக கையொப்பங்களை சேகரிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இது தொடர்பில் கருத்துரைத்த இலங்கையின் இளம் சட்டத்தரணிகள் சங்க உறுப்பினர் நுவன் போபஹே, பிரதம (20ஆம் பக்கம் பார்க்க)

## டிசம்பர் 8 வரை திட்ட விவாதம்

(கொழும்பு)

நேற்று சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு-செலவு திட்டம் தொடர்பான விவாதம் அடுத்தமாதம் டிசெம்பர் 8 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இலங்கையின் 66 ஆவது ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு அரசின் (20ஆம் பக்கம் பார்க்க)


## அரசுடன் இணையுமாறு எதிர்க்கட்சிகளுக்கு அழைப்பு

### ஜனாதிபதி மகிந்த விடுத்தார்

(கொழும்பு)

அரசாங்கத்துடன் இணைந்து கொள்ளுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எதிர்க்கட்சிகளிற்கு அழைப்பு விடுத்துள்ளார். 2013ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்து உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

நாட்டின் அபிவிருத்தியை உறுதிப்படுத்த எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்பு அவசியம் என சுட்டிக்காட்டி ஐக்கிய தேசியக் கட்சியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஆளும் கட்சியுடன் (20ஆம் பக்கம் பார்க்க)



வரவுசெலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் சந்தித்து கலந்துரையாடுவதை படத்தில் காணலாம்.

## வட மாகாண தேர்தல் 2013 இல்

(கொழும்பு)

2013 ஆம் ஆண்டு வடக்கு மாகாண சபை தேர்தல் நடைபெறும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் நடைபெற்ற 2013 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தை சமர்ப்பித்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

வடக்கில் ஜனநாயகத்தை பலப்படுத்தும் நோக்கில் வடமாகாண சபை தேர்தல் எதிர்வரும் 2013 ஆம் ஆண்டு நடத்தப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்

இதே வேளை நாட்டில் தீர்வினை காண்பதற்கு அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும் எனவும் ஜனாதிபதி அழைப்பு விடுத்திருந்தார்.

அரசாங்கத்துடன் சேர்ந்து இயங்கும் இனவாத கட்சிகள் மாகாண சபை முறையை முற்றாக ஒழிக்குமாறு கோரிக்கை விடுத்து வரும் நிலையில் ஜனாதிபதி இவ்வாறு அறிவித்துள்ளார்.

அதேவேளை வடக்கில் மாகாண சபை தேர்தலினை மேற்கொண்டால் சில நடைமுறைகளை மேற்கொள்வதற்கு தடையாக அமையும் என கட்சிகள் பல கூறிவருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ந-11)

## ஆதரிப்பதா? இல்லையா? இப்போதைக்குக் கூறமுடியாது

### கூட்டமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

வரவு-செலவுத்திட்டத்தை ஆதரிப்பதா, இல்லையா என்பது குறித்து இப்போதைக்கு கருத்துத் தெரிவிக்க முடியாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

2013-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டத்தில் வடக்கு, கிழக்கு அபிவிருத்தி தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்படவில்லை.

குறிப் (20ஆம் பக்கம் பார்க்க)

## வரவு செலவுத்திட்டம் மக்களின் எதிர்பார்ப்புக்கு புறம்பானது

### ஜே.வி.பி.விசனம்

(கொழும்பு)

2013-ம் ஆண்டு வரவு செலவுத் திட்டம் மக்களின் எதிர்பார்ப்பிற்கு முரணான வகையில் அமைந்துள்ளதென ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இந்த வரவு-செலவுத் திட்டம் சர்வதேச நாணய நிதியத்தின் ஆலோசனைக்கு அமைய தயாரிக்கப்பட்டுள்ளது.

அந்நிய செலவாணி தொடர்பில் கவனம் செலுத்தப்படவில்லை. இம்முறை வரவு-செலவுத்திட்டத்திலும் மக்களுக்கு எவ்வித நன்மைகளும் கிடையாது.

பழைய முறைமைக்கு அமைவாக (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்ஜெட் - 2013...

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் முன்மொழியப்பட்ட அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டங்களும் அவற்றின் விபரங்களும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

### விவசாய கடன்

அதன்படி விவசாய நடவடிக்கைகளுக்கு கடன் பெற்றுள்ள விவசாயிகள் செலுத்த வேண்டிய வட்டியை முழுமையாக இல்லாது செய்வதாகவும், வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இந்த நிவாரணம் சென்றடையும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அத்துடன் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க 1000 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கவும் ஜனாதிபதி யோசனை முன்வைத்துள்ளார்.,

### பாதுகாப்புப் பிரிவு வீட்டுக்கடனுக்கு 1000 மில்லியன்

பாதுகாப்புப் பிரிவுகளில் பணிபுரியும் நபர்களின் குடும்பங்களுக்கு 3 வருடங்கள் செல்லுபடியாகும் வகையில் நிவாரண வீட்டுக் கடன் வசதிகளை செய்து கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அதற்கென 2013 வரவு-செலவு திட்டத்தில் 1000 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்வதாக ஜனாதிபதி குறிப்பிட்டார்.

### பொலிஸ் துறைக்கு 950 மில்லியன்

பொலிஸ் துறையில் அபிவிருத்தித் திட்டங்கள் செயற்படுத்த 950 மில்லியன் ரூபாயினை ஒதுக்கவும் பொலிஸ் கொடுப்பனவு தொடர்பில் சம்பள சபை முன்வைத்த கோரிக்கையை அமுல்படுத்தவும் ஜனாதிபதி யோசனை முன்வைத்துள்ளார்.

### குடிநீர் வசதிக்கு 126 பில்லியன்

5 இலட்சத்து 80 ஆயிரம் பேருக்கு குடிநீர் வசதிகளை பெற்றுக் கொடுக்க நாடு முழுவதும் பல திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ள நிலையில் அதற்கென 2013-ம் ஆண்டில் 126 பில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### இறக்குமதி பால்மா வகைகளின் வரி அதிகரிப்பு

உள்நாட்டு பால் மற்றும் பால்மா உற்பத்தியை அதிகரிக்கவென இறக்குமதி செய்யப்படும் பால் மா வகைகளுக்கான வரி மேலும் அதிகரிக்கப்படும்.

உள்நாட்டு பால் பண்ணையாளர்களின் பால் ஒரு லீட்டர் குறைந்தது 50 ரூபாவிற்கு கொள்வனவு செய்யப்பட வேண்டும் என ஜனாதிபதி குறிப்பிட்டார்.

### ஓட்டப்பந்தய வாகனங்களுக்கான இறக்குமதி வரி இரத்து

ஓட்டப்பந்தயத்திற்கென இறக்குமதி செய்யப்படும் அனைத்து வாகனங்களினதும் இறக்குமதி வரியை இரத்துச் செய்வதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

### கஷ்டப் பிரதேச மாணவர்களுக்கு மேலதிக சீருடை, பாதணிகள் வழங்கப்படும்

கஷ்டப் பிரதேசங்களில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு பாதணிகள் இலவசமாக வழங்கப்படும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது வரவு-செலவு திட்ட உரையில் தெரிவித்தார்.

மாணவர்களுக்கு பாடசாலைச் சீருடை வழங்க வருட மத்தியில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

### வெளிநாட்டவர்களுக்கு காணிகள் விற்க முற்றாகத்தடை

இலங்கையில் வெளிநாட்டவர்களுக்கு காணிகளை விற்பனை செய்வது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளதாகவும் குத்தகை அடிப்படையில் வழங்கினால் 100க்கு நூறு வீத விலை அறவிடப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சுகாதாரத்துறைக்கு 125 பில்லியன்

நாட்டில் முறையான சுகாதார சேவைகளை வழங்குவதற்கு 2013 நிதியாண்டில் 125 பில்லியன் ரூபாய் நிதி ஒதுக்க ஜனாதிபதி யோசனை முன்வைத்துள்ளார்.

### கல்வித்துறைக்கான செலவு நூற்றுக்கு 15 வீதம் அதிகரிப்பு

இலவசக் கல்வித்துறை அபிவிருத்திக்கென 2013-ம் வரவு-செலவு திட்டத்தில் கடந்த வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியை விட நூற்றுக்கு 15 வீதம் அதிகரிப்பதாக ஜனாதிபதி யோசனை முன்வைத்துள்ளார்.

அதன்படி கல்வித்துறைக்கு 306 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் மொத்த தேசிய உற்பத்தியில் அது 4.1வீத ஒதுக்கீடாகும்.

### ஊடகவியலாளர்கள், கலைஞர்களுக்கு 200 மில்லியன்

ஊடகவியலாளர்கள் மற்றும் கலைஞர்களுக்கு கடந்த வரவு செலவுத் திட்டத்தில் வாகனம் கொள்வனவு செய்ய வட்டியில்லாக் கடன் வழங்கப்பட்டது. இம்முறை அத்திட்டத்திற்கு மேலும் 200 மில்லியன் ரூபாயினை ஒதுக்க ஜனாதிபதி யோசனை முன்வைத்துள்ளார்.

### வாகன இறக்குமதி வரி 10 முதல் 20 வீதம் அதிகரிப்பு

இறக்குமதி செய்யப்படும் வாகனங்களுக்கான இறக்குமதி வரி 10 முதல் 20 வீதம் வரை அதிகரிக்கப்படும் என ஜனாதிபதி யோசனை முன்வைத்துள்ளார்.

### மதுபான இறக்குமதித் தீர்வை வரி 25 வீதத்தினால் அதிகரிப்பு

வெளிநாட்டு மதுபான இறக்குமதித் தீர்வை வரி 25 சதவீதமாக அதிகரிக்கப்படும் என ஜனாதிபதி யோசனை முன்வைத்துள்ளார்.

### அரச ஊழியர்களுக்கு 1500 ரூபாய் அதிகரிப்பு

அரச ஊழியர்களுக்கான கொடுப்பனவை 1500 ரூபாயால் அதிகரிக்க ஜனாதிபதி வரவு செலவுத்திட்டத்தில் யோசனை முன்வைத்துள்ளார்.

அத்துடன் அரச மற்றும் தனியார் ஊழியர்களின் சம்பள நிலை குறித்து ஆராய்வதற்கு புதிய சம்பள ஆணைக்குழு ஒன்றை அமைக்கவும் ஜனாதிபதி யோசனை முன்வைத்துள்ளார்.

### 65 வயதுக்கும் மேற்பட்ட வேலையற்றோருக்கு மாதாந்தம் 5000 ரூபாய் வழங்கப்படும்

65 வயதிற்கு மேற்பட்ட நிலையில் தொழில் இன்றி இருப்போருக்கு மாதாந்தம் 5000 ரூபாய் கொடுப்பனவு வழங்கப்படும் என வரவு-செலவு திட்ட உரையில் ஜனாதிபதி யோசனை முன்வைத்துள்ளார். (ந-11)

## உலக உளநல நாள் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

உலக உளநல நாள் நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள கலைத்தூது மண்டபத்தில் பிற்பகல் 2 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைத்துறை பீடாதிபதி பேராசிரியர் வி.பி.சிவநாதன் கலந்து கொள்ளவுள்ளார். (ந-11)

---

## பழந்தமிழர் இயக்கம்

பழந்தமிழர் இயக்கத்தின் முதலாவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி நடாத்தப்படும்

### பேராளர் மாநாடு

**காலம்:** 11.11.2012 அன்று ஞாயிற்றுக் கிழமை பி.ப.5.30 மணி
**இடம்:** சொர்ணாம்பிகை மண்டபம் (TCT), நாவலர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். (நாவலர் கலாசார மண்டபத்திற்கு முன்பாக)

**தலைவர்**
திரு.ம.வித்தியானந்தநேசன்
(மாவட்டப் புள்ளிவிபரவியலாளர், மாவட்ட செயலகம், மன்னார்.)
நிறுவுனர், பழந்தமிழர் இயக்கம்.

**பிரதம அதிதி**
பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
(முன்னாள் துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்)

**கௌரவ விருந்தினர்**
பேராசிரியர் செ.இளங்குமரன்
(தலைவர், பொருளியல் துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

**பேராளர்கள்**
- பேராசிரியர் V.K.கணேசலிங்கம் (தலைவர், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ்.மாவட்டம்)
- பேராசிரியர் S. சிவலிங்கராசா (தமிழ்த்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
- பேராசிரியர் A.N.கிருஷ்ணவேணி (தலைவர், நுண்கலைத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
- திருமதி மீரா அருள்நேசன் (உதவிக் கல்விப் பணிப்பாளர் -தமிழ்ப் பிரிவு, யாழ்.கல்வி வலயம்)

**வரவேற்புரை**
திருமதி இராமலிங்கம் இராகினி
(கிராம உத்தியோகத்தர்-நல்லூர் தெற்கு)

**நன்றியுரை**
அருட்திரு V.P.தனேந்திரா
(ஆசிரியர், பரியோவான் கல்லூரி)

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

(930) பழந்தமிழர் இயக்கம்

---

## அங்கத்துவத்தை உறுதிப்படுத்தல்


முல்லை வடக்கு பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு சங்கம் **வலையன்மடம் -முள்ளிவாய்க்கால்** என்னும் முகவரியில் இயங்கும்போது கடந்த காலத்தில் அங்கத்தவர்களாக இணைந்து தொழில் புரிந்து இடம்பெயர்வு காரணமாக இடம் பெயர்ந்து தற்போது மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளவர்கள் எதிர்வரும் 2013-ம் ஆண்டு தொழில் புரியவுள்ள அங்கத்தவர்கள் தங்கள் விண்ணப்பங்களை **2012.11.15-ம்** திகதிக்கு வட்டுவாகலில் உள்ள எமது தலைமைக் காரியாலயத்தில் நேரில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**தலைவர்**
**மு.வ.ப.தெ.வ.அ.கூ.சங்கம்**
**வட்டுவாகல்**
**முல்லைத்தீவு.** (925)

---

## மரண அறிவித்தல்

### கிழக்கர் அம்பலவாணர் திருஞானசம்பந்தன்



காரைநகர் கோவளத்தைப் பிறப்பிடமாகவும் இல.31, மணல்தரை லேன், கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் திருஞானசம்பந்தன் நேற்று (08.11.2012) வியாழக்கிழமை சிவபதமடைந்தார். அன்னாரின் இறுதி கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


31, மணல்தரை லேன்,
கந்தர்மடம். (929)

*தகவல்:*
குடும்பத்தினர்

---

## கண்ணீர் அஞ்சலி

### கிழக்கர் அம்பலவாணர் திருஞானசம்பந்தன்



காரைநகர் கோவளத்தைப் பிறப்பிடமாகவும் இல.31, மணல்தரை லேன், கந்தர்மடத்தைவசிப்பிடமாகவும் கொண்ட கிழக்கர்அம்பலவாணர்திருஞானசம்பந்தன் அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும்குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

- ஊழியர்கள்
கஜமுகன் ஹாட்வெயர்
147,149, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
இ.[illegible] சக நிறுவனம்
[illegible] வீதி, யாழ்ப்பாணம்.


- தபால் மூலம் -

## ஆறு மாத கால டிப்ளோமா

**Course Length - Six Month**

24

**Nov 2012-Apr 2013**

*தமிழ் மொழி மூலம்*

| | |
|---|---|
| Dip. in Psychology | - உளவியல் டிப்ளோமா |
| Dip. in Office Administration | - காரியாலய நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Human Resources Management | - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Civil Engineering | - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா |
| Dip. in Business Management | - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Banking Management | - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Sales & Marketing Management | - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி. |
| Dip. in Health & Hospital Management | - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி. |
| Dip. in Nursing Administration | - தாதியர் நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Educational Management | - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Montessori | - மொண்டிசூரி டிப்ளோமா |

**கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்**

• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம் • வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு • ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

**Mobile: 0777 140 844, 071 803 48 48**

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator
**MARUTHUR . A. HASSEN**
*(B.Sc. Psychology, M.Sc. Psychology)*

**ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES**
24, 1ST FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 28.11.2012



**செல்லா சினிமா- யாழ்ப்பாணம்**




10.30
2.30
6.30

30.10.2012 முதல் A/C
ஆசிரியர், மாணவர்களுக்கு விசேட சலுகைக் கட்டணம்
D.T.S


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## மனநலம்

''நலம்- நலமறிய ஆவல்'' என்று கடிதங்களிலே எழுதுவது நமது வழக்கம்.

சுகம் எப்படி? என்ற அர்த்தத்திலேயேதான் நாம் அப்படி எழுதுகின்றோம்.

மனம் நன்றாக உள்ளதா என்று யாரையும் பார்த்து நாம் கேட்பதில்லை. அப்படி கேட்டாலும் சந்தேகப்படுவார்கள்.

உடல் நலமாக இருந்தால், மனம் சந்தோசமாக இருக்கும். உடலை கவனமாக வைத்துக்கொள்ள வேண்டும் என்பது பற்றி எல்லோருக்கும் நன்றாகத் தெரியும்.

மனதை எப்படி நன்றாக வைத்துக்கொள்வது என்பதைப் பற்றியும் தெரியும்.

ஆனால், நாம் ''யார்'' என்பது பற்றி நன்றாகத் தெரிய வேண்டும். அதைப்பற்றிய அறிவு நமக்குத் தேவை.

நமது பலம், பலவீன்ம் என்ன என்பது நமக்குத் தெரிய வேண்டும்.

நமது பலவீனங்களால் எதை எதையெல்லாம் நீக்க முடியுமோ அவற்றையெல்லாம் நீக்கிக் கொள்ள வேண்டும்.

நமது பலம் அறிந்தால், அதை விருத்தி செய்ய வேண்டும்.

இரண்டாவது விடயம் என்னவென்றால்...

யாரையாவது பார்த்துவிட்டு அவர் மாதிரி நாம் மாற வேண்டும் என்று ஆசைப்படக்கூடாது.

நாம் நாமாகத்தான் இருக்க வேண்டுமே தவிர இன்னொருவர் மாதிரி ஆகக்கூடாது.

திறமைகளை நான்கு வகையாகப் பிரிக்கலாம்.

அதில் நமக்குத் தெரிந்த திறமைகள் ஒரு வகை; மற்றையவர்களுக்குத் தெரிந்த திறமைகள் ஒரு வகை.

நமக்கு மட்டும் தெரிந்து மற்றவர்களுக்குத் தெரியாத திறமைகள் ஒருவகை.

இரண்டு பேருக்கும் தெரியாத திறமைகள் ஒருவகை.

இப்படியாகப் பிரித்துப் பார்த்து நமது திறமைகளைக் கண்டுபிடித்து வளர்த்துக் கொள்ள வேண்டும்.

அடைய முடியாத இலட்சியங்களை இலக்குகளாக வைத்து அதை அடைய வேண்டுமென்று நினைத்து துன்பப்பட்டுக் கொண்டு இருக்கக்கூடாது. அது மனதை நிம்மதி இல்லாமல் செய்து விடும்.

சிறந்த நண்பர்களையும் தேர்ந்தெடுக்க வேண்டும். பிரச்சினைகளையும் போராட்டங்களையும் கண்டு பயப்படக்கூடாது. அதையெல்லாம் எதிர்த்து சமாளிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்.

நீங்கள் செய்யும் தொழிலின் திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும். அத்துடன் சூழ்நிலைக்குத் தகுந்த மாதிரி எம்மை மாற்றிக் கொள்ள வேண்டும்.

இவற்றையெல்லாம் பழக்கத்தில் வைத்துக் கொண்டால் மனம் எப்போதுமே தெளிவாக இருக்கும்.

உணர்வுகளை மறைத்து வைப்பது; மனப்போராட்டங்களை அடக்கிக் கொள்வது; இவையெல்லாம் மனநலத்தைப் பாதிக்கக்கூடிய விடயங்களாகும்.

ஆதலால், மனதிற்கு இதமான ஒரு நண்பரைத் தேடிக்கொள்வது நல்லது. அவரிடம் உங்களின் மனச்சுமையை சொல்லுங்கள். அப்படிச் சொன்னாலும் உங்கள் சுமை குறையும்.

இப்படியெல்லாம் நிபுணர்கள் நமக்கு போதிய யோசனை சொல்கிறார்கள். அதனால் மனதையும் உடம்பையும் சிறப்பாக வைத்துக் கொண்டால் வாழ்க்கை நமக்கு உற்சாகமாக இருக்கும். இல்லாவிடின், அது உபத்திரவமாகத்தான் தெரியும்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# அடிப்படை வசதிகளை செய்து தருமாறு மாதகல் மேற்கு மக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

மீள்குடியேற அனுமதிக்கப்பட்ட மக்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை என குற்றம் சாட்டப்பட்டுள்ளதோடு பற்றைகளை அகற்றி மீள்குடியேற்றத்தை விரைவுபடுத்துமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட மாதகல் மேற்கில் 20 வருடங்களின் பின்பு அண்மையில் மக்கள் மீள்குடியேற அனுமதிக்கப்பட்டனர். இதேபோன்று சங்கானை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பொன்னாலை மேற்கு, சுழிபுரம் மேற்கு, சுழிபுரம் கிழக்கு ஆகிய இடங்களில் 22 வருடங்களின் பின்னர் மக்கள் மீள்குடியேற அனுமதிக்கப்பட்டனர்.

கடற்படையினரின் கட்டுப்பாட்டிற்குள்ளிருந்த இந்தப் பகுதிகளில் மக்கள் மீள்குடியேறுவது சாத்தியமற்ற விடயமாக காணப்பட்ட போதும் மக்களின் தொடர் போராட்டங்களினால் மீள்குடியேற அனுமதி கிடைத்தது.

இருப்பினும் மீள்குடியேறுவதற்கான அடிப்படை வசதிகள் இந்தப் பகுதி மக்களுக்கு செய்து கொடுக்கப்படவில்லை.

சுமார் 20 வருடங்களின் பின்பு தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிய மக்களுக்கு மீள்குடியேற்றத்தை துரிதப்படுத்த முடியவில்லை.

யுத்தத்தினாலும் நீண்ட காலமாக கைவிடப்பட்ட நிலையிலிருந்ததனாலும் வீடுகள், ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் எல்லாம் சீர்குலைந்துள்ளன.

எனவே, மீள்குடியேற்றத்தினை விரைவுபடுத்தும் வகையில் அடிப்படை வசதிகளை செய்து கொடுப்பதோடு பற்றைகளை துப்புரவு செய்வதற்கும் வீதிகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்வதற்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மேற்குறிப்பிடப்பட்ட பகுதிகளில் மீள்குடியேற அனுமதிக்கப்பட்டுள்ள மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-6)

# சிறுவர்களுக்காக சமூக ஒருமைப்பாட்டு நிகழ்வு

(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகமும் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சும் இணைந்து புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் போரினாலும் இயற்கை அனர்த்தத்தினாலும் தாய், தந்தையை இழந்த சிறுவர்களுக்கான ஒருநாள் சமூக ஒருமைப்பாட்டு நிகழ்ச்சியை இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணி வரை புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் நடத்தவுள்ளது.

6 வயது தொடக்கம் 13 வயதுக்குட்பட்ட 150 சிறுவர்களுக்கு கற்றல் உபகரணம் வழங்கல், மகிழ்வூட்டும் நிகழ்ச்சிகள், விழிப்புணர்வு நிகழ்வுகள் என்பன நடைபெறவுள்ளது என புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் அறிவித்துள்ளது. (அ-3-265)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 130 | 140 |
| உருளைக்கிழங்கு | 100-140 | 120 | 105 |
| பச்சைமிளகாய் | 100 | 90 | 130 |
| தக்காளி | 90 | 60 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 40 |
| கோவா | 90 | 70 | 110 |
| கரட் | 120 | 80 | 180 |
| பூசணி | 60 | 35 | 60 |
| புடோல் | 100 | 60 | 120 |
| வாழைக்காய் | 60 | 50 | 80 |
| சின்ன வெங்காயம் | 70 | 50 | 80 |
| பெரிய வெங்காயம் | 50 | 80 | 80 |
| பாகற்காய் | 250 | 180 | 140 |
| வெண்டிக்காய் | 100 | 50 | 80 |
| கருணைக் கிழங்கு | 50 | 60 | 80 |
| பயற்றங்காய் | 140 | 100 | 140 |
| லீக்ஸ் | 80 | 80 | 100 |
| பீற்றூட் | 40 | 40 | 90 |
| கறிமிளகாய் | 150 | 100 | 200 |
| முருங்கைக்காய் | 100 | 50 | 80 |
| போஞ்சி | 240 | 70 | 240 |
| கத்தரிதம்புள்ள | 200 | 90 | -- |
| கீரை - பிடி | 20 | 20 | 30 |
| தேசிக்காய் | 200 | 220 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 32 | 30-35 |

# இராசி பலன்

09.11.2012
(ஐப்பசி 24, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.06மணிக்கு
தசமி பிற்பகல் 1.51 மணிவரை
பூரம் முன்னிரவு 7.42 மணிவரை
இராகுகாலம் 10.36-12.06 மணிவரை
சுபநேரம் 6.06-7.36 மணிவரை

**மேடம்** சுயமுயற்சிகள் மூலம் சுகம் காணும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், வருங்கால நலன் கருதி சேமிக்க நினைப்பீர்கள்.

**இடபம்** பணிபுரியும் இடத்தில் பெயரும் புகழும் கூடும், தெய்வீக சிந்தனை மேலோங்கும், வாகன யோகத்தால் வளம் காணும் நாள், எந்தக் காரியத்தையும் எளிதில் செய்து முடிப்பீர்கள்.

**மிதுனம்** பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், சகோதர ஒத்துழைப்பால் பாகப் பிரிவினைகள் சுமுகமாக முடியும், வம்பு வழக்குகளை சமாளித்து வளம் காணும் நாள்.

**கடகம்** பணத்தேவைகள் பூர்த்தியாகும் நாள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தூர தேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், கொடுத்த வாக்கை காப்பாற்றும் எண்ணம் மேலோங்கும்.

**சிங்கம்** வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், குடும்பத்தில் சுமைகளும் பொறுப்புகளும் கூடும், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**கன்னி** விரதங்களில் நம்பிக்கை கூடும் நாள், சுப நிகழ்வுக்காக ஒரு தொகையைச் செலவிடும் சூழ்நிலை உருவாகும், குடும்பத்தில் அனைவரையும் அனுசரித்துச் செல்வதன்மூலம் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**துலாம்** வருமானம் அதிகரித்து மனநிறைவு காணும் நாள், ஆலய வழிபாட்டில் ஈடுபாடு காட்டுவீர்கள், ஆடம்பரப் பொருட்கள் வாங்கும் எண்ணம் உருவாகும், பயணங்களால் பலனுண்டு.

**விருச்சிகம்** அந்நியர் உதவியுண்டு, எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், பாதியில் நின்ற பணியை மீதியும் செய்து முடிப்பீர்கள், தொழில் வளர்ச்சி மேலோங்கும்.

**தனுசு** தொழில் ரீதியாக முக்கிய புள்ளிகளைச் சந்தித்து முடிவெடுப்பீர்கள், மருத்துவச் செலவுகள் குறைந்து மனநிம்மதியைக் கொடுக்கும், பயணங்களால் பலனுண்டு, சொத்து பிரச்சினைகள் சுமுகமாக முடியும்.

**மகரம்** உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், தொழிலில் கவனத்துடன் செயற்படுவது நல்லது, வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், போசன சுகமுண்டு.

**கும்பம்** இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், விட்டுச் சென்ற உறவுகள் விரும்பி வந்து சேரும் நாள், ஆலய வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழில் வாய்ப்புகள் தேடி வரலாம்.

**மீனம்** அலுவலகப் பணிகள் துரிதமாகும், நல்லவர்கள் தொடர்பால் நன்மைகள் நடைபெறலாம், ஆன்மீக சிந்தனை மேலோங்கும், போசன சுகமுண்டு, ஆரோக்கியம் சீராகும்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிணற்றுக்குள் தவறி வீழ்ந்து முதியவர் பலி


(யாழ்ப்பாணம்)

முகம் கழுவுவதற்காக வீட்டுக்கிணற்றில் தண்ணீர் அள்ளிய முதியவர் கிணற்றுக்குள் தவறி வீழ்ந்ததில் உயிரிழந்துள்ளார். இச் சம்பவம் நேற்று அதிகாலை 5 மணியளவில் சங்குவேலி தெற்கு மானிப்பாய் பகுதியிலுள்ள வீடொன்றில் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே இடத்தினைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான கந்தையா தவராசா (வயது 65) என்னும் முதியவரே உயிரிழந்தவராவார். சம்பவ தினமன்று முதியவர் அதிகாலை வேளை எழுந்து முகம் கழுவுவதற்காக கிணற்றடிக்கு சென்றுள்ளார்.

எனினும் நீண்ட நேரமாக தமது தந்தையை காணாத பிள்ளைகள் அவரைத் தேடியுள்ளனர். பின்னர் காலை 8 மணியளவில் தமது தந்தை கிணற்றுக்குள் சடலமாக இருப்பதனை கண்டு அயலவர்களின் உதவியுடன் அவரின் சடலத்தை மீட்டுள்ளனர்.

சடலம் பொலிஸாரின் உதவியுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதே வேளை, மழை காலம் ஆரம்பித்து மிகவும் குறுகிய காலப்பகுதிக்குள் 6 சிறுவர்களும் முதியவரொருவரும் இவ்வாறு கிணற்றுக்குள் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-4)




நன்றி:-அததெரண

# யாழ்.போதனாவில் 3 பேருக்கு டெங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்றைய தினமும் டெங்கு காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட நிலையில் மூவர் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் இருவர் சங்கானையினை சேர்ந்தவர்கள் எனவும் ஒருவர் ஆனைக்கோட்டையினை சேர்ந்தரென்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இம் மாதத்தில் மட்டும் 45 பேர் டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளதோடு இவ் வருடத்தில் மட்டும் 408 பேர் டெங்கு காய்ச்சலினால் பீடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-4)

# அடகு நகைகளை மீட்பதற்குச் சென்ற பெண்ணிடம் 40 ஆயிரம் ரூபா பணம் திருட்டு

(யாழ்ப்பாணம்)

தனது தங்க நகைகளை அடகு மீட்பதற்காக பணத்துடன் தனியார் பேருந்தில் பயணித்த குடும்பப் பெண் கொண்டு சென்ற பணத்தையும் அவரது குழந்தையின் தங்க காப்புக்களையும் பறிகொடுத்த பரிதாபச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் நேற்று முற்பகல் 11.30 மணியுளவில் யாழிலிருந்து கச்சேரி நோக்கி சென்று கொண்டிருந்த தனியார் பேருந்தொன்றிலேயே இடம்பெற்றுள்ளது. இதில் மண்டதீவைச் சேர்ந்த குடும்பப்பெண்ணொருவரின் ஒரு இலட்சத்து 80 ஆயிரம் பெறுமதியுடைய தங்கக் காப்புகளும் 40 ஆயிரம் ரூபா பணமுமே திருடப்பட்டுள்ளது.

வேம்படிச் சந்தியிலுள்ள இலங்கை வங்கியில் தனது அடகு நகைகளை மீட்பதற்காக மண்டைதீவிலிருந்து யாழ்.நோக்கி புறப்பட்ட குறித்த பெண்மணி யாழ்.பேருந்து நிலையத்தில் வந்திறங்கியுள்ளார்.

கைக்குழந்தையுடன் வந்தமையால் அருகிலுள்ள குறித்த வங்கிக்கு நடந்து செல்லாமல் கச்சேரி நோக்கி சென்ற தனியார் பேருந்தில் ஏறி வேம்படிச் சந்தியில் இறங்குவதற்கு தீர்மானித்துள்ளார்.

எனினும் குறித்த பேருந்து அரைவாசித் தூரம் அதாவது இருநூறு மீற்றர் தூரத்தினை கடப்பதற்குள் குறித்த பெண்ணின் கைப்பை திருட்டுப் போயுள்ளது. அதில் தனது குழந்தையின் காப்பு இரண்டினை பாதுகாப்புக்காக கழற்றி வைத்திருந்ததோடு 40 ஆயிரம் பணமும் இருந்ததாகவும் யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளார்.

இதேவேளை, அண்மைக்காலமாக தனியார் பேருந்தில் காணப்படும் சனநெரிசலினை பயன்படுத்தி பல திருட்டுக்கள் இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

தற்போது தீபாவளி கொண்டாட்டம் ஆரம்பித்துள்ளதால் இவ்வாறான திருட்டுக்கள் அதிகம் இடம்பெறும் என பொலிஸார் தெரிவித்தனர். (அ-4)

# அடையாள அட்டை கண்டெடுப்பு

சுன்னாகம் தெற்கு பெரிய மதவடியைச் சேர்ந்த திருச்செல்வம் மோகனராஜ் (822 885012V) என்பவரது தேசிய அடை யாள அட்டை கண்டெடுக்கப்பட்டு வலம்புரிக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர் ஆதாரம் காட்டி அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ள முடியும். (அ-9)



யாழ்.பொலிஸ் நிலையத்திற்கான புதிய கட்டடம் அமைக்கும் பணிகள் யாழ். துரையப்பா விளையாட்டரங்கின் முன்னால் இடம்பெற்றுக் கொண்டிருப்பதை படத்தில் காணலாம்.

(படம்:- உ.சாளீன்)




# மதிப்பீட்டு மாதிரி பயிற்சி பரீட்சை

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளில் தரம் 6 மாணவர்களுக்கான கணித பாட மதிப்பீட்டு மாதிரிப் பயிற்சி பரீட்சை இலக்கம் 10 இன்று வெள்ளிக்கிழமை சகல பாடசாலைகளிலும் நடைபெறவுள்ளது.

வழங்கப்படவுள்ள புள்ளித்தாளில் மதிப்பீடு இலக்கம் 10 வரையிலான புள்ளிகளைப் பதிந்து எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு முன்னர் சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (அ-3-29)

# மாணவி கொலை வழக்கில் சந்தேக நபர்களுக்கு பிணை

வடமராட்சி சக்கோட்டை றோமன் கத்தோலிக்கதமிழ்க்கலவன் பாடசாலை மாணவி இருதயநாதன் மேரி டிலக்சனா (வயது 17) கொலையுடன் தொடர்புடைய இரு சந்தேக நபர்களுக்கு யாழ்.மேல் நீதிமன்றம் நேற்று முன்தினம் பிணை வழங்கியுள்ளது.

பருத்தித்துறை சக்கோட்டை பகுதியில் கடந்த ஜனவரி மாதம் குறித்த மாணவி வீட்டுக்கு அருகில் வைத்து இரவு பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட பின் கொலை செய்யப்பட்டு அருகில் ஆட்கள் இல்லாத வீட்டில் போடப்பட்டிருந்தார்.

சம்பவத்தில் அப்பகுதியை சேர்ந்த இரு சந்தேக நபர்களான காணிக்கைதாஸ், ஜெயறூபன் ஆகிய இருவரையும் பருத்தித்துறை பொலிஸார் கைது செய்து பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தினர்.

இரு சந்தேக நபர்களும் இதுவரை காலமும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் இரு சந்தேக நபர்களும் தமது சட்டத்தரணி ஊடாக பிணை மனு கோரியிருந்த நிலையில் இவ்வழக்கு விசாரணை நேற்று முன்தினம் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி ஜெ.விஸ்வநாதன் முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிணை மனுவை பரிசீலித்த நீதிபதி குறித்த இரு சந்தேக நபர்களையும் தலா 50 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் தலா 2 இலட்சம் ரூபா ஆட்பிணையிலும் செல்லுமாறும் ஒவ்வொருநாளும் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்பமிடுமாறு கடும் நிபந்தனையில் பிணை மனு வழங்கினார். (அ-3-24)

# கத்தோலிக்க ஆலயங்களில் பரவலாக சுருபங்கள் திருட்டு

(மிருசுவில்)

மிருசுவில் பங்கு எல்லைக்குள் உள்ள சில கத்தோலிக்க ஆலயங்களில் கடந்த வாரத்தில் சில திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

மிருசுவில் பங்கு எல்லைக்குள் உள்ள கிளாலிப் பங்கும் கடந்த போரினால் மிகவும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஒன்றாகும். அந்தப் பகுதியில் இருந்த ஆலயங்கள் முழுவதும் முழுமையாகச் சேதமாக்கப்பட்டுள்ளமை அனைவரும் அறிந்ததே.

அப்பகுதியில் வாழ்ந்த மக்கள் இடம் பெயரும்போது தமது ஆலயங்களில் இருந்த வணக்கத்துக்குரிய திருச்சுருபங்கள் அழிந்து விடக்கூடாது என்பதற்காக அவற்றை தம்முடனே எடுத்து வந்து தாம் வாழ்ந்த பகுதிகளில் பாதுகாத்து வந்துள்ளனர்.

தற்போது இப்பகுதியில் மீள்குடியேற்றம் இடம்பெற்ற பின்பு இறை மக்கள் ஆலயங்களை ஓரளவு புனரமைத்து அந்த வணக்கத்துக்குரிய திருச்சுருபங்கள் மீட்டும் ஆலயத்தினுள் வைத்து வணக்கங்களை செலுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் அண்மையில் கிளாலி புனித அந்தோனியார் ஆலயத்தில் அந்தோனியார் திருச்சுருபமும் புனித யாகப்பர் ஆலயத்தில் யாகப்பர் திருச்சுருபமும் களவாடப்பட்டுள்ளன.

மேலும் இப் பங்கு எல்லைக்குள் அமைந்துள்ள கொடிகாமம் கச்சாய் புனித இராயப்பர் ஆலய அறைகள் உடைக்கப்பட்டு அங்கிருந்த அனைத்துப் பொருட்களும் சேதமாக்கப்பட்டுள்ளதுடன் ஆலய வழிபாட்டுத் தேவைக்கு பயன்படுத்தப்படும் ஒலிபெருக்கியுடன் வேறு சில பொருட்களும் களவாடப்பட்டுள்ளன. மேற்படி திருட்டுச் சம்பவங்கள் பற்றி பளை, கொடிகாமம் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் செய்யப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (அ)

# அபிவிருத்திக் கூட்டமும் ஆளுநர் சபைக்கூட்டமும்

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் அபிவிருத்திக்கூட்டமும் ஆளுநர் சபைக்கூட்டமும் நாளை சனிக்கிழமை முறையே முற்பகல் 9.30 மணிக்கும் 11.30 மணிக்கும் யாழ்.கிளை தலைமையகத்தில் நடைபெறவுள்ளது.

இதில் வீடமைப்புத்திட்டம், நன்னீர், சுகாதாரத்திட்டங்கள், நடமாடும் வைத்திய சேவை, முதலுதவி ஆகிய விடயம் தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளன.

எனவே, இக்கூட்டத்திற்கு உறுப்பினர்களை தவறாது சமூகம் தரும்படி இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.கிளைத் தலைவர் பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம் கேட்டுள்ளார். (அ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தட்டுவன்கொட்டி பொதுநோக்கு மண்டபம் புனரமைக்கப்படவில்லை

## மக்கள் குற்றச்சாட்டு

(ஆனையிறவு)

தட்டுவன் கொட்டி கிராமத்தில் உள்ள பொது நோக்கு மண்டபம் புனரமைக்கப்படாமையால் மக்கள் பயன்படுத்த முடியாது சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

கடந்த 2004 ஆம் ஆண்டு ஜி.ரி.இசற் நிறுவனத்தினால் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இப்பொது நோக்குமண்டபம் யுத்தத்தால் சேதமடைந்துள்ளது.

இப்பொதுநோக்கு மண்டபத்திலேயே முன்பள்ளி இயங்கி வருகின்றமையால் சிறார்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஏனைய பொது நோக்கு மண்டபங்கள் புனரமைக்கப்பட்ட போதிலும் இப்பொது நோக்கு மண்டபம் மட்டும் புனரமைக்கப்படாதுள்ளது.

எனவே உரிய தரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-264)

# கலைப் பாடநெறிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்திய துணைத்தூதரகமானது தூதரக வளாகத்தில் அமைந்துள்ள **இந்திய கார்னர்** இல் கலை ஆர்வமுள்ள மாணவர்களுக்கான பாடநெறிகளை ஆரம்பிக்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

பரத நாட்டியம்,கர்நாடக இசைசங்கீதம், இசைக் கருவிகள் (மிருதங்கம்,வீணை, வயலின், புல்லாங்குழல்), யோகா,ஹிந்தி ஆகிய பாடநெறிகளே ஆரம்பமாகவுள்ளது. இப்பாடநெறிகளில் இணைந்து கொள்ள விரும்புபவர்கள்

பெயர் மற்றும் வயது,

இணையவுள்ள பாடநெறி (ஒன்றுக்கு மேற்பட்ட பாடநெறிகளை தெரிவு செய்ய முடியும்),

பயிற்சிகளுக்கு, வாரநாட்களில் மாலை 5 மணியிலிருந்து 7 மணி வரை சமுகமளிக்க கூடியதாக இருக்க வேண்டும்,

பயிற்சிகளுக்கு, வாரஇறுதி நாட்களில் பகற்பொழுதில் சமுகமளிக்க கூடியதாக இருக்க வேண்டும்,

பாடநெறிகளுக்கான பதிவுக்கட்டணம் செலுத்த முடியுமா? (ஆம்/இல்லை)

தங்களுக்கான இசைக்கருவியை எடுத்து வர முடியுமா?, மேலதிக தொடர்புகளுக்கான உங்கள் மின்னஞ்சல் முகவரி என்பவற்றைக் குறிப்பிட்டு நாளை சனிக்கிழமைக்கு முன்னதாக Cul.jaffna@mea.gov.in எனும் மின்னஞ்சல் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பிவைக்கமுடியும்.

இப்பயிற்சி நெறிகள் அனைத்தும் இந்திய துணைத்தூதரகம், இல 14, மருதடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் நவம்பர்- டிசெம்பர் மாத பகுதியில் ஆரம்பிக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-9)

# திவிநெகும சட்டமூல தீர்ப்பினால் ஷிராணியை பழிவாங்க அரசு முனைப்பு

## அவரை காப்பாற்றக் கோருகிறார் விக்கிரமபாகு

(கொழும்பு)

இலங்கை அரசின் பழிவாங்கலுக்குள் சிக்கியுள்ள பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவின் முதுகில் குற்றவியல் பிரேரணையிலிருந்து அவரைக் காப்பாற்ற மக்கள் அனைவரும் அணிதிரள வேண்டும் என்று புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற எதிர்க்கட்சிகளின் ஒன்றிணைந்த செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், ஏழை மக்களின் பணத்தை சூறையாட நினைக்கும் அரசின் திவிநெகும சட்டமூல நிறைவேற்று முயற்சி நீதிமன்ற தீர்ப்பினால் நிர்மூலமாக்கப்பட்டுள்ளது. இது இந்த முழுநாட்டுக்கும் கிடைத்த வெற்றியாகவே கருத வேண்டும்.

இந்த திவிநெகும சட்டமூலத்துக்கு எதிராக பிரதம நீதியரசர் கொடுத்த தீர்ப்பினால் இந்த அரசாங்கம் கடும் கோபத்துக்கு ஆளாகியுள்ளது. இதனால் அவரைப் பழிவாங்கும் வகையிலேயே குற்றப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை மக்கள் ஆணைக்கு எதிரானதாகும். பிரதம நீதியரசரின் முதுகில் ஏற்பட்டுள்ள குற்றவியல் பிரேரணையிலிருந்துமீட்டு அவரைக் காப்பாற்றும் பொறுப்பு மக்களுக்குரியது. அதற்காக மக்கள் அனைவரும் அணிதிரள வேண்டும் என்றார். (அ-2)

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யா/ உடுப்பிட்டி கம்பர்மலை வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் வித்தியாலய அதிபர் க.சிறிச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இப்பொதுக்கூட்டத்தில் வித்தியாலயத்தின் பழைய மாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகளை கலந்து கொள்ளுமாறு அதிபர் கேட்டுள்ளார். (அ-9)


**Cambridge Management College**

வெளிநாடு செல்ல விரும்புபவர்களுக்கு French, Doutch, ஆகிய மொழிகளில் இலகுவாகப் பேச, எழுத, வாசிக்க, கற்பிக்கப் படுகின்றன.
மற்றும் IELTS, English, IT, Sinhala கற்க விரும்புவர்களுக்கான பிரதியேக வகுப்புகளும் நடைபெறுகின்றன.

6-13 வயது வரையான சிறுவர் சிறுமியர்களுக்கு ICT, English வகுப்புகளும் நடைபெறுகின்றன.

**Cambridge Management College**
இல. 23, கச்சேரி நல்லூர் வீதி
யாழ்ப்பாணம், [கச்சேரி பஸ்நிலையம் அருகில்]
தொ.பேசி : 0777740999, 0212221818
Email-cmcjaffna@gmail.com


# மூன்றரை தசாப்தத்திற்கும் மேலாக புனரமைக்கப்படாத வீதி

## மக்கள் குற்றச்சாட்டு

அல்வாய் கிழக்கு பத்தானை வீதி மூன்றரை தசாப்தத்திற்கு மேலாக புனரமைக்கப்படாமையால் அப்பகுதியில் உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் தினம் போக்குவரத்திற்கு பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக அப்பகுதிமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட மேற்படி கிராம வீதி கடந்த 35 வருடங்களுக்கு முன்னர் தார் வீதியாக காணப்பட்டதாகவும் அதன் பின் மாறிமாறி வந்த பிரதேச சபையினரால் இவ்வீதி புனரமைக்கப்படாது புறக்கணிக்கப்பட்டு வருவதாகவும் அப்பகுதிமக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இவ்வீதியால் தினம் பல நூற்றுக்கணக்கான மக்கள் பயணம் செய்து வருகின்றனர். அண்மையில் அப்பகுதி இளைஞர்கள் சிலரினால் மக்களிடம் நிதி சேகரிக்கப்பட்டு வெள்ளை மக்கி மண் இடப்பட்டு சிறிதளவு வீதியாக்கப்பட்டது.

மிகுதியான வீதி தொடர்ந்தும் குன்றும் குழியுமாக காணப்படுவதுடன் போக்குவரத்திற்கு உதவாத வகையில் தொடர்ந்தும் காணப்படுகின்றது. எனவே, உரிய அதிகாரிகள் மிக விரைவாக இவ்வீதியை புனரமைத்து தருமாறு அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-24)


## கல்யாண மாலை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:- 1976 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- சதயம் 1<br>உயரம்:- 5'9"<br>கி.பா:-71<br>தொழில்/ தகைமை:- A/L மருந்துக் கலவையாளர்<br>B/675 | பிறப்பு:- 1981 RC<br>உயரம்: 5'<br>தகைமை:-O/L<br>எதிர்பார்ப்பு: பொருத்தம் பார்ப்பது இல்லை<br>G/671 |
| பிறப்பு:- 1974 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- அனுசம் 2<br>உயரம்:-5'<br>கி.பா:-37.75<br>தகைமை:-A/L (ஆராய்ச்சி)<br>எதிர்பார்ப்பு:- சைவபோசனம்<br>B/676 | பிறப்பு:- 1978 இந்து<br>நட்சத்திரம்:- சுவாதி<br>உயரம்: 5'2'<br>கி.பா:-39.75, 2 இல் செவ்.<br>தொழில்: Degree Management (BBA)<br>G/672 |
| பிறப்பு:- 1978 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-அனுசம் 4<br>உயரம்:-5'4"<br>கி.பா:-13<br>தொழில்:- Computer Programme திருத்துநர் (கனடா PR)<br>B/242 | பிறப்பு:- 1986 சைவக்குருக்கள்<br>நட்சத்திரம்: புரட்டாதி 4<br>உயரம்: 5'4"<br>கி.பா: 37, 2 இல் செவ்.<br>தொழில்:-BA, கூட்டுறவு யூனியன் கிளார்க்<br>G/673 |
| பிறப்பு:- 1972 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- அச்சுவினி 2<br>உயரம்:-5'8"<br>கி.பா:-15.5<br>தகைமை:- O/L<br>B/243 | பிறப்பு:- 1983 RC<br>நட்சத்திரம்:- பூரம் 1<br>தகைமை:- A/L, B.COM Holy Cross Trichy Ind (ஆங்கில ஆசிரியை)<br>எதிர்பார்ப்பு: விவாகரத்து ஆனவர், விவாகரத்தும் ஏற்கப்படும்<br>G/397 |

சகல தொடர்புகளுக்கும்:-
**கல்யாண மாலை**
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல.144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E.mail:-kalyanamalai.jaffna@gmail.com
ஊடக அனுசரணை வலம்புரி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# விண்டோஸ் 8 இல் புத்தம் புதிய வசதிகள்

புதிய முறையில் இயங்கி எதிர்பாராத வசதிகளை தரும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது விண்டோஸ் 8. குறிப்பிட்ட தொடுதிரை, சதுரக்கட்ட அமைப்பு, விண்டோஸ் ஸ்டோர் போன்றவற்றை விடுத்து மற்ற சில அம்சங்களை இங்கு காணலாம்.

### Antivirus

விண்டோஸ் 8 சிஸ்டத்துடன் புதிய முறையில் ஆண்டி வைரஸ் மற்றும் பாதுகாப்பு புரோகிராம் ஒன்று இணைக்கப்பட்டு கிடைக்கிறது.

Windows Defender என அழைக்கப்படும் இந்த புரோகிராம் நம் தனிப்பட்ட கணனியை வைரஸ் மால்வேர் ட்ரோஜன் புரோகிராம்கள் மற்றும் பிற கெடுதல் விளைவிக்கும் புரோகிராம்களிலிருந்து பாதுகாப்பு தருகிறது.




### Battery Back Up Speed Boot Up

விண்டோஸ் 8 சிஸ்டத்தில் தனிப்பட்ட கணனிகள் மிக வேகமாக Boot ஆகும்படி அமைக்கப்பட்டுள்ளன.

மேலும் கணனியை இயங்க தொடங்கும் போது உடன் இயங்கும் Start Up Programs பட்டியலை நாம் Task Manager திறந்து சரி செய்திடாலாம்.

மின்சக்தியை குறைக்கும் வகையில் செட் செய்திடலாம். இதனால்லப் டொப் மற்றும் நோட்புக் கணனிகளில் டேப்ளட் பிசிக்களில் மின்சக்தி பயன்பாடு சிக்கனமாகிறது.

### Window 8 Update

தானாகவும் எளிதாகவும் கணனியில் Update செய்திட வசதி அளிக்கப்பட்டுள்ளது. இயங்குதளம் மட்டுமன்றி Application Program Files ஐயும் Update செய்திடலாம்.

மேலும் புதிய வசதிகள் தரும் வகையில் Files வெளியிடப்பட்டாலும் அவையும் சிஸ்டத்தில் தானாக பதியப்படுகின்றன.

### Windows Store Application Program

விண்டோஸ் 8 Metro Application Program மற்ற mobile Application Programs போலவே இயங்குகின்றன.

கணனி ஒன்றில் இயங்கும் Soft Ware Application Programs போலவே இவற்றின் செயற்பாடுகள் உள்ளன.

விண்டோஸ் 8 சிஸ்டம் ஒன்று தான் கணனிகளிலும் கைப்பேசிகளிலும் ஒரே மாதிரியாகவே இயங்கும் தன்மை கொண்ட சிஸ்டமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

### Computer Mobile Games

கைப்பேசிகள் வந்த பின்னர் விளையாட்டுக்களில் ஆர்வமுள்ள நபர்கள் கணனிகளை அவ்வளவாக நாடுவதில்லை. ஆனால், விண்டோஸ் 8 மூலம் கைப்பேசிகளில் இயங்கும் Games அனைத்தும் தனிப்பட்ட கணனிகள் டேப்ளட் பிசிக்கள் மற்றும் அல்ட்ரா புக் கணனிகளில் கிடைக்கின்றன.

### File Explorer

முந்தைய விண்டோஸ் சிஸ்டங்களில் இதனை Windows Explorer என அழைத்து வந்தோம். இதில் தற்போது ஒரு ரிப்பன் இணைக்கப்பட்டுள்ளது.

இதில் File ஐ பற்றிய கூடுதல் புள்ளி விபரங்கள் கிடைக்கின்றன. குறிப்பான ஒரு File ஐ மாற்றி கொண்டிருக்கையில் அதனைச் சற்று நேரத்திற்கு நிறுத்தி வைக்கலாம். இதுவரை நாம் File ஐ கையாண்ட வழிகளுக்கும் மேலாக பல வசதிகள் இப்போது விண்டோஸ் 8 சிஸ்டத்தில் தரப்பட்டுள்ளன.

# கணனி முன்பு அதிக நேரம் வேலை செய்பவரா? இதோ உங்களுக்கான சில வழிமுறைகள்

இன்றைய தொழில்நுட்ப உலகில் எந்த வேலையாக இருப்பினும் கணனி முன்பு அதிகநேரம் செலவிட வேண்டி இருக்கிறது. இதனால் கணனியின் பயன்பாடுகள் அதிகம் கொண்டவர்கள், உடல் நலத்திலும் அக்கறை எடுத்து கொள்வது மிக அவசியமான ஒன்றாக இருக்கிறது.

முதலில் அதிகநேரம் கணனியை பார்பவர்கள் கண்கள் மேல் கவனம் செலுத்த வேண்டும். மிக பக்கத்தில் இருந்து கணனி திரையில் வெளிச்சத்தினை பார்ப்பதால் கண்கள் பாதிப்படைய நிறைய வாய்ப்பிருக்கிறது.

இதனால் 15 நிமிடத்திற்கு ஒருமுறை கண்களுக்கு ஓய்வு கொடுப்பது நல்லது. அலுவலகத்தில் வேலை செய்பவர்களுக்கு இது சாத்தியப்படாது. இதற்கும்வழி இருக்கிறது. உள்ளங்கையை கண்கள் மேல் வைத்து ஒரு இரண்டு நிமிடம் ஓய்வு கொடுக்கலாம். இது ஓரளவு கண்களை பாதிப்பில் இருந்து காப்பாற்றும்.

✳ தொடர்ந்து கணனி முன்பு வேலை செய்யும் நபர்கள் பத்து நிமிடத்திற்கொருமுறை கைகளையும் உடலையும் நீட்டி மடக்கி சிறிய உடற்பயிற்சி செய்து கொள்வது மிக நல்லது.

✳ கணனியின் முன் அமர்ந்து டைப் செய்கையில் உடல்லை நேர்கோட்டில் வைத்திருப்பது மிக அவசியமான ஒன்று. இதனால் முதுகுத் தண்டு நேராக இருக்கும். இது போல் செய்வதால் உடல் வலி அதிகம் வருவதை குறைக்கலாம்.

✳ பாதங்களை தரை மீது சமமாக வைத்திருப்பது மிகவும் சிறந்தது. உடலின் அனைத்து பலமும் பாதத்தின் மேல் இருப்பதால் பாதத்தினை சமநிலையில் வைத்துக் கொள்ள வேண்டும்.

✳ டைப் செய்யும் போது முழங்கைகள் இடையின் பக்கத்தில் வைத்திருப்பது கைகளுக்கு சிறப்பாக சப்போர்ட் கொடுக்கும். இதனால் சரியான முறையில் அமர்ந்து டைப் செய்ய முடியும். அதோடு தோள்பட்டை வலியினையும் எளிதாக குறைக்க முடியும்.

✳ கணனி திரையின் வெளிச்சத்தினை குறைத்து வைத்து கொள்வது மிக அவசியமான ஒன்றாகும். இதனால் கண்களை எளிதாக பாதுகாக்கலாம்.

# Norton Power Eraser மென்பொருளை தரவிறக்கம் செய்வதற்கு

கணனி பாவனையாளர்கள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினையாக வைரஸ்களின் மற்றும் மால்வேர்களின் தொழிற்பாடு காணப்படுகின்றது.

பாதுகாப்பற்ற இணைய பாவனை, பென்டிரைவ் போன்றவற்றின் பாவனை போன்றவற்றினால் பரவக்கூடிய இவை தற்போது உத்தரவாதமற்ற மென்பொருட்களின் பாவனையாலும் பரவ ஆரம்பித்துள்ளன.

இவ்வாறாக உத்தரவாதமற்ற மென்பொருட்களை கணனிகளில் நிறுவி பின் அவற்றினை நீக்கும் போது குறித்த மென்பொருள் தொடர்பாக உள்ள முழுமையான கோப்புக்களும் நீங்குவதில்லை. அவை மால்வேர் புரோக்கிராம்களாக இருப்பதே இதற்கு பிரதான காரணமாக விளங்குகின்றது.

சாதாரண அன்டிவைரஸ் புரோகிராம்களால் கண்டறிய முடியாத இக்கோப்புக்களை மிகவும் இலகுவாக தேடி அழிப்பதற்கு Norton Power Eraser எனும் மென்பொருள் பெரிதும் பயனுள்ளதாகக் காணப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Opera உலாவியின் புதிய பதிப்பு

இணைய உலாவிகளில் பிரபலமானதும் உலகெங்கிலும் ஏறத்தாழ 250 மில்லியன் வரையான மக்களால் பயன்படுத்தப்படுவதுமான Opera உலாவியின் புதிய பதிப்பு தற்போது வெளியாகியுள்ளது.

Opera12, 10 பதிப்பாக வெளிவந்துள்ள இந்த உலாவியானது மைக்ரோசொப்டின் Windows மற்றும் அப்பிளின் mac இயங்குதளம் ஆகியவற்றிற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இது முன்னைய பதிப்புக்களை காட்டிலும் வேகமாக இயங்கக் கூடியவாறும் கவர்ச்சியானதுமாக வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் Twitter Notification, Facebook போன்றவற்றிற்கான நீட்சிகளையும் புதிதாக உள்ளடக்கியிருக்கின்றது.

தவிர mac இயங்குதளங்களில் Retina திரைக்கு ஒருங்கிசைவு உடையதாகவும் காணப்படுகின்றது.




# அமேஷன் நிறுவனத்தின் புதிய Air Patriots


கணனி விளையாட்டானது மூளை விருத்தியை அதிகரிப்பதுடன் சிறந்த பொழுதுபோக்கு அம்சமாகவும் திகழ்கின்றது.

இதனால் கணனி விளையாட்டு பிரியர்களை இலக்காகக்கொண்டு அமேஷன் நிறுவனம் Air Patriots எனும் புத்தம் புதிய விளையாட்டினை அறிமுகப்படுத்துகின்றது.

இதனைக் கூகுளின் Android மற்றும் அப்பிளின் iOS இயங்குதளங்களைக்கொண்ட சாதனங்களில் நிறுவி பயன்படுத்தக்கூடியவாறு வடிவமைக்கப்பட்டுள்ளது.

Androidஇயங்கு தளத்திற்கான Air Patriots-இனை Amazon Appstore மற்றும் Google Play போன்றவற்றிலும் iOS இயங்குதளத்திற்காக அப்பிளின் Appstore - இலும் தரவிறக்கம் செய்யமுடியும்.

# Sharp நிறுவனம் அறிமுகப்படுத்தும் Sharp Aquos Phone SH930W கைப்பேசிகள்




இலத்திரனியல் சாதனங்களின் உற்பத்திக்கு பெயர் போன Sharp நிறுவனம் தற்போது கைப்பேசி உற்பத்தியிலும் கால்தடம் பதித்துள்ளது.

இதன் அடிப்படையில் Android 4.1 Gelly Bean இயங்குதளத்தில் செயற்படக்கூடிய Sharp Aquos Phone SH930W கைப்பேசிகளை அறிமுகப்படுத்துகின்றது.

இவற்றின் திரையானது IGZO HD தொழில்நுட்பத்தில் அமைந்த 5 அங்குல அளவுடையதாக காணப்படுவதுடன் 1.5 GHz வேகத்தில் செயலாற்றக்கூடிய Processor இனையும் கொண்டுள்ளன.

2 G, 3G வலையமைப்பு தொழில்நுட்பத்தில் செயற்படக் கூடியதாக வடிவமைக்கப்பட்டுள்ள இக் கைப்பேசிகளில் micro SD card மூலமாக சேமிப்பு திறனை மாற்றியமைத்து கொள்ளும் வசதியும் காணப்படுகிறது.

# அரசாங்கம் தாம் கூறுவது அனைத்தும் சட்டம் என நினைத்து செயற்படுகிறது

## சுரேஷ் எம்.பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

**தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைப்பது தொடர்ந்தும் தாமதமாகி வருவதாலும் நாட்டில் காணப்படும் அரசியல் நிலைமைகளில் உக்கிரமடைந்து வரும் பிரச்சினைகள் காரணமாக நாளையோ, நாளை மறுதினமோ, 5 வருடங்களிலோ அல்லது 10 வருடங்களின் பின்னரோ அந்த மக்களின் மனங்களில் மாற்றங்கள் ஏற்படும் ஆபத்து இருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.**

கொழும்பு அசாத் சாலி மன்றத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய இலங்கை அரசாங்கம் தாம் கூறுவது அனைத்துமே சட்டம் என நினைத்து செயற்பட்டு வருகிறது. தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை பெற்றுக் கொள்வதற்காக சர்வதேச சமூகத்தின் உதவியை பெற்றுக் கொள்ளவும் அதற்காக குரல் கொடுக்கவும் எப்போதும் கூட்டமைப்பு தயாராக இருக்கின்றது.

இலங்கையில் வாழும் தமிழர்களின் பிரச்சினை இந்த நாட்டுக்கு மாத்திரமான பிரச்சினையல்ல. அது சர்வதேச பிரச்சினையாக மாறியுள்ளது. இந்த நாட்டின் பிரச்சினையை சர்வதேசத்திற்கு அரசாங்கமே கொண்டு சென்றது.

தேசிய பிரச்சினை தொடர்பாக அரசாங்கத்துடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போது நாம் பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை கோரினோம். அரசாங்கம் அதற்கு இணங்கவில்லை. தற்போது திவிநெகும சட்ட மூலத்தை நிறைவேற்றும் வழிமுறையாக 13 ஆவது அரசியல் அமைப்புத்திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்ய முயற்சிக்கின்றனர்.

இந்திய- இலங்கை உடன்படிக்கையில் இந்த அரசியல் அமைப்புத்திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது. இதனை இரத்துச் செய்வதென்பது ஏனைய சர்வதேச உடன்படிக்கைகளை இரத்துச் செய்யும் ஆபத்தை ஏற்படுத்தும். குறிப்பாக வடக்கு, கிழக்கில் இந்து ஆலயங்கள், முஸ்லிம் பள்ளி வாசல்கள் உடைக்கப்படுகின்றன. சிங்கள இனவாதத்தை ஏற்படுத்தவே வடக்கு, கிழக்கில் இன விகிதாசாரத்தை குறைக்கவும் மாகாண எல்லைகளை மாற்றவும் அரசாங்கம் முயற்சித்து வருகிறது. அதிகாரத்தை பரவலாக்குவதன் மூலம் மாத்திரமே ஐக்கிய இலங்கையை ஏற்படுத்த முடியும். அதிகாரத்தை எப்படி பரவலாக்குவது என்பதை அரசாங்கமே தீர்மானிக்க வேண்டும். சுவிஸர்லாந்து போன்ற நாடுகளை எடுத்துக் கொண்டால் அந்த நாடுகளின் ஜனநாயகம் சிறந்த உதாரணமாகும். ஏன் அவ்வாறான முறை இலங்கைக்கு பொருந்தாது?

வடமாகாண சபையின் ஆட்சியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றும் என்ற அச்சம் காரணமாகவே அரசாங்கம் அந்த மாகாணத்திற்கான தேர்தலை ஒத்திவைத்து வருகிறது. எனினும் வடமாகாண சபையும் ஏனைய மாகாணங்கள் போல் செயற்படும் என்பதை எம்மால் கூறமுடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# நவுறுதீவில் அகதிகள் தடுப்பு; சர்வதேச மனித உரிமை மீறல்

## ஆஸ்.மனித உரிமை ஆணையாளர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

நவுறு தீவில் புகலிடக் கோரிக்கையாளர்களை காலவரையறையின்றி தடுத்து வைத்திருப்பது சர்வதேச மனித உரிமை மீறல் சம்பவம் என்று அவுஸ்திரேலிய மனித உரிமை ஆணையாளர் குற்றம் சுமத்தியுள்ளார்.

அவுஸ்திரேலிய ஜுலியா கிலாட்டின் அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட மனித உரிமை ஆணையாளரான ஜில்லியன் ட்ரிக்ஸ் இந்தக் குற்றச்சாட்டை சுமத்தியுள்ளார்.

அத்துடன் நவுறு தீவில் புகலிட கோரிக்கையாளர்கள் விடயம் தொடர்பில் அவுஸ்திரேலிய குடிவரவுத் துறை அமைச்சர் கிரிஸ் போவனை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

நவுறுதீவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் ஆறு மாதங்களுக்குள் அகதி அந்தஸ்து தொடர்பான நடவடிக்கைகளுக்கு உள்வாங்கப்படுவர் என அவுஸ்திரேலிய அரசாங்கம் உறுதியளித்துள்ளது.

எனினும் அவர்கள் ஐந்து வருடங்கள் வரையில் அங்கு தடுத்து வைக்கப்படுவார்கள் என தகவல்கள் வெளியாகியுள்ளன. எனவே, இது சர்வதேச மனித உரிமைகளை மீறும் செயல் என ஜில்லியன் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை, நவுறுதீவில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சுமார் 300 புகலிட கோரிக்கையாளர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இவர்களில் பலர் நோய் வாய்ப்பட்டுள்ளார்கள். இதில் ஈரானிய பொதுமகன் ஒருவர் கடந்த 27 நாட்களாக உணவு உட்கொள்ள மறுத்து வருகிறார். (எ-11)




★ 1793-கிறிஸ்தவ மதகுரு வில்லியம் கேரி, கொல்கத்தா வந்து சேர்ந்தார்.

★ 1799-பிரெஞ்சுப் புரட்சி முடிவுக்கு வந்தது. நெப்போலியன் பொனபார்ட் பிரான்சைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தான்.

★ 1872-மசாசுசெட்ஸ் மாநிலத்தில் பொஸ்டன் நகரில் களஞ்சியசாலை ஒன்றில் ஏற்பட்ட தீ பரவியதில் பொஸ்டனின் பெரும் பகுதி அழிந்தது. 776 கட்டடங்கள் அழிந்து 20 பேர் உயிரிழந்தனர்.

★ 1887-ஐக்கிய அமெரிக்கா ஹவாயின் பேர்ல் துறைமுகத்தின் உரிமையைப் பெற்றது.

★ 1888-கிழிப்பர் ஜேக் மேரி, ஜேன் கெலியைக் கொன்றான். இதுவே அவனது கண்டசிக் கொலையாகும்.

★ 1913-மகாத்மாகாந்தி கைது செய்யப்பட்டு 9 மாதச் சிறைத் தண்டனையடைந்தார்.

★ 1921-அல்பேர்ட் ஐன்ஸ்டீன் ஒளிமின் விளைவை விளக்கியமைக்காக இயற்பியலுக்கான நோபல் பரிசைப் பெற்றார்.

★ 1937-ஜப்பானியப் படைகள் சீனாவின் ஷங்காய் நகரைக் கைப்பற்றின.

★ 1938-நாசி கிட்லரின் யூதப் பகைமைக் கொள்கையின் ஒரு பகுதியாக ஜேர்மனியில் கிறிஸ்டல் இரவு நிகழ்வு இடம் பெற்றது. 90 யூதர்கள் படுகொலை செய்யப்பட்டனர். 25 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டு நாசி வதை முகாம்களில் அடைக்கப்பட்டனர்.

★ 1953-கம்போடியா பிரான்சிடம் இருந்து விடுதலை பெற்றது.

★ 1963-ஜப்பானில் மீக் என்ற இடத்தில் நிலக்கரிச் சுரங்கத்தில் இடம்பெற்ற விபத்தில் 458 பேர் உயிரிழந்தனர்.

★ 1963-ஜப்பான் யோகோஹாமா என்ற இடத்தில் மூன்று தொடருந்துகள் மோதியதில் 160 பேர் உயிரிழந்தனர்.

★ 1967-நாசா நிறுவனம் கேப் கென்னடி தளத்தில் இருந்து ஆளில்லா அப்பல்லோ 4 விண்கலத்தை விண்ணுக்கு அனுப்பியது.

★ 1985-சதுரங்க உலகக் கிண்ணப் போட்டியில் காரி கஸ்பரோவ் அனத்தோலி கார்ப்பொவைத் தோற்கடித்து உலகின் முதலாவது வயது குறைந்த சதுரங்க வீரர் என்ற பெருமையைப் பெற்றார்.

★ 1989-பனிப்போர்: கம்யூனிசக் கிழக்கு ஜேர்மனி பேர்லின் சுவரைத் திறந்து விட்டதில் பலர் மேற்கு ஜேர்மனிக்குள் செல்ல ஆரம்பித்தனர்.

★ 1990-நேபாளத்தில் புதிய மக்களாட்சி அரசியலமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டது.

★ 1994-டார்ம்ஸ்டாட்டியம் என்ற தனிமம் கண்டு பிடிக்கப்பட்டது.

★ 2000-உத்தராஞ்சல் மாநிலம், இந்தியாவின் உத்தரப் பிரதேச மாநிலத்தில் இருந்து பிரிக்கப்பட்டது.

★ 2005-வீனஸ் எக்ஸ்பிரஸ் என்ற ஐரோப்பாவின் விண்கலம் கசகஸ்தானில் இருந்து ஏவப்பட்டது.

★ 2005-ஜோர்தானின் அம்மான் நகரில் மூன்று விடுதிகளில் இடம் பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களில் 56 பேர் கொல்லப்பட்டனர்.

**இறப்புக்கள்**

★ 1918-கியோம் அப்போலினேர், பிரெஞ்சுக் கவிஞர் (பி.1880)

★ 1970-சார்லஸ் டிகோல், பிரெஞ்சுத் தளபதி, அரசியல்வாதி (பி.1890)

★ 2005-கே.ஆர்.நாராயணன், இந்தியக் குடியரசுத் தலைவர் (பி.1921)

★ 2006-வல்லிக்கண்ணன், தமிழ் எழுத்தாளர் (பி.1920)

# போர்க் குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுக் கொடுப்பார்

## ஒபாமாவுக்கான வாழ்த்துச் செய்தியில் பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ்

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் பராக் ஒபாமா மீண்டும் வெற்றி பெற்றுள்ளதற்கு பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

அவர் அனுப்பி வைத்துள்ள வாழ்த்துச் செய்தியில்,

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயக கட்சி சார்பில் மீண்டும் போட்டியிட்ட ஜனாதிபதி ஒபாமா 300 இற்கும் அதிகமான வாக்குகளை பெற்று இரண்டாவது முறையாக வெற்றி பெற்றிருக்கிறார்.

அமெரிக்க மக்களின் ஏகோபித்த ஆதரவை பெற்று மீண்டும் ஜனாதிபதியாக வெற்றி பெற்றுள்ள ஒபாமாவுக்கு பாட்டாளி மக்கள் சார்பில் ராமதாஸ் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

இந்திய- அமெரிக்கவுக்கு இடையிலான உறவு தழைக்கவும் இலங்கையில் நுழைந்த மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றங்களுக்கு காரணமானவர்களுக்கு தண்டனை பெற்றுக் கொடுக்கவும் உலகம் முழுவதும் சமத்துவ சமுதாயம் மலரவும் ஜனாதிபதி ஒபாமா பாடுபடுவார் என்று நம்புகிறேன் என்று அவர் கூறியுள்ளார். (அ-2)

# காசல்ரீ நீர்த்தேக்கத்தின் வான்கதவு திறப்பு

மலையகத்தில் தொடர்ந்து அடை மழைபெய்து வருவதன் காரணமாக காசல்ரீ நீர்த் தேக்கத்தின் வான் கதவு திறக்கப்பட்டுள்ளது.

மலையகத்தில் தொடர்ந்து பெய்துவரும் அடைமழை காரணமாக களனி கங்கையில் அமைந்துள்ள காசல்ரீ நீர்த்தேக்கத்தில் நீர்மட்டத்தையடைந்ததால் நீரை வெளியேற்றும் அவசர கதவுகளில் ஒன்று நேற்று முன்தினம் திறக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வான்கதவு திறக்கப்பட்டுள்ளதால் களனி கங்கையின் நீரின் மட்டம் அதிகரிப்பதால் கங்கையை பயன்படுத்தும் மற்றும் அதன் அருகில் வசிப்பவர்களும் மிகவும் அவதானத்துடன் செயற்படுமாறு நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் வேண்டுகோள் விடுத்துள்ளது. இதேநேரம் மவுசாகலை நீர்த்தேக்கத்தின் நீர் மட்டமும் உயர்ந்து வருவதாகவும் அந்நிலையம் மேலும் தெரிவித்துள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பருத்தித்துறை உ.அ.அ.பிரிவில்

# தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் மலசல கூடங்கள் அமைத்து பூரணப்படுத்தும் திட்டம்

**இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளை சார்பாக சர்வதேச செஞ்சிலுவை, செம்பிறைச் சங்கங்களின் சமாசத்தினால் (IFRC) பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 14 பாடசாலைகளில் கடந்த ஒரு வருடங்களுக்கு மேலாக ஒருங்கிணைந்த சுகாதார கல்வி மேம்பாட்டுச் செயற்றிட்டத்தின் அடிப்படையில் 14 பாடசாலைகளுக்கு 44 புதிய மலசலகூடங்கள் அமைக்கப்பட்டது. அத்துடன் 88 மலசலகூடங்கள் புனர் நிர்மாணம் செய்யப்பட்டது. இவற்றை அப்பாடசாலைகளுக்கு இன்று வெள்ளிக்கிழமை காலையில் வலயக் கல்விப்பணிப்பாளர் எஸ்.நந்தகுமாரினால் அவ்வப் பாடசாலை அதிபர்களிடம் கையளிப்படவுள்ளது. அதனை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது.**

❖ முன்னுரை

ஒருங்கிணைந்த சுகாதாரம், சுகாதாரக் கல்வி மற்றும் சுகாதார மேம்பாட்டுச் செயற்றிட்டம் (Interated Sanitation, Health Education and Hygiene Promotion project), பருத்தித்துறையை தளமாகக் கொண்டு (மே 2012) IFRC (WATSAN PROJECT) மிக உன்னதமான முறையில் நடைபெற்று வந்தது. இத் திட்டம் சுகாதாரம், கல்வி, சிறார்கள் நலன்கள் ஆகியவற்றை ஆதாரமாகக்கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது.

❖ **செம்பிறை சங்கங்களின் சம்மேளனத்தின் நிதி உதவி**

இலங்கை செஞ்சிலுவைச் சங்கமானது சர்வதேச மற்றும் செம்பிறை சங்கங்களின் சம்மேளனத்தின் நிதி அனுசரணையுடன் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 9 கிராம அலுவலர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 14 பாடசாலைகளில் குடிநீர் மற்றும் சுகாதாரக் கல்வி சுகாதார மேம்பாட்டுச் செயற்றிட்டமானது பருத்தித்துறை பிரதேச செயலர் அலுவலக நிர்வாகப் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

❖ **பாடசாலைக்கான செயற்றிட்டம்**

சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செம்பிறைச் சங்கங்களின் அனுசரணையுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினரால் நடைமுறைப்படுத்தப்படும் பாதுகாப்பான குடிநீர் வழங்கல் செயற்றிட்டத்துடன் இணைந்து இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் பாடசாலை மட்ட அடிப்படையிலும் சுகாதார மேம்பாடு சுகாதாரக் கல்வி செயற்றிட்டத்தினை நடைமுறைப்படுத்தியது. தேசிய பாடசாலைகள் உள்ளடங்கலாக 14 பாடசாலைகளுக்கான மலசலகூட வசதிகளை கட்டிக் கொடுத்து மற்றும் புனர்நிர்மாணம் செய்தல் போன்ற செயற்றிட்டங்கள் யாவும் நிறைவடைந்துள்ளன. இதனால் ஆசிரியர்களும் மாணவர்களும் நேரடிப் பயனாளிகளாகின்றனர்.

❖ **சமூக மட்ட சுகாதார மேம்பாட்டுச் செயற்றிட்டம்**

சமூக மட்ட சுகாதார மேம்பாட்டுச் செயற்றிட்டத்திலே நீரினால் தொற்றலடையும் நோய்களில் இருந்து பாதுகாப்பினைப் பெறுவதும் பெரும்பாலான தொற்றுநோய்களில் இருந்து சமூகத்தினை பாதுகாப்பதனையும் அடிப்படையாகக் கொண்டு பல்வேறு செயற்றிட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன.

❖ **பயனடையும் பாடசாலைகள் பட்டியல்**

| இல. | பாடசாலையின் பெயர் |
|---|---|
| 1 | யாழ். கலட்டி றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை |
| 2 | யாழ். சென் தோமஸ் கத்தோலிக்க பெண்கள் பாடசாலை |
| 3 | யாழ். மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை |
| 4 | யாழ். ஹாட்லிக் கல்லூரி |
| 5 | யாழ். சைவப் பிரகாசா மகா வித்தியாலயம் |
| 6 | யாழ். மெதடிஸ்த மிசன் தமிழ்க்கலவன் பாடசாலை |
| 7 | யாழ். சித்தி விநாயகர் வித்தியாலயம் |
| 8 | யாழ். வேலாயுதம் மகா வித்தியாலயம் |
| 9 | யாழ். தட்டாதெரு மெதடிஸ்த மிசன் தமிழ்க்கலவன் பாடசாலை |
| 10 | யாழ். வட இந்து மகளிர் கல்லூரி |
| 11 | யாழ். புலோலி கிழக்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை |
| 12 | யாழ். தம்பசிட்டி மெதடிஸ்த மிசன் தமிழ்க்கலவன் பாடசாலை |
| 13 | யாழ். கற்கோவளம் மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை |
| 14 | யாழ். மேலைப் புலோலி சைவ வித்தியாலயம் |

❖ **பிள்ளைகளிடமிருந்து பிள்ளைகளுக்கு**

இச்செயற்றிட்டமானது பாடசாலை மாணவர்களிடையே சுகாதார மேம்பாட்டினை ஏற்படுத்தவும் அவர்களுக்கு நல்ல சுகாதாரப் பழக்கவழக்கத்தில் கொண்டு வருவதுக்குமாக ஏற்படுத்தப்பட்டதொன்றாகும். பாடசாலைச் சிறார்களை அணுகி அவர்களிடத்திலான சுகாதார அறிவினை கற்றலின் மூலமும் நடைமுறைப்படுத்துவதன் மூலமாக மேம்பாடடையச் செய்யும் ஒரு நிகழ்ச்சித் திட்டம் இதுவாகும். பயிற்றுவிக்கப்பட்ட செஞ்சிலுவைத் தொண்டர்கள் மற்றும் ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் பாடசாலைகளில் இது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

**கு.பாலகிருஸ்ணன்**
**(கௌரவ செயலாளர், இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளை).**

❖ **நிறைவுரை**

சுகாதாரத்துக்கும் நீருக்கும், சுகாதரத்துக்கும் மலசல கூடத்துக்கும், சுகாதாரத்துக்கும் நோய்களுக்கும் உள்ள தொடர்புகளை உள்ளடக்கிய செயற்றிட்டம்தான் ஒருங்கிணைந்த சுகாதாரம், சுகாதாரக் கல்வி மற்றும் சுகாதார மேம்பாட்டு குடிநீர் விநியோகத் திட்டத்தில் அடங்கும். இது மிக போற்றற்குரிய முறையில் நடைபெற்று வந்தது. இத்திட்டம் சுகாதாரம், கல்வி, சிறார்கள் நலன்கள் ஆகியவற்றை ஆதாரமாகக் கொண்டு நடைபெற்றது.

# 13 ஆவது திருத்தம் இல்லாதிருந்தால் அமெரிக்காவே உடைந்திருக்கும்

## அமைச்சர் டலஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

அமெரிக்க அரசியலமைப்பில் 13 ஆவது திருத்தத்தை கொண்டு வந்திருக்காது போயிருந்தால் அந்த நாடு பல துண்டுகளாக உடைந்து போயிருக்கும் என்று ஸ்ரீலங்காவின் அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் உரையாற்றிய அவர்,

மாகாணசபை முறைமை தொடர்பாக பலரும் பல்வேறு கருத்துக்களை கூறுகின்றனர். சிலருக்கு 13 ஆவது திருத்தமே கசக்கிறது. அமெரிக்க அரசியலமைப்பில் கூட 13 ஆவது திருத்தம் இருக்கிறது.

13 ஆவது திருத்தத்தில் உள்ள நல்ல விடயங்கள் சிலருக்கு தெரிவதில்லை.

அமெரிக்க அரசியலமைப்பில் ஏற்படுத்தப்பட்ட 13 ஆவது திருத்தம் தொடர்பான ஸ்டீபன் ஸ்பில்பேர்க் இயக்கிய லிங்கன் என்ற திரைப்படத்தை பார்த்தால் 13 ஆவது திருத்தம் அவர்களுக்கு கசக்காது.

இத்தகையதொரு திருத்தம் அமெரிக்க அரசியலமைப்பில் கொண்டு வரப்படாது போயிருந்தால் அமெரிக்கா பல நாடுகளாக பிரிந்திருக்கும்.

இன்று ஐக்கிய அமெரிக்கா என்ற ஒரு நாடே இருந்திருக்காது என்று தெரிவித்துள்ளார். (அ-2)

# நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கப்பட வேண்டும்

## கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தல்

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதற்காக காலம் கனிந்துள்ளதாக இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி தெரிவித்துள்ளது.

இதனால் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்கும் அவசர தேவை குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும் எனவும் ராஜா கொலுரே தெரிவித்துள்ளார்.

நீதிமன்றம் மற்றும் நிறைவேற்று அதிகாரத்திற்கும் இடையிலான மோதலானது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையின் ஒரு பாதிப்பாகும் என தெரிவித்துள்ள அந்த கட்சி, இந்த ஆட்சி முறையை ஒழிக்கும் அவசர அத்தியாவசியம் குறித்து கவனம் செலுத்த வேண்டும் அவர் தெரிவித்துள்ளார்.

பிரதம நீதியரசருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் இருந்து தமது கட்சி விலகி நிற்க போவதாகவும் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

நீதிமன்றத்திற்கும் நிறைவேற்று அதிகாரத்திற்கும் இடையிலான மோதல்களின் பின்னணியிலேயே இந்த நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வரப்பட்டுள்ளது.

இது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையின் ஒரு கெடுதியான பாதிப்பாகும். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறை இருக்கும் வரை இவ்வாறான மோதல்கள் மீண்டும் மீண்டும் ஏற்படக் கூடும். (அ-2)

# விரிவுரையாளர்கள் போராட்டத்தில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது-தேவசிறி

(கொழும்பு)

எந்தவொரு தொழிற்சங்க போராட்டத்தையும் முன்னெடுத்துச் செல்லும் பிரச்சினை தோன்றும் என பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தொழிற்சங்க சம்மேளனம் தெரிவித்துள்ளது.

தமது போராட்டத்திலும் அவ்வாறு பின்னடைவு ஏற்பட்டதாக சம்மேளனத்தின் தலைவர் கலாநிதி நிர்மல் ரஞ்சித் தேவசிறி தெரிவித்தார்.

தமது தொழிற்சங்க நடவடிக்கையை ஒரு கட்டத்தில் முடிவுக்கு கொண்டு வந்தமையை போராட்டக் காட்டிக்கொடுப்பு என கூறலாம் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, அதிபர், ஆசிரியர் சம்பள உயர்வை வலியுறுத்தி எதிர்வரும் நாட்களில் போராட்டம் மேற்கொள்ளவுள்ளதாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் தெரிவித்துள்ளது.

சம்பள பிரச்சினையை தீர்க்க அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட காலக்கெடு நிறைவு பெற்றதாக சங்கத்தின் செயலாளர் மஹிந்த ஜயசிங்க குறிப்பிட்டுள்ளார். (அ-2)



கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் **ஆயிரம் புத்தாக்கங்களின் கண்காட்சி- 2012 (சஹஸக் நிமெவும்)** எனும் கண்காட்சி அண்மையில் நடைபெற்றது. இதற்கு நாடளாவிய ரீதியில் இருந்து மாகாண மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட சிறந்த புத்தாக்கங்களில் இருந்து 908 புதிய கண்டுபிடிப்புக்கள் காட்சிப்படுத்தப்பட்டு தெரிவுகள் இடம்பெற்றன. இதன்போது யாழ்.கல்வி வலயத்திலிருந்து கலந்து கொண்ட கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய மாணவர்களான வை.தேவானந் திவ்வியராஜ், க.பிரபுராஜ் ஆகியோரது புதிய கண்டுபிடிப்பானது தேசிய ரீதியாக இரண்டாம் இடத்தினை பெற்று விருது பெற்றுள்ளது. இதனை வழிப்படுத்திய அதிபர், ஆசிரியருடன் மாணவர்கள் நிற்பதைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கை வரலாறு

௧௦

### விமலதர்மசூரியனின் ஆட்சி

பாதினாறாம் நூற்றாண்டில் கோட்டையின் அல்லது சீதாவாக்கை யின் சிற்றரசாக இருந்து வந்த மலை நாட்டு அரசு, விமலதர்சசூரியனின்


விமலதர்மசூரியனும் ஒல்லாந்த தளகர்த்தன் ஜோரிஸ் வொன் ஸ்பில்பேஜன்

ஆட்சிக்குட்பட்ட காலவேளையிலிருந்து அடுத்து, ஏறக்குறைய மூன்று நூற்றாண்டுவரை தன்னாதிக்கம் கொண்ட சுதந்திர அரசாக விளங்கியது. விமலதர்மசூரியனின் ஆட்சி போர்த்துக்கேயரையும் சீதாவாக்கை இராச்சியத்தையும் அச்சம் கொள்ள வைத்திருந்தது. போர்த்துக்கேயருக்கு அடுத்தடுத்து ஏற்பட்டதோல்விகள் விமலதர்மசூரியன்பால் மக்களைக் கவர்ந்திருந்தது. அரசுடமையுடைய குசுமாதேவியை அவன் மணந்து கொண்டமை அவனது ஆட்சியை நிலைநிறுத்தியது. அத்தோடு இது வரை காலமும் தெல்கம்விகாரையில் மறைவாக வைத்திருந்த புத்தரின் புனித தாதுக்களை எடுத்துவந்து தலதாமாளிகையைக் கட்டி அதில் தாபித்தமை மக்களின் பேராதரவை அவனுக்குத் தந்தது. கண்டி இராச்சியத்தின் பாதுகாப்புக்கு அந்நியசக்தி ஒன்றின் உதவி தேவை என விமலதர்மசூரியன் எண்ணத் தலைப்பட்ட போது ஒல்லாந்தரின் சிநேகிதம் அவனுக்குக் கிட்டியது.

1602 ஆம் ஆண்டு யாவாத்தீவின் பத்தோவியாவில் தமது நிலையைத்

# ஒல்லாந்தர் காலம்

திடப்படுத்திக் கொண்ட ஒல்லாந்தர் பின்னர் போர்த்துக்கேயரின் செல்வாக்கிலிருந்த இலங்கை போன்ற ஏனைய பிரதேசங்களைக் கைப்பற்ற முயன்றனர். இலங்கை போன்ற கீழைத்தேச

கலாநிதி. க.குணராசா (செங்கை ஆழியான்)
திருமதி. கமலா. குணராசா

நாடுகளிலிருந்து கறுவா, ஏலம், மிளகு, கராம்பு முதலான வாசனைத் திரவியங்களை ஐரோப்பிய நாடுகளுக்கு விற்பதன் மூலம் போர்த்துக்கேயர் பெரும் இலாபம் கண்டனர். போர்த்துக்கேயரின் ஏகபோக உரிமையில் ஒல்லாந்தர் பங்கு கொள்ள விரும்பினர். அத்தோடு புரட்டஸ்தாந்து மதத்தை கீழைத்தேயங்களில் போதிப்பதான எண்ணமும் இருந்தது.

ஒல்லாந்தர் இலங்கை வரலாற்றில் முக்கியத்துவம் பெறும் இரண்டாவது ஐரோப்பிய இனத்தவராவர். 1601 ஆம் ஆண்டு ஒல்லாந்தர் கிழக்கிந்தியக் கம்பனி ஒன்றைத் தாபித்தார்கள்.

1602 ஆம் ஆண்டு ஜூன் மாதம் மட்டக்களப்பில் வந்தொதுங்கிய ஒல்லாந்த வியாபாரக் கப்பற் படையொன்றின் தளகர்த்தன் ஜோரிஸ் வொன் ஸ்பில்பேஜன் என்பவனும் சீபொல்ட் டி வார்ட் என்பவனும் கண்டி மன்னனைக் காண விரும்புவதாகச் செய்தி வந்தது. அவ்வேளை கண்டியின் மகா முதலியாராகவிருந்த மனுவல் டயஸ் என்பவனை அவர்களுடன் பேசிக் கண்டிக்கு அழைத்து வருமாறு மன்னன் அனுப்பி வைத்தான். அவ்வாறே ஸ்பில்பேஜன் கண்டிக்கு அழைத்துவரப்பட்டான். அவனை மன்னன் தனது பட்டத்துராணியோடு எதிர்கொண்டு மகிழ்ச்சியாக வரவேற்றான். ஒல்லாந்த மன்னர் கீழைத்தேச வர்த்தகத்தில் ஈடுபடுவதற்கும், போர்த்துக்கேயரை வர்த்தக ஏகபோகத்திலிருந்து அகற்றுவதற்கும் கண்டி மன்னனின் உதவியைக் கோரும் கடிதத்தை அவன் மன்னனிடம் கொடுத்தான். கண்டி ராணியாகிய டொனா கதறினாவாகிய குசுமாதேவி போர்த்துக்கேய மொழி நன்கு பேசத் தெரிந்தவளாகையால் ஸ்பில்பேஜனுக்கும் விமலதர்மசூரியனுக்கும் இடையிலான தொடர்பு


இலங்கையில் ஒல்லாந்தர் காலத்தில் நடந்த கலவரத்தில் ஒன்று


இலகுவானது. அவர்களின் சந்திப்பு சுமுகமாக நடந்தேறியது. ஸ்பில்பேஜன், தான் மன்னனுக்குப் போரில் உதவ வந்ததாகவே காட்டிக்கொண்டான். பரஸ்பரம் பரிசில்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டது. ஸ்பில்பேஜன் தன் நல்லெண்ணத்தை வெளிப்படுத்து மார்ப்போல தான் கைப்பற்றிய ஓரிரு போர்த்துக்கேயக் கப்பல்களையும் ஒல்லாந்தப் பாடகன் ஒருவனையும் மன்னனுக்கு வழங்கினான். அதன்பின் விடைபெற்றான்.

இக்காலத்தில் ஒல்லாந்தருடன் தொடர்பு கொண்டமையை அறிந்த போர்த்துக்கேயர் கண்டி மன்னனுக்குப் பிரச்சினைகளை ஏற்படுத்தினர். போர்த்துக்கேய தளகர்த்தன் அல்பீடோ இதனை முளையிலேயே கிள்ளிவிட விரும்பினான். பெரும் சேனையுடன் சென்று பலனையிலிருந்து விமலதர்மசூரியனின் கோட்டையை முற்றுகையிட்டான். ஆனால், கண்டி மன்னனின் படை அவர்களைச் சிதறடித்தது. அந்தச் சேனையில் போர்த்துக்கேயரின் சேனையிலுள்ள லஸ்கறின் படை வீரர்கள் கண்டி மன்னன் பக்கம் சேர்ந்து கொண்டது. லஸ்கரின் படை என்பது கூலிக்கு அமர்த்தப்பட்டிருந்த சுதேசியப்படையாகும். கன்னங்கற ஆராய்ச்சி என்பவன் இப்படைக்குத் தளபதியாகவிருந்தான். லஸ்கறின் படை மலைய மன்னனுடன் சேர்ந்து கொண்டதும் போர்த்துக்கேயரின் தோல்வி உறுதிப்பட்டது. மலையக இராச்சியத்தின் இயற்கை அமைப்பு தரும் பாதுகாப்பு கண்டி வீரர்களுக்குச் சாதகமாகவிருந்தது. இவ்வாறு அல்பிடோவின் வீரர்களிடையே ஏற்பட்ட கலவரங்கள் காரணமாக அவனது சேனையை விமலதர்மன் சிதறடிக்க நேர்ந்தது.

மல்வானையில் அல்பீடோ தங்கியிருந்தபோது, அவனது இல்லம் கண்டி மன்னனுக்கு ஆதரவான புரட்சியாளர்களால் தீக்கிரையாகியது. அவ்வேளை கரையோரங்களிலும் கலவரங்கள் ஏற்பட்டன. றக்காவத்தை, நீர்கொழும்பு ஆகிய பகுதிகளைப் புரட்சியாளர்களிடம் போர்த்துக்கேயர் பறிகொடுக்க நேர்ந்தது. நீர்கொழும்பில் பாதிரிமார் கொல்லப்பட்டதோடு கிறிஸ்தவ தேவாலயங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. போர்த்துக்கேயர் கொழும்புக் கோட்டைக்குத் திரும்ப நேர்ந்தது. ஒல்லாந்தர் வருவதற்கு இதுவே தக்க தருணம் என அவர்களுக்கு விமலதர்மசூரியன் செய்தி அனுப்பினான். ஒல்லாந்தக் கிழக்கிந்தியக் கம்பனி மீண்டும் மூன்று மாதங்களின் பின்னர் சீபொல்ட் டி வார்ட் தலைமையில்


இலங்கையில் ஒல்லாந்தர் காலனி ஆயுத சின்னம்

கண்டி மன்னனைச் சந்திக்க வந்தது. போர்த்துக்கேயரின் காலிக் கோட்டையைக் கடல் மூலமும் தரை மூலமும் கைப்பற்றி அவர்களை முடக்குமாறு மன்னன், மகா முதலியார் மனுவல் டயஸ் மூலம் தகவல் அனுப்பினான். ஆனால், டி வார்ட் மட்டக்களப்பில் சிலகாலம் தங்கியிருக்க விரும்பினான். அவ்வழியே வந்த போர்த்துக்கேயக் கப்பல்களைக் கைப்பபற்றி விட்டு கப்பலோடு வர்த்தகப் பொருட்களைத் தனதாக்கிக் கொண்டபின் அவற்றிலிருந்த போர்த்துக்கேயருக்கு மன்னிப்பளித்து அவர்களை விடுவித்தான். மனுவல் டயஸ், பிடிபட்ட போர்த்துக்கேயர்களை மன்னனிடம் கையளிக்குமாறு கேட்டும் டி வார்ட் அதற்கு இணங்காது அவர்களை விடுவித்தான். அதன்பின்னர் கண்டிக்கு வந்து அரசனைச் சந்தித்தான். அரண்மனையில் வரவேற்கப்பட்ட டி வார்ட் விருந்தின்போது குடிவெறியில் மன்ன்னைப் பாதிக்கும் விதமாக உளறிக்கொட்டியமையால் கோபமுற்ற விமலதர்மசூரியன், டி வார்ட்டையும் அவனது 50 வீரர்களையும் சிரச்சேதம் செய்து விடுமாறு கட்டளையிட்டான். கட்டளை நிறைவேறியது. மட்டக்களப்பில் காத்திருந்த ஒல்லாந்தரின் கப்பல்களின் அடுத்த தலைவன் யாகோப் பீற்றர்சனுக்கு அத்தண்டனைபற்றி விளக்கம் கொடுத்தும் அவன் ஏற்காது கப்பல்களோடு பயணப்பட்டான்.


இலங்கையில் ஒல்லாந்தர் காலத்து கிழக்கிந்திய கம்பனிக் கொடி

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி வளங்கள் உரிய முறையில் பகிரப்படவில்லை- பந்துல கவலை

வளப்பற்றாக்குறையால் கிராமப் புறங்களில் வாழும் பிள்ளைகள் இலவசக் கல்வியைப் பெறுவதில் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவமொன்றிலேயே அமைச்சர் இந்தக் கருத்தை வெளியிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சில பாடசாலைகளில் தமது பிள்ளைகளை அனுமதிப்பதற்கு பெற்றோர்கள் முன்வருவதில்லை. இதற்கமைய 25 வீதமான பாடசாலைகளுக்கு முதலாம் தரத்தில் பிள்ளைகளை அனுமதிப்பதற்கான 10 விண்ணப்பங்கள் கூட கிடைப்பதில்லை.

கல்வி நிரல்படுத்தலுக்கு அமைய 56 வீத பாடசாலைகளில் மாத்திரமே உரிய தேர்ச்சி மட்டம் காணப்படுவதாக தெரிவித்த அமைச்சர் இந்த பாடசாலைகளில் பிள்ளைகளை அனுமதிப்பதில் பெற்றோர் அதிக ஆர்வம் கொண்டுள்ளதாகவும் கூறினார்.

வளங்கள் உரிய முறையில் பகிரப்படாமையினால் கிராமப்புறங்களில் வாழும் பிள்ளைகள் இலவசக் கல்விக்கான உரிமையை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது என்றார். (அ-2)



யா/நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலைக்கு சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் நடராஜா திருக்குமரனினால் நிழற்பிரதி இயந்திரம் ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை கல்லூரிச்சமூகத்திடம் அன்பளிப்புச் செய்யப்பட்டதைப் படத்தில் காணலாம்.

## 'ஜீவநதி' 50 ஆவது இதழ் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

ஜீவநதி சிறப்புமலரின் 50 ஆவது இதழ் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அல்வாய் கலை அகத்தில் எழுத்தாளர் தெணியான் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நூலின் வெளியீட்டுரையினை ஓய்வு பெற்ற அதிபர் கி.நடராஜா ஆற்ற முதற்பிரதியை பருத்தித்துறை பிரதேச சபையின் உபதவிசாளர் மா.லோகசிங்கம் பெற்றுக்கொள்வார். மதிப்பீட்டுரையினை கிளிநொச்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.இதயராஜா ஆற்றவுள்ளார். இந்நிகழ்வில் வீட்டுக்கும் நாட்டுக்கும் பெருமை சேர்ப்பவர்கள் குடும்பத் தலைவர்களா? இல்லத்தரசிகளா? எனும் தலைப்பிலான சிறப்புப் பட்டிமன்றமும் நடைபெறவுள்ளது. இதன் நடுவராக யாழ்ப்பாண பல்கலைக்கழக விரிவுரையாளர் இ.இராஜேஸ் கண்ணன் கலந்து கொள்வார். (அ-9)

# 13 ஆவது திருத்த சட்டமூலத்தை முடிந்தால் நிறைவேற்றுங்கள்

## ஐ.தே.க. சவால்!

13 ஆம் திருத்தச் சட்டத்தை இரத்து செய்வது குறித்து முடிந்தால் நாடாளுமன்றில் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றிக் காட்டுமாறு மத்திய மாகாண ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் சஞ்சீவ கவிரட்ன தெரிவித்துள்ளார்.

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வாகவே 13 ஆம் திருத்தச் சட்டம் முன்வைக்கப்பட்டது. 13 ஆவது திருத்தச் சட்டத்தை இரத்து செய்வது குறித்து ஊடக கண்காட்சிகளை நடத்தாது, முடிந்தால் நாடாளுமன்றில் தீர்மானம் நிறைவேற்றிக் காட்டவும்.

13 ஆம் திருத்தச் சட்டத்திற்கு அப்பாலான தீர்வுத் திட்டமொன்றை முன்வைப்பதாக அரசாங்கம், இந்தியா மற்றும் சர்வதேச நாடுகளிடம் வாக்குறுதி அளித்துள்ளது. இவ்வாறான ஓர் நிலையில் அமைச்சர் விமல் வீரவன்ச ஊடகங்களில் போலிப் பிரசாரம் செய்து வருகின்றார்.

விமல் வீரவன்சவின் கட்சி உறுப்பினர் ஒருவரே மத்திய மாகாண விவசாய அமைச்சராக கடமையாற்றி வருகின்றார். அண்மையில் கிழக்கில் நடைபெற்ற தேர்தலிலும் விமலின் கட்சி உறுப்பினர் போட்டியிட்டு அமைச்சு பதவியையும் பெற்றுக் கொண்டார்.

வாகனம் உள்ளிட்ட சகல வசதிகளையும் இவர்கள் அனுபவித்து வருகின்றனர். மாகாண சபைகளை பாதுகாத்துக் கொள்வதற்காக ஆளும் எதிர்க்கட்சிகள் இணைந்து செயற்பட வேண்டும்.

மாகாண சபை முறைமையினால் மாகாணங்களுக்கு பாரியளவில் நன்மைகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

மாகாண சபைகளுக்கு மேலும் அதிகாரங்களை பகிர்வது குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகின்ற நிலையில் விமல் வீரவன்ச போன்றவர்கள் போலியான ஊடகங்களில் பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றனர் என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

## யம சங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் மயிலணி திருக்குடவாயில் ஸ்ரீவிஸ்வநாதசுவாமி ஆலயத்தில் யமசங்கார உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது. (அ-9)

# பிரதம நீதியரசர் பொருத்தமான தீர்மானத்தை எடுக்க வேண்டும்

## சரத் என் சில்வா அறிவுரை

குற்றவியல் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ள தற்போதைய பிரதம நீதியரசர் ஷிராணி பண்டார நாயக்க தீர்மானம் ஒன்றை எடுக்க வேண்டுமென முன்னாள் நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் விசாரணைகளுக்கு முகம் கொடுக்காமல் பிரதம நீதியரசர் தீர்மானம் ஒன்றை எடுக்க வேண்டும். இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு,

தமக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை என நிரூபித்தல், மறு புறத்தில் நாடாளுமன்றில் விசாரணைகளுக்காக ஆஜராகும் நிலைமை சர்ச்சைகளை ஏற்படுத்தக்கூடும்.

இது நீதிமன்றக் கட்டமைப்பின் செயற்பாடுகளை மோசமாக பாதிக்கும். நான் அண்மையில் ஜனாதிபதியை சந்தித்து பிரதம நீதியரசருக்கு எதிரான நடவ்டிக்கைகளை கைவிடுமாறு கோரினேன்.

எனினும் குற்றச்சாட்டுக்கள் வலுவானவை என்பதனால் அவ்வாறு செய்ய முடியாது என ஜனாதிபதி என்னிடம் கூறினார்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு விசாரணைகளில் பங்கேற்காது வேறு நடவடிக்கை ஒன்றை பிரதம நீதியரசர் எடுத்தால் அது பொருத்தமானதாக அமையும் என்பதே எனது கருத்தாகும் என்றார். (அ-2)

# பரவிவரும் பாதீனியத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் அதிகரித்து வரும் நச்சுச்செடியான பாதீனியத்தை அகற்றுவதற்கு நீர்ப்பாசன திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

வவுனியா குளங்கள் அமைந்துள்ள பகுதிகளில் அதிகரித்து காணப்படும் இந்த செடியினை முதற்கட்டமாக கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் நேற்றைய தினம் நீர்ப்பாசன திணைக்களம் தமது ஊழியர்கள் மூலம் சிரமதான வேலைத்திட்டத்தினை ஆரம்பித்து வைத்தனர்.

விவசாய நடவடிக்கைகள் ஆரம்பித்துள்ளமையினால் எதிர்காலத்தில் வயல்களுக்கு நீர்ப்பாசனம் செய்யும் பொது நீரின் மூலமாக வயல் நிலங்களுக்கு பாதீனியம் பரவுவதை தடுப்பதற்கே முதற்கட்டமாக தாம் வவுனியா குளம் சூழ்ந்த பகுதியில் நடவடிக்கை எடுத்துள்ளதாக நீர்ப்பாசன திணைக்களத்தின் அதிகாரியொருவர் தெரிவித்தார். (அ-2)

# சர்வாதிகார ஆட்சி நோக்கு நாடு நகர்ந்து செல்கிறது

## ஐ.தே.க.முன்னாள் பிரதித் தலைவர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

வடகொரிய பாணியிலான சர்வாதிகார ஆட்சி நோக்கி நாடு நகர்வதாக ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டபோது அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடகொரியா, சிம்பாப்பே போன்ற நாடுகளில் காணப்படும் சர்வாதிகார ஆட்சியை ஒத்த வகையில் இலங்கையின் ஆட்சி முறை மாற்றமடைந்து செல்கிறது. சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் நீதிமன்றம் சுயாதீனமாக இயங்கக் கூடிய சுழ்நிலை உருவாக்கப்பட வேண்டும்.

அண்மையில் சட்டமா அதிபர் திணைக்களம் நேரடியாக ஜனாதிபதியின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. 17 ஆம் திருத்தச் சட்டம் இரத்துச் செய்யப்பட்டதன் மூலம் நாட்டில் பாரியளவு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

ஜனநாயக நெறிமுறைகளுக்கு புறம்பான வகையிலான நீதிமன்றத்தின் மீதான தலையீடுகள் ஏற்புடையதல்ல என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

## பாடநெறிக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவகத்தின் ஆசிரியர் வலுவூட்டல் திணைக்களத்தினால் நடத்தப்படும் மேலதிக கற்கைநெறி (ALIC) சிங்களப் பாடநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மேலதிக மொழி விருத்திக் கற்கைநெறி நிலைய இணைப்பாளர் ஏ.அரியரத்னம் அறிவித்துள்ளார்.

இக்கற்கை நெறி வார இறுதி நாட்களிலும் பாடசாலை விடுமுறைத் தினங்களிலும் மொடியூல்களின் ஊடாகவும் நேர்முக அமர்வுகளினூடாகவும் நடத்தப்படும்.

யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும் யா/சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியிலும் அமைந்துள்ள மேற்படி பயிற்சி நிலையங்களில் இணைந்து கற்க விரும்புவோர் நிலைய இணைப்பாளர்களிடம் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறும் அவர் கேட்டுள்ளார். (அ-9)

# பல்கலை. மாணவர்களுக்கு தலைமைத்துவப் பயிற்சி

## டிசெம்பர் 2 இல் ஆரம்பம்

பல்கலைக்கழகத்திற்கு இம்முறை தெரிவாகியுள்ள மாணவர்களுக்கான தலைமைத்துவ பயிற்சியை எதிர்வரும் டிசெம்பர் 2 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக உயர் கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

கடந்த காலங்களில் இடம்பெற்ற தலைமைத்துவப் பயிற்சி போன்றே இம்முறையும் இடம்பெறும் என உயர்கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன தெரிவித்தார்.

இம்முறை பல்கலைக்கழகத்திற்கு அதிக மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படுவதால் மூன்று கட்டங்களாக தலைமைத்துவ பயிற்சி அளிக்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.

இது குறித்து எதிர்வரும் நாட்களில் மாணவர்களுக்கு தெளிவுபடுத்தப்படவுள்ளதாக அவர் கூறியுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.வந்த சர்வமத குழுவிடம்

# பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்க சமாதான குழுவினர் வலியுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும் என யாழ்ப்பாணத்திற்கு நேற்று முன்தினம் வருகை தந்த சர்வமத சமாதானப் பேரவையிடம் சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழுவினர் தெரிவித்த தோடு அரசாங்கத்திடம் இந்த சட்டத்தை நீக்குமாறு வலியுறுத்த வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அகில இலங்கை சர்வமத சமாதானப் பேரவையின் தலைவர் வெல்லாவல விமலரட்ண தேரர்தலைமையிலான குழுவினர் சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழுவினருடன் யாழ்.வணிகர் கழக மாநாட்டு மண்டபத்தில் சந்தித்து கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பின் போதே சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழுவின் செயலாளர் எஸ்.பரமநாதன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் தற்போது பயங்கரவாதம் இல்லை. அப்படியிருக்கும் போது ஏன் பயங்கரவாதத் தடைச்சட்டம் அந்தப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தினால் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றது.

போரினால் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர். அதன் வடுக்களிலிருந்து இன்னும் அவர்கள் மீளவில்லை. சமாதானம், நல்லெண்ணம் ஏற்படுத்தப்படவில்லை.

மீள்குடியேற்றம் விரைவுபடுத்தப்பட வேண்டும். வலிகாமம் வடக்கில் மீள்குடியேற்றம் சாத்தியமற்றதொன்றாக மாறி வருகிறது. இராணுவத்தினரால் காணிகள் அபகரிக்கப்பட்டு வருகின்றன.

இதனை கற்றுக் கொண்ட பாடங்களும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரையிலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தின் செயற்பாடுகள் கட்டுப்படுத்தப்படுவதோடு படைகள் குறைக்கப்பட வேண்டும்.

அவர்களின் கட்டுப்பாட்டின் கீழுள்ள பொது மக்களின் வீடுகள், காணிகள் விடுவிக்கப்பட வேண்டும்.

இதேவேளை யாழ்ப்பாணத்திலுள்ள முஸ்லிம் மதத்தவர்களின் பிரதிநிதிகளினாலும் கருத்துக்கள் கூறப்பட்டன. அதாவது கடந்த 3 வருடத்திற்கு முன்பு மரணத்திற்குரிய பிரதேசமாக யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடக்கு மாகாணம் காணப்பட்டதாகவும் ஆனால் தற்போது சமாதானம் ஏற்பட்டுள்ளதாகவும் தமிழ், முஸ்லிம் மக்கள் ஒற்றுமையுடன் வாழ்வதாகவும் குறிப்பிட்டனர்.

இதேவேளை, அகில இலங்கை சர்வமத சமாதானப் பேரவையின் தலைவர் உரையாற்றும்போது, இங்குள்ளவர்களினால் விடுக்கப்பட்டுள்ள வேண்டுகோள் தொடர்பில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடும் போது எடுத்துக் கூறுவதாகவும் உறுதியளித்தார்.

இதேவேளை, இந்தக் குழுவினர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு சென்று அங்கு ஜப்பான் நாட்டின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்டு வரும் விடுதிக் கட்டடத் தொகுதியை பார்வையிட்டதோடு அரியாலை, நாவலடி போன்ற பகுதிகளுக்கும் சென்று மீள்குடியேற்றப்பட்ட மக்களை சந்தித்து கலந்துரையாடினார்கள். (எ-6)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

**தனிமனித ஆளுமை அபிவிருத்தி** கருத்தரங்கு நாளை சனிக்கிழமையும் எதிர்வரும் 17 ஆம் திகதி சனிக்கிழமையும் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 12.30 மணிவரை கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

நல்லூர் பிரதேசசபை செயலாளர் மேரி ஜோசப் சாந்தசீலனால் நடத்தப்படவுள்ள இக்கருத்தரங்கில் 18 வயதிற்கு மேற்பட்டவர்கள் கலந்து கொள்ள முடியும். அத்துடன் பயிற்சி முடிவில் சான்றிதழும் வழங்கப்படும்.

☆☆☆☆☆☆☆

யாழ்ப்பாண மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் மற்றும் நிஸ்கோ பிரிவு இணைந்து நடத்தும் தொழில் முயற்சியாளர்களுக்கான கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்.மாவட்ட நிஸ்கோ பொது முகாமையாளர் ப.பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவி இயக்குநர் த.ஈஸ்வரராஜா கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். (அ-9)

# ஐ.தே.கவுடன் தொடர்புகளை பேணும் திட்டம் என்னிடமில்லை

### முன்னாள் பிரதம நீதியரசர் தெரிவு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியுடன் தொடர்புகளை பேணும் திட்டமில்லை என முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பு நாரஹேன்பிட்டியில் நடைபெற்ற கூட்டமொன்றில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

பிரவேசிக்க முயற்சிக்காத கதவு ஒன்றை மூடுவதற்கு ரணில் விக்ரமசிங்க முயற்சிக்கின்றார். இந்த முயற்சி பிரயோசனமற்ற ஓர் முயற்சியாகும்.

கொள்கை ரீதியான போராட்டம் ஒன்றையே முன்னெடுக்கின்றேன். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாமல் செய்து நாட்டில் ஜனநாயகத்தை நிறைவேற்றுவதே எனது நோக்கமாகும்.

சரத் என்.சில்வாவை கட்சியின் போராட்டங்களில் இணைத்துக் கொள்வதில்லை என அண்மையில் ஐக்கிய தேசியக்கட்சி அறிவித்திருந்தது.

இந்தக் கருத்துக்கு பதிலளிக்கும் வகையில் சரத் என்.சில்வா இதனைத் தெரிவித்துள்ளார்.

18 ஆண்டுகளில் 28 தேர்தல்களில் தோல்வியடைந்த ஓர் கட்சித் தலைவருடன் இணைந்து செயற்படும் எண்ணம் கிடையாது என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# பொலிஸ் நிலையங்களுக்கு திடீர் விஜயம் மேற்கொள்வோம்

### இல.மனிதவுரிமை ஆணைக்குழு

பொலிஸ் நிலையங்களுக்கு திடீர் விஜயங்கள் மேற்கொள்ளப்படும் என இலங்கை மனித வுரிமை ஆணைக்குழு அறிவித்துள்ளது.

சட்டவிரோத கைதிகள், கைதிகள் மீதான அடக்குமுறைகள் தொடர்பிலான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை நடத்தும் நோக்கில் இவ்வாறு திடீர் விஜயங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

முன் அறிவித்தல் இன்றி திடீரென பொலிஸ் நிலையங்களுக்கு விஜயம் செய்து நிலைமைகள் நேரில் கண்காணிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோத கைதிகள் தொடர்பில் மனித வுரிமை ஆணைக்குழுவிற்கு நேரடியாக அறிவிக்க முடியும் என ஆணைக்குழுவின் தலைவர் பிரதீபா மஹாநாமஹேவா தெரிவித்துள்ளார்.

மனிதவுரிமை ஆணைக்குழுவின் பிராந்தியக் கிளைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

பாதிக்கப்படுவோருக்கு காத்திரமான சேவைகளை வழங்கும் நோக்கில் வட்க்கு, கிழக்கு உள்ளிட்ட ஆறு மாகாணங்களில் பிராந்திய கிளைகள் நிறுவப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. (அ-2)

## சைவசமய செயற்பாடும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை இந்து சமய விருத்திச்சங்க சைவத்திருமுறை விழாவும் சைவ சமய செயற்பாட்டு பரிசளிப்பு விழாவும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆனைக்கோட்டை மூத்தநயினார் ஆலய திருமண மண்டபத்தில் இளைப்பாறிய உதவிக்கல்விப் பணிப்பாளர் ஆ.வ. கணேசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு ஆசியுரையினை மூத்த நயினார் தேவஸ்தான குரு சிவஸ்ரீ க.கிருஸ்ணேஸ்வரக் குருக்கள் ஆற்றவுள்ளார் என சைவசமய செயற்பாடுகள் குழுவினர் அறிவித்துள்ளனர். (அ-9)

# அரசிற்கு எதிராக ஷிராணியை பயன்படுத்தும் எதிர்க்கட்சிகள்

### அமைச்சர் டலஸ் குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு எதிராக பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவை பயன்படுத்திக் கொள்ள எதிர்க்கட்சிகள் முயற்சி செய்து வருவதாக இளைஞர் விவகார அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

மஹாவலி கேந்திர நிலையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

ஷிராணி பண்டாரநாயக்க விவகாரம் தொடர்பில் சிலர் முதலைக்கண்ணீர் வடிப்பதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

கடந்த காலங்களில் பிரதம நீதியரசர் மற்றும் அவரது கணவருக்கு எதிராக பாராளுமன்றில் எதிர்க்கட்சியினர் கருத்து வெளியிட்டிருந்ததாக குறிப்பிட்டுள்ளார். அரசாங்கத்தை பலவீனப்படுத்தும் நோக்கில் எதிர்க்கட்சிகள் இவ்வாறு செயற்பட்டு வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (அ-2)




இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் மற்றும் இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு என்பன இணைந்து யாழ்.மாவட்டத்திலுள்ள ஊடகத்துறை சார்ந்தவர்களுக்கு அண்மையில் யாழ்.ஞானம்ஸ் ஹோட்டலில் பயிற்சிப் பட்டறையொன்றினை நடத்திய போது.... (படங்கள்:- எஸ்.ஆர்.கரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 100 கோடி ரூபா செலவழித்து நிறைவேற்றிக் கொள்ள, “திவிநெகும” சட்டத்தில் என்னதான் இருக்கிறது?

எம்.எஸ்.எம். ஐயூப்

“மே றட்டே மினிஸ்ஸூ, கெலின்னே பிஸ்ஸூ” என்று ஆரம்பிக்கப்படும் ஒரு சிங்கள பாடல் இருக்கின்றது. இந்நாட்டு மக்கள் பைத்தியக்காரத் தனமாகவே நடந்து கொள்கிறார்கள் என்பதே அந்தபாடல் வரியின் பொருளாகும்.

சில மாதங்களுக்கு முன்னர் நாட்டில் முக்கிய தலைவர் ஒருவர் இந்த பாடலை விமர்சித்து இருந்தார். இது இலங்கை மக்கள் தம்மையே இழிவுபடுத்திக் கொள்ளும் பாடல் என அவர் கூறினார். அவர் நாட்டில், வகிக்கும் அந்தஸ்த்தின் காரணமாகவோ என்னவோ அதன்பின்னர் அந்த பாடலை எந்தவொரு இலத்திரனியல் ஊடகத்திலும் கேட்கக் கூடியதாக இல்லை.

ஆனால், இன்று நாட்டில் அரசியல் களத்தில் இடம் பெறும் சம்பவங்களைப் பார்க்கும்போது இந்தப் பாடல் அவ்வளவு மோசமானதாகவும் கருத முடியாது. எந்தவொரு அரசியல் கட்சிக்கும் மக்களின் பிரச்சினைகள் முக்கியமில்லை. எல்லோருக்கும் ஆளும் கட்சியிலோ அல்லது எதிர்க்கட்சியிலோ தமக்கு இருக்கும் பதவிகள், பட்டங்கள் ஆகியவற்றை பாதுகாத்துக் கொள்வதுதான் முக்கியமானதாக இருக்கிறது.

ஐக்கிய தேசியக் கட்சியை எடுத்துக் கொள்ளுங்கள். சர்வாதிகாரம் என அவர்களே வர்ணிக்கும் அரசாங்கத்தின் செயற்பாடுகளை விட தமக்குள்ளே இருக்கும் பிரச்சினைகள் தான் அவர்களுக்கு பாரிய பிரச்சினைகளாக தெரிகின்றன. அதேபோல் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு நாட்டின் மிகவும் முக்கியமான பிரச்சினையாக அவர்களே கூறும் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்காக அரசாங்கத்தை வற்புறுத்துவதைவிட தமிழ்த் தேசிய கூட்டமைப்பை பதிவு செய்யும் விடயம் முக்கியமானதாக இருக்கிறது.

எனவே, அக்கூட்டமைப்பின் உறுப்புக் கட்சிகள் அந்த விடயத்தில் தர்க்கித்துக் கொண்டும் காலத்தைக் கடத்திக்கொண்டும் இருக்கின்றன. தமிழ் தேசியக் கூட்டமைப்பை பதிவு செய்தாலும் அதன் உறுப்புக்கட்சிகள் தொடர்ந்தும் தனித்தனி கட்சிகளாக இருக்கவே போகின்றன என்ற உண்மையை அக்கட்சிகளின் தலைவர்கள் கண்டு கொள்ளவில்லை போலும்.

திவிநெகும சட்டமூலம் தொடர்பாக நாட்டில் உருவாகியிருக்கும் நிலைமை மேற்படி பாடலை மேலும் எமக்கு ஞாபகம் ஊட்டிக் கொண்டே இருக்கிறது. நன்றாக இந்த சட்டமூலத்தை படித்துப் பார்த்தால், தமிழ்க் கட்சிகளும் இடதுசாரிக் கட்சிகளும் ஏன் இதனை இவ்வளவு கடுமையாக எதிர்க்க வேண்டும் என்றும் அரசாங்கம் இதனை நிறைவேற்றிக்கொள்ள ஏன் இவ்வளவு வெறியோடு செயற்படவேண்டும் என்றும் கேட்கத் தோன்றுகிறது.

இந்தச் சட்டமூலத்தின் மூலம் மாகாணசபைகளுக்கு பரவலாக்கப்பட்டுள்ள அதிகாரங்களை மத்திய அரசாங்கம் மீண்டும் சுவீகரித்துக் கொள்ளப் போவதாக தமிழ் மற்றும் இடதுசாரி கட்சிகள் குற்றஞ் சாட்டுகின்றன.

ஆனால், இச்சட்டமூலத்தால் சிறுபான்மை மக்களின் உரிமைகள் பாதிக்கப்படும் வகையில் மாகாண சபைகளுக்கு பரவலாக்கப்பட்டுள்ள அதிகாரங்களை மத்திய அரசாங்கம் சுவீகரித்துக் கொள்ளப் போவதாக வாதிட முடியாது.

உதாரணமாக, வறுமை ஒழிப்புக்காக, திவிநெகும திணைக்களம் செயற்படும் என இச்சட்டமூலத்தில் கூறப்படுகிறது. வறுமை ஒழிப்பானது, அரசியலமைப்பின் படி மாகாண சபைகளின் பொறுப்புக்களில் ஒன்றாகும். இது மாகாண சபைகளுக்கு பரவலாக்கப்பட்டுள்ள அதிகாரங்களை மத்திய அரசாங்கம் சுவீகரித்துக் கொள்வதாகும் என தமிழ் மற்றும் இடதுசாரி கட்சிகள் வாதிடுகின்றன.

வறுமை ஒழிப்பானது, அரசியலமைப்பின் மாகாண சபை பட்டியலில் உள்ள ஒரு விடயம்தான். ஆனால், திவிநெகும சட்டமூலத்தின் மூலமானது, மத்திய அரசாங்கம் வறுமை ஒழிப்பிற்காக செயற்படுவதனால் சிறுபான்மை மக்கள் எவ்வாறு பாதிக்கப் படப் போகிறார்கள்?

அதேவேளை, பெறுபேறுகள் எவ்வாறாக இருப்பினும் வர்த்தக அமைச்சு வறுமை ஒழிப்புக்காகவென செயற்படவில்லையா? அரசாங்கத்தின் வரவு- செலவுத் திட்டத்தின் நோக்கங்களில் வறுமை ஒழிப்பும் ஒன்று அல்லவா? அதுவும் அதிகார பரவலாக்கலுக்கு முரணானதா?

மாகாணசபைகளின் அதிகாரங்களுடன் தொடர்புடைய திவிநெகும சட்டமூலத்தில் உள்ள மற்றொரு விடயம் தான், உணவுப் பாதுகாப்பு என்ற விடயம். இதுவும் மாகாண சபைகளின் அதிகாரங்களுடன் தொடர்புடையதாக இருந்தபோதிலும் மேலும் பல சட்டங்கள் மூலம் மத்திய அரசாங்கமும் உணவுப் பாதுகாப்பு பணியில் ஈடுபட சட்டம் இடம் கொடுத்து இருக்கிறது. இதனால் அதிகார பரவலாக்கல் முறைக்கு என்ன பாதிப்பு ஏற்படப்போகிறது?

இவற்றைப்போல் அபிவிருத்திக்கு தேவையான பௌதிக மற்றும் சமூக உட்கட்டமைப்பை ஏற்படுத்தல், சமூக பாதுகாப்பு வலைப் பின்னலை ஏற்படுத்துதல் போன்றவை தான் மாகாண சபை அதிகாரங்களுடன் மோதும் விடயங்களாக திவிநெகும சட்டமூலத்தில் உள்ளன.

சட்டத்தின் கண்ணோட்டத்தில் இவை மாகாண சபைகளின் அதிகாரங்களை மீறுவதாக வாதிடலாம். ஆனால், இவை ஏனைய பல சட்டங்களிலும் வருடாந்தம் சமர்ப்பிக்கப்படும் தேசிய வரவு- செலவு திட்டத்திலும் உள்ளவையே தவிர, சிறுபான்மை மக்களின் உரிமைகளை பாதிக்கும் விடயங்கள் அல்ல.


அதேவேளை, உத்தேச திவிநெகும திணைக்களத்தில் இணைக்கப்படவிருக்கும் சமுர்த்தி அதிகாரசபை, தக்ஸின அதிகாரசபை மற்றும் உடரட்ட அதிகாரசபை ஆகியவை ஏற்கனவே இயங்கிக் கொண்டு இருக்கின்றன. அந்த அதிகார சபைகளிடம் உள்ள மேற்படி அதிகாரங்களையே திவிநெகும திணைக்களத்திடம் வழங்கப்படவிருக்கிறது.

எனவே, தமிழ் கட்சிகளும் இடதுசாரி கட்சிகளும் அரசாங்கம் திவிநெகும சட்டமூலத்தின் மூலம் ஏதோ தமிழ்பேசும் மக்களுக்கு எதிராக போர் பிரகடனப்படுத்தியதைப்போல், அதனை எப்படியாவது தோற்கடிக்க வேண்டும் என்று கங்கனங் கட்டிக் கொண்டு செயற்படுவது வெறும் அரசியல் நோக்கம் கொண்ட செயலே.

ஆனால், திவிநெகும சட்டத்தின்படி திவிநெகும திணைக்களம் எந்தவொரு நபரையும் அழைத்து அவரது பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் சொத்து விவரங்களை பற்றிய விவரங்களைக் கேரலாம். அவர் அவற்றை வழங்காதிருப்பது தண்டனைக்குரிய குற்றமாகும். இது அதிகார பரவலாக்கல் முறையோடு சம்பந்தப்பட்ட விடயம் அல்ல. அது தனிப்பட்டவர்களின் பொருளாதார சுதந்திரத்தை பாரதூரமாக பாதிக்கும் விடயமாகும். [illegible] வதைப் பற்றிப் பேசுவதை விட்டுவிட்டு எதிர்க் கட்சியிலுள்ள அரசியல் கட்சிகள் அர்த்தமற்ற வகையில் அதிகார பரவலாக்கல் பாதிக்கப்படப் போவதாக வாதிட்டுக் கொண்டு இருக்கின்றன.

அதேபோல் இந்தச்சட்டமூலத்தால் அரசாங்கம் சொல்வதைப்போல் நாட்டு மக்களுக்கு பெரிதாக எந்த நன்மையும் ஏற்படப் போவதில்லை. வறுமை ஒழிப்பு, உணவுப் பாதுகாப்பு, அபிவிருத்திக்கு தேவையான பௌதிக மற்றும் சமூக உட்கட்டமைப்பை உருவாக்குதல் மற்றும் சமூக பாதுகாப்பு வலைப் பின்னலை ஏற்படுத்துதல் போன்ற அலங்கார வார்த்தைகளைக் கொண்ட எத்தனையோ சட்டங்களை நாடாளுமன்றம் கடந்த பல தசாப்தங்களாக நிறைவேற்றியிருக்கிறது. ஆனால், நாட்டில் வறுமை ஒழிக்கப்படவில்லை.

எனவே, அரசாங்கம் இந்த சட்டமூலத்தை நிறைவேற்றிக் கொள்ள ஏன் இவ்வளவு அவதிப்படுகிறது என்பது விளங்கவில்லை. சமுர்த்தி



வங்கிகளில் இருக்கும் பல ஆயிரம் கோடி ரூபா பணத்தை அமைச்சர் பஸில் ராஜபக்சவின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதே இந்த சட்டத்தின் நோக்கம் என்றும் எதிர்க் கட்சிகள் வாதிடுகின்றன. அதுவும் சரியான வாதமாக தெரியவில்லை.

சமுர்த்தி வங்கிகளில் இருக்கும் பணத்தை அமைச்சர் பஸில் ராஜபக்சவின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதுதான் இந்த சட்டத்தின் நோக்கம் என்றால், இந்த சட்டம் இல்லாமலேயே அது நடைபெறுகிறது. சமுர்த்தி அதிகாரசபை ஏற்கனவே அமைச்சர் பஸில் ராஜபக்சவின் அமைச்சின் கீழ்தான் இருக்கிறது. அதனை யாரால் தான் தடுக்க முடியும்?

அவ்வாறு இருக்க, கர்வத்தோடும் அகம்பாவத்தோடும் பிடிவாதத்தோடும் இந்த சட்டமூலத்தை நிறைவேற்றிக் கொள்ள அரசாங்கம் முயற்சிப்பது வேடிக்கையாகவும் இருக்கிறது. இப்போது இந்தப் பிரச்சினை உயர் நீதிமன்றத்துடனான மோதலாகவும் மாறியிருக்கிறது.

திவிநெகும சட்டமூலத்தை திருத்தாமல் நிறைவேற்ற வேண்டும் என்றால் சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கிறது. அவ்வாறு சர்வஜன வாக்கெடுப்பு நடத்த தயார் என அமைச்சர் பஸில் ராஜபக்ச கூறியிருக்கிறார். சர்வஜன வாக்கெடுப்பு நடந்தால் அரசாங்கம் எவ்வாறோ வெற்றிபெறும். அது நியாயமாக நடக்குமா என்பது வேறு விடயம்.

ஆனால், தற்போதைய நிலையில் நாடளாவிய சர்வஜன வாக்கெடுப்பு நடத்த தேர்தல் திணைக்களத்திற்கு குறைந்தது 100 கோடி ரூபாவாவது தேவைப்படும். (கடந்த ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்களுக்காக அதைவிட கூடுதலான தொகை பணம் செலவிடப்பட்டது) 100 கோடி ரூபா செலவழித்து நிறைவேற்றிக்கொள்ள திவிநெகும சட்டத்தில் என்ன தான் இருக்கிறது?

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




வலிகாமம் கல்வி வலயத்தின் அண்மையில் ஆசிரியர் தின நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் வரவேற்பு நடன நிகழ்வையும் படங்களில் காணலாம். (படங்கள்: மல்லாகச் செய்தியாளர்)

# ஈழத்தமிழர் அரசியல் பிரச்சினைக்கு ஐ.நா.தலைமையில் வாக்கெடுப்பு வேண்டும்

## வலியுறுத்துகிறார் மு.க.ஸ்டாலின்

**ஈழத்தமிழர்கள் பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு கிடைக்க இலங்கை மற்றும் புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்களிடம் ஐ.நா. மேற்பார்வையில் பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று தமிழக முன்னாள் துணை முதல்வரும் தி.மு.க பொருளாளருமான மு.க. ஸ்டாலின் வலியுறுத்தினார்.**

பிரித்தானியா தமிழர் பேரவை சார்பில் லண்டனில் உள்ள நாடாளுமன்ற கட்டடத்தில் உலகத் தமிழர் பன்னாட்டு தமிழ் மாநாடு நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் கருத்துரைக்கையில்,

கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக ஈழத் தமிழர்களுக்காக தி.மு.க குரல் கொடுத்து வருகிறது.

ஈழத்தமிழர் பிரச்சினையில் பொது மக்களின் கவனத்தை ஈர்ப்பதற்காக மாநாட்டுகள், பேரணிகள், ஆர்ப்பாட்டங்கள், பொதுக் கூட்டங்கள், மனிதச்சங்கிலிகள், உண்ணாவிரதங்கள் வேலைநிறுத்தம் என பல போராட்டங்கள் நடத்தியுள்ளோம்.

போருக்கு பின்னர் ஈழத்தமிழர்கள் சந்தித்து வரும் பிரச்சினைகளுக்கு இந்தியா மற்றும் சர்வதேச நாடுகளின் ஆதரவை திரட்டுவதற்காக டெசோ அமைப்பை கருணாநிதி மீண்டும் தொடங்கியுள்ளார்.

அண்மையில் சென்னையில் நடைபெற்ற டெசோ மாநாட்டில் 14 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இதன் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட விரிவான மனுவை கடந்த முதலாம் ஐ.நா. விலும் கடந்த 6 ஆம் திகதி ஐ.நா. மனித உரிமை ஆணையத்திலும் வழங்கியுள்ளோம்.

இலங்கை அரசின் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளோம். தக்க தருணத்தில் நடைபெறும் இந்த மாநாடு ஈழத்தமிழர்களின் மீது உலக நாடுகளின் கவனத்தை ஈர்க்க உதவியாக இருக்கும்.

இலங்கையில் சிறுபான்மையாக உள்ள தமிழர்களுக்கு சமத்துவம், கண்ணியம், சுய மரியாதை கிடைக்க வேண்டும். ஈழத்தமிழர்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு வேண்டும் என ஐ.நாவும் பல நாடுகளும் வலியுறுத்தியுள்ளன.

ஈழத்தமிழர்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழும் ஈழத்தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்களிடம் ஐ.நா. மேற்பார்வையில் பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்றார் ஸ்டாலின். (அ-2)

## சிங்கப்பூர் பிரஜை கைது

வெளிநாட்டு நாணயத்துடன் சிங்கப்பூருக்கு தப்பிச்செல்ல முற்பட்ட சிங்கப்பூர் பிரஜையை சர்வதேச பண்டாரநாயக்க விமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகள் கைது செய்துள்ளனர். இச்சம்பவம் நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது.

மூன்று மில்லியன் ரூபா பெறுமதி யான வெளிநாட்டு நாணயத்தை தனது மடிக்கணனியின் பையில் இவர் மறைத்து வைத்திருந்ததாகவும் சுங்க அதிகாரிகள் கூறியுள்ளனர். (அ-2)

## கந்தஷஷ்டி விழா

சரவணை பள்ளம்புலம் முருகமூர்த்தி ஆலயத்தில் கந்தஷஷ்டி விழா எதிர்வரும் 14 ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து பூசைகள் நடைபெற்று எதிர்வரும் 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை திருக்கல்யாண வைபவத்துடன் நிறைவு பெறவுள்ளது.

தினமும் காலை முற்பகல் 9.30 மணி வரை புராணபடலமும் முற்பகல் 11.30 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையும் நடைபெற்று சுவாமி வீதி வலம் வருதலும் நடைபெறும் எதிர்வரும் 19 ஆம்திகதி திங்கட்கிழமை சூரசங்கார உற்வசவம் நடைபெறுமென ஆலய அறங்காவற்சபை அறிவித்துள்ளது. (அ-9)

# வடக்கு முஸ்லிம்களின் ஆதரவை திரட்டும் முயற்சியில் அரசாங்கம்

## கபீர்ஹாசீம் எம்.பி.தெரிவிப்பு

வடக்கில் முஸ்லிம்களின் ஆதரவினை திரட்டும் முனைப்பில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசீம் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணசபைத் தேர்தலில் தனித்து போட்டியிட்டால் பாரிய தோல்வியை எதிர்நோக்க நேரிடும் என்பதனை அரசாங்கம் புரிந்து கொண்டுள்ளது.

இதனால் வடக்கைச் சேர்ந்த சில முஸ்லிம் மதத் தலைவர்கள் மற்றும் சமூக அமைப்புடன் அரசாங்கம் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளது.

தேர்தலை வெற்றியீட்டும் நோக்கிலேயே அரசாங்கம் இவ்வாறு செயற்பட்டு வருகிறது.

முஸ்லிம் மக்களின் ஆதரவுடன் வடமாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவதே அரசாங்கத்தின் இந்த புதிய முயற்சியின் உள்நோக்கம்.

அரசாங்கத்துடன் கூட்டணி வைத்துக் கொண்ட முஸ்லிம் கட்சிகள் தனது அடையாளத்தை இழந்துள்ளன. முஸ்லிம் மக்களின் நலனுக்காக ஐக்கிய தேசியக் கட்சி தொடர்ச்சியாக கடமையாற்றி வருகிறது.

முஸ்லிம் மதவழிபாட்டுத் தளங்கள் மீது தாக்குதல் நடத்தப்படுவதாகவும் இம்முறை ஹஜ் பெருநாள் விடுமுறையில் குளறுபடிகள் ஏற்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# ஷிராணியின் குற்றத்தை ஆராய 11 பேர் அங்கம் வகிக்கும் குழு

## கூட்டமைப்பு ஒரு உறுப்பினரை நியமிக்கும்

(கொழும்பு)

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிராக கொண்டு வரப்பட்டுள்ள குற்றவியல் பிரேரணையை ஆராயும் முகமாக அமைக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கு ஐக்கிய தேசியக் கட்சி இரண்டு உறுப்பினர்களை நியமித்துள்ளது.

எதிர்க்கட்சி பிரதம அமைப்பாளர் ஜோன் அமரதுங்க மற்றும் லக்ஸ்மன் கிரியெல்ல ஆகியோரே இந்தக் குழுவுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

11 பேர் அங்கம் வகிக்கும் இந்தக் குழுவில் எதிர்க்கட்சியின் சார்பில் 4 பேர் உள்ளடக்கப்படுகின்றனர்.

இதன்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஜே.வி.பியும் தலா ஒரு உறுப்பினரை இந்தக் குழுவுக்கு தெரிவு செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை இலங்கையின் பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணையில் 14 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)


# சிறுவர் சித்திரப்போட்டி

சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையத்தினால் வெளியிடப்படும் "**சிறுவர் செய்தி**" பத்திரிகையின் ஆதரவுடன் வட மாகாண சிறுவர்களது உளவள ஆற்றலை மேம்படுத்தும் **சிறுவர் சித்திரப்போட்டி**

போட்டியின் எண்ணக்கருக்கள்:-

- சிறுவர் எதிர்நோக்கும் பிரச்சினைகள்
- சிறுவர்களது எதிர்காலம்
- சமகால சிறுவர் நிலைகள்

**6-12 வயது கீழ்ப்பிரிவு**

**13-17 வயது மேற்பிரிவு**

- ஒருவர் ஒரு ஆக்கம் மட்டுமே அனுப்புதல் வேண்டும்.
- ஆக்கங்கள் பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலுடனே அனுப்பப்பட வேண்டும்.
- படம் வரைந்த மறு பக்கத்தில் வரைந்தவரது பெயர், தரம், பாடசாலை, வசிக்கும் இடம் என்பன தெளிவாக குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.
- வரைவதற்கு A 3 தாள் மட்டுமே உபயோகப்படுத்தல் வேண்டும்.
- சித்திரங்கள் **நவம்பர் 30 ஆம் திகதிக்குள்** கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

இரு பிரிவுகளிலும் வெற்றி பெறுபவர்களுக்கு

1 ஆம் பரிசு ரூபா 10000.00

2 ஆம் பரிசு ரூபா 5000.00

3 ஆம் பரிசு ரூபா 3000.00

**பெற்றுக் கொள்ளப்படும் அனைத்து சித்திரங்களும் பொது மண்டபத்தில் காட்சிப்படுத்தப்பட்டு நடுவர்களால் தெரிவு செய்யப்படும்.**

**ஆக்கங்களை வரைந்து அனுப்ப வேண்டிய முகவரி:-**

**சிறுவர் சித்திரப்போட்டி**
**சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையம்,**
**இல. 60A , பழைய பூங்கா வீதி,**
**சுண்டுக்குழி, யாழ்ப்பாணம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

275

## அம்புலிமாமா கதைகள்

## யோகியின் புரட்சி




திரிதாமரும் அவருடைய சீடரும் அந்தக் கிராமத்தினுள் நுழைந்தபோது அங்கு கோயில் அருகே அவர்கள் கண்ட காட்சி அவர்களைத் திடுக்கிடச் செய்தது. வற்றி, வறண்டு போயிருந்த ஓர் ஏழை மனிதனை மரத்தோடு மரமாகக் கட்டி வைத்து சாட்டையினால் அடித்துக் கொண்டிருந்தான் ஒரு முரடன். ஏழையின் மனைவி, முரடனின் கால்களைப் பிடித்து அவரை அடிக்கவேண்டாம் என்று நெஞ்சே வெடிக்கும்படி கதறினாள். அவர்களைச் சுற்றிக் கிராமத்தினர் கும்பலாகக் கூடியிருந்தனர்.

திரிதாமரின் சிஷ்யன் கௌசிலன் விபரம் கேட்டபோது, அந்த ஏழை மனிதனின் பெயர் வீரய்யன் என்றும் அவனைச் சாட்டையால் அடிப்பவன் புஜங்கன் என்றும் தெரியவந்தது. மூன்று தலைமுறைகளுக்கு முன் வீரய்யனின் முன்னோர்கள், புஜங்கனின் முன்னோர்களிடம் ஏதோ கடன் வாங்கினார்களாம். அதற்குப் பதிலாக வீரய்யனின் முன்னோர்கள் கொத்தடிமைகளாக புஜங்கனிடம் கூலியின்றி வேலை செய்து வந்தனர். ஆனால் இன்னமும் கடன் தீரவில்லை என்று சொல்லி புஜங்கன் வீரய்யன் குடும்பத்தை வேலை வாங்கி சக்கையாய் பிழிந்து வந்தான். வீரய்யனின் குழந்தை, குட்டிகள் கூட கொத்தடிமைகளாக புஜங்கனிடம் உழைத்தனர்.

வீரய்யனின் மூத்தமகன் சூர்யா சற்றே துடுக்கான பையன். மூன்று தலைமுறைகளாக தாங்கள் கொத்தடிமைகளாக வேலை செய்தும் புஜங்கன் இன்னும் கடன் பாக்கி இருப்பதாகச் சொல்லி வந்ததை அவன் நம்பவில்லை. ஒருநாள் கிராமத்தினர் அனைவர் முன்னாலும் அவன் புஜங்கனை எதிர்த்துக் கேள்விகள் கேட்டான்.

என் முன்னோர்கள் உன் முன்னோர்களிடம் வாங்கிய கடன் எவ்வளவு? மூன்று தலைமுறையாக நாங்கள் செய்யும் வேலைக்கு கூலி எவ்வளவு? இப்போது இன்றைய திகதியில் இன்னும் எவ்வளவு கடன் பாக்கி என்று அடுக்கடுக்காகக் கேள்விகள் கேட்க ஒரு கொத்தடிமை தன்னைக் கேள்வி கேட்பதா என்று கோபங்கொண்ட புஜங்கன் சூர்யாவை அடித்து உதைத்தான். பதிலுக்கு சூர்யாவும் அவனைப் பழிவாங்குவதாகச் சொல்லி தலைமறைவாகி விட்டான். அதனால் புஜங்கன் தன். ஆத்திரத்தை வீரய்யன் மீது காட்டி சூர்யாவை தன்னிடம் ஒப்படைக்கக்கூறி சாட்டையினால்



அடித்தான்.

முற்றும் துறந்த யோகியான திரிதாமருக்கே அதைக்கேட்டு இரத்தம் கொதித்தது. அவருடைய சிஷ்யன் அவருக்குமேல் உணர்ச்சிவசப்பட்டு புஜங்கா நீ செய்வது அக்கிரமம். கடன் பற்றிய கணக்கு வழக்குகளை காட்டு என்று கூச்சலிட்டான். இதனால் திடீரென அங்கிருந்த கிராமத்தினருக்கும் தைரியம் உண்டாகி எல்லோரும் புஜங்கனை நோக்கி கூச்சலிட ஆரம்பித்தனர்.

இதற்கெல்லாம் காரணம் யோகிதான் என்று சினந்த புஜங்கன் அவரை நோக்கி, சாமியாரே! நான் கடன் பாக்கி எவ்வளவு என்று சொன்னால் நீ தருவாயா? என்று கேட்டான்.

தருகிறேன். ஆனால், கடன் பாக்கி எவ்வளவு என்று சொல்! என்று திரிதாமர் உரக்கப்பேச புஜங்கன் சற்றுத் தடுமாறிப் போய் ஏதோ வாயில் வந்த ஒரு தொகையை குறிப்பிட்டான்.

அதற்கான பத்திரம் உன்னிடம் இருக்கிறா? என்று திரிதாமர் கேட்க ஆத்திரம் அடைந்த புஜங்கன் அந்தக் காலத்தில் பத்திரம் எழுதிக்கடன் கொடுப்பதில்லை. கடன் கணக்குகளை நாங்கள் எழுதி வைப்பதுமில்லை. எல்லாம் வாய்க்கணக்காகப் போடுவதுதான்! வீரய்யனிடம் கேளுங்கள்! அவன் முன்னோர்கள் கடன்வாங்கியது உண்மையா, இல்லையா என்று கேளுங்கள் என்று கத்தினான்.

எல்லோரும் வீரய்யனை நோக்க, அவனோ பரிதாபமாக, ஐயா, நாங்கள் ஏதோ கடன்பட்டிருக்கிறோம் என்று தெரியும். எவ்வளவு என்று என் தகப்பன், பாட்டன் சொன்னதேயில்லை என்றான். உடனே, திரிதாமர் தன் கையிலிருந்த தங்கக் கங்கணத்தைக் கழற்றி, புஜங்கனை நோக்கி நீட்டியபடி, இந்தா, படி இதை! இத்துடன் உன் கடன் தீர்ந்தது. வீரய்யன் குடும்பத்தை விடுதலை செய்! என்று உத்தரவிட்டார்.

அதைக்கையில் வாங்கிக் கொண்டு சற்றுநேரம் உற்றுப் பார்த்த பின் இது என் கடன் பாக்கிக்கு ஈடாகுமா என்று சந்தேகம்தான். இதற்கு மேலும் ஏதாவது எனக்குக் கொடுக்க வேண்டும் என்றான்.

அப்படியா என்ற திரிதாமர் அங்கு கூடியிருந்தவர்களைப் பார்த்து வீரய்யன் புஜங்கனிடம் கைநீட்டி கடன் வாங்கவில்லை. அவன் முன்னோர்கள் புஜங்கனின் முன்னோர்களிடம் மூன்று தலைமுறைக்கு முன்னதாகக் கடன்பட்டனர் என்பது வெறும் வாய்வழியே வந்த செய்தியே! இதற்கு எந்த அத்தாட்சியும் இல்லை. ஆனால் வீரய்யனின் பயந்த சுபாவத்தை பயன்படுத்திக் கொண்டு புஜங்கன் அவனை இன்னமும் மிகவும் கொடுமைப்படுத்துகிறான். நாம் கோழையாக இருக்கும் வரை நம்மை மற்றவர்கள் தங்கள் கால்களின் கீழ்போட்டு மிதித்துக் கொண்டே இருப்பார்கள். நீங்களே நியாயம் சொல்லுங்கள்! என்று சொல்ல கூட்டம் முழுவதும் புஜங்கனுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தனர்.

மறுபடியும் புஜங்கன் பக்கம் நோக்கிய திரிதாமர் புஜங்கா! இது நம் நாட்டு மன்னர் எனக்கு அளித்த விலை மதிப்பற்ற பரிசு! இதை விற்றால் உன்னைப் போல் நூறு பேருக்கும்மேல் என்னால் கொத்தடிமைகளாக விலைக்கு வாங்கமுடியும். இப்போதாவது சொல்! இதை வாங்கிக்கொண்டு நீ வீரய்யனை விடுதலை செய்வாயா? என்று முழங்கினார்.

திடீரென புஜங்கனின் கை, கால்கள் நடுங்கின. நா வறண்டது. பயத்தில் உடல் உறைந்தது. சுவாமி! இந்தக் கங்கணத்தை நீங்களே வைத்துக்கொள்ளுங்கள். வீரய்யனின் கடன் தீர்ந்துவிட்டது. என்னை விட்டு விடுங்கள் என்று கூறிவிட்டு அங்கு இருந்து ஓட்டம் பிடித்தான்.

மறுநாள் மதியம் திரிதாமரும் கௌசில்யனும் ஏரிக்கரையில் ஓய்வு எடுத்துக்கொண்டு இருக்கையில், சிஷ்யன் குருவை நோக்கி, சுவாமி! என்றோ தன் முன்னோர்கள் வாங்கிய கடனுக்கு வீரய்யன் புஜங்கனிடம் ஏன் மூன்று தலைமுறைக்குப் பின்பும் கொத்தடிமையாக இருக்கவேண்டும்? இதை அவன் ஏன் புஜங்கனிடம் ஒருபோதும் எதிர்த்துக் கேட்கவில்லை? அவன் பிள்ளை சூர்யாவுக்கு இருந்த துணிச்சல் ஏன் வீரய்யனிடம் இல்லை? என்று கேட்டான்.

அதற்குத் திரிதாமர் ஏரிக்கரையில் ஒரு மரத்தில் சங்கிலியினால் கட்டப்பட்டிருந்த கோயில் யானையை காட்டினார். கௌசில்யா! அந்த



யானை முயற்சி செய்தால் ஒரு நொடியில் அந்தச் சங்கிலியை அறுத்துவிட்டு ஓடமுடியும். ஆனால் அது அப்படிச் செய்வதில்லை. சிறுவயதில் அது பலமுறை சங்கிலியை அறுக்க முயன்று தோல்வியடைந்திருக்கும். பின்பு அது நம்மால் முடியாத காரியம் என்று நினைத்து விட்டுவிடும். தன் வலிமையை அது உணருவதில்லை. ஏனென்றால் இது மனோதத்துவ ரீதியான பலவீனம். வீரய்யன் போன்ற மனிதர்களுக்கும் சிறுவயதில் புரட்சிக்கருத்துக்கள் தோன்றியிருக்கலாம். ஆனால் வயதான பின் இதுமுடியாத காரியம் என்று மனதளவில் தோல்வியை ஒப்புக்கொண்டு வாழ்நாளெல்லாம் மௌனமாக துன்புறுகின்றனர். மேலும் சூர்யா போன்ற சிலர் துணிச்சலுடன் அநியாயத்தை எதிர்க்கும் முயற்சிகளில் ஈடுபடுகின்றனர். வீரய்யன் முதலியவர்கள் அந்த யானையைப் போன்றவர்கள் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவை தரைமட்டமாக்குவோம்; தலிபான் தீவிரவாதிகள் எச்சரிக்கை!

(காபூல்)

அமெரிக்க ஜனாதிபதியாக 2 ஆவது முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கும் பராக் ஒபாமாவுக்கு ஆப்கானிஸ்தானில் செயற்படும் தலிபான் தீவிரவாதிகள் இணை யத்தளம் மூலம் எச்சரிக்கை செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளணர்.

தலிபான் செய்தி தொடர்பாளர் சபியுல்லா முஜாகித் மூலம் வெளியிடப்பட்டுள்ள அந்த செய்தியில் கூறியிருப்பவை வருமாறு,

மீண்டும் ஜனாதிபதியாக இருக்கும் ஒபாமாவுக்கு ஒன்றை நாங்கள் தெரிவித்து கொள்கிறோம். ஆப்கானிஸ்தான் மண்ணில் உங்கள் படைகள் தோல்வி அடைந்துள் ளன. அதை நீங்கள் ஒப்புக் கொள்ள வேண்டும்.


எனவே அமெரிக்கப் படைகளை உடனடியாக இங்கிருந்து வாபஸ் பெற வேண்டும். இல்லையெனில் அமெரிக்காவை நாங்கள் தரைமட்டம் ஆக்குவோம்.

ஆப்கானிஸ்தானில் என்ன நிலைமை நிலவுகிறது என்பதை ஒபாமா புரிந்து கொள்ள வேண்டும். தொடர்ந்து பொய் சொல்லி ஏமாற்ற கூடாது.

எங்கள் புனித பூமியில் இனி மேலும் நீங்கள் இருக்கக்கூடாது. இனியாவது உலக பொலிஸார் போல அமெரிக்கா செயற்படுவதை நிறுத்த வேண்டும். உங்கள் மக்கள் பிரச்சினைகளை மட்டும் நீங்கள் தீர்க்க பாருங்கள். உலக மக்களின் வெறுப்பை சம்பாதிக்க முயற்சிக்காதீர்கள் என அதில் கூறப்பட்டுள் ளது. (அ-2)

# முன்னேற்ற பாதையை நோக்கி அனைவரும் ஒன்றாக செல்வோம்

## ஒபாமா நாட்டு மக்களுக்கு உரை



அமெரிக்காவில் நடைபெற்று முடிந்த 45 ஆவது ஜனாதிபதி தேர்தலில் அமெரிக்க ஜனாதி பதியாக பராக் ஒபாமா இரண்டாவது முறையாக தெரிவாகியுள்ளார்.

இந்நிலையில் தனது தேர்தல் கோட்டையான சிகாகோவில் ஒபாமா வெற்றி உரையாற்று கையில்;

ஒபாமா சிறப்புரையைக் கேட்க இலட்சக்கணக்கான மக்கள் ஒன்று திரண்டனர். அப்போது அவர் தேர்தலில் வாக்களித்த ஒவ்வொரு அமெரிக்க குடிமக்களுக்கும் தனது நன்றியை கூறும் வகையில், தன்னை இந்த உயரத்தை அடைய செய்த மக்களுக்கு என்றும் நன்றியுள்ளவனாக இருப்பேன் என தெரிவித்தார்.

அமெரிக்கா சாதிக்க வேண்டியவை இன்னும் நிறைய இருப்பதாக கூறிய ஒபாமா, சிறப்பான முன்னேற்றங்கள் பலவற்றை அடைய அமெரிக்க மக்கள் காத்திருப்பதாக தெரிவித்தார்.

முன்னேற்றப் பாதையை நோக்கி நாம் அனைவரும் ஒன்றாகச் செல்வோம் என வேண்டுகோள் விடுத்தார். அமெரிக்காவை வெற்றிப் பாதையில் அழைத்துச் செல்ல ரோம்னியுடைய ஆதரவும் கிடைக்கும் என தான் நம்புவதாக தெரிவித்தார். குடியரசுக்கட்சியுடன் இணைந்து அமெரிக்க நிதி நெருக்கடியை சமாளிக்க திட்டங்கள் தீட்டப்படும் என்றார். (அ-2)

# ஆசாத்தின் உறவுகள் வசிக்கும் இடங்கள் மீது குண்டு தாக்குதல்

## 3 பேர் பலி; 7 பேர் படுகாயம்

(டமாஸ்கஸ்)



சிரியாவின் முக்கிய பகுதிகளை கைப்பற்றியுள்ள புரட்சி படையினர் தற்போது தலைவர்களை குறி வைத்து தாக்குதல் நடத்த ஆரம்பித்துள்ளனர்.

இந்நிலையில் நேற்று முன் தினம் ஜனாதிபதி மாளிகையை குறி வைத்து புரட்சி படையினர் தாக்குதல் நடத்தினர்.

ஆனால் இவர்கள் வீசிய குண்டுகள் ஜனாதிபதி மாளிகையை தாக்கவில்லை. மாறாக ஜனாதிபதி ஆசாத்தின் குடும்ப உறுப்பினர்கள் அதிகம் வசிக்கும் இடங்களில் வெடித்துள் ளன.

இத் தாக்குதலில் 3 பேர் கொல லப்பட்டதாகவும் 7 பேர் படுகாயமடைந்ததாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

சிரியாவில் அரசு ஆதரவாளர்களுக்கும் புரட்சி படையினருக்கு மிடையேயான உள்நாட்டு போர் மிக தீவிரமடைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# உலக தரிசனம்

# ஒபாமாவுக்கு எச்சரிக்கையுடன் வாழ்த்து தெரிவித்தது சீனா

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஒபாமா வெற்றி பெற்றதை எச்சரிக்கையுடன் சீனா வாழ்த்தியுள்ளது. தனது வாழ்த்துச் செய்தியில் சீனா கூறுகையில், எங்களுடனான உறவு மேம்பட வேண்டுமென்றால், கருத்து வேறுபாடுகள் குறைய வேண்டுமென்றால் அமெரிக்கா ஆக்க பூர்வமான கொள்கைகளை கையாள வேண்டும் என்று தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி பதவியிலிருந்து விலக உள்ள ஜிண்டாவோ, பிரதமர் வென் ஜியாபோ ஆகியோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

**இஸ்ரேல் ஏமாற்றம்**

ஜனாதிபதியாக ஒபாமா மீண்டும் வெற்றி பெற்றதற்கு பரவலாக உலகெங்கிலும் இருந்து பாராட்டுகள் குவிந்த நிலையில் இஸ்ரேல் மட்டும் ஏமாற்றத்துடன் உள்ளது.

இந்த தேர்தலில் மிட்ரோம்னிக்கு இஸ்ரேல் பிரதமர் நெதன் யாஹு ஆதரவு தெரிவித்துள்ளார்.

அதனால் மீண்டும் ஜனாதிபதியான ஒபாமா பழி தீர்த்துக் கொள்வாரோ என்கிற அச்சம் இஸ்ரேலை ஆட்டிப்படைக்கிறது. இருந்த போதிலும் முறைப்படி ஒபாமாவுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார் பிரதமர். ஆனால் ஆளும் கட்சியின் பிற தலைவர்களோ ஒபாமா நம்பக் கூடிய மனிதர் இல்லை என்று குறிப்பிடுகின்றனர். (அ-2)

# 700 வருடம் பழைமைமிக்க குழந்தையின் உடலை திரும்ப பெற்றது பெருநாடு



சுமார் 700 வருடங்களுக்கு முன்பு தென் அமெரிக்காவில் இன்கா கலாசார மக்கள் வாழ்ந்து இருக்கிறார்கள். அதற்கு முந்திய காலத்திய பெருநாட்டுக்கு சொந்தமான ஒரு குழந்தை மம்மியை புராதனப் பொருட்கள் கடத்தல் கும்பல் ஒன்று கடந்த 2 வருடங்களுக்கு முன்பு பொலிவியாவிலிருந்து பிரான்சுக்கு கடத்தப்பட இருந்தது. அதை பொலிவியா அரசு அப்போது கைப்பற்றியது.

பெருநாட்டின் கலாசாரத்தை பறை சாற்றும் இந்த குழந்தை மம்மியை மீட்கும் முயற்சியை அந் நாடு தொடர்ந்து மேற்கொண்டது.

இதனைத் தொடர்ந்து பொலிவியா நாட்டின் கலாசார அமைச்சர் இதனை பெருநாட்டிடம் முறைப்படி ஒப்படைத்தார். 2 வயதான இந்த குழந்தை மம்மி ஆணா அல்லது பெண்ணா என்று ஆராய்ச்சியாளர்களால் அறிய முடியவில்லை.

எங்கள் வம்சம் மற்றும் பரம்பரையின் பெருமையை உலகுக்கு காட்டும் ஒரு சிறிய மாதிரியே இந்த குழந்தை மம்மி என்று பெரு கலாசார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்பு இன்சா கலாசாரத்தின் மையமாக விளங்கிய பெருநாட்டின் செரமிக்ஸ் வெள்ளி தங்கம் மற்றும் அரிய ஓவியங்கள் திருடப்பட்டு விட்டதாகவும் பெரு நாடு கூறியுள்ளது. (அ-2)

# ஓரினச்சேர்க்கைக்கு அமைச்சரவை ஒப்பு

ஓரின சேர்க்கையாளர்களின் திருமணத்துக்கு பிரான்ஸ் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

பிரான்ஸ் நாட்டில் ஓரின சேர்க்கையாளர்கள் தங்கள் திருமணத்தை அங்கீகரிக்கக்கோரி போராட்டம் நடத்தி வருகின்றனர். இந்த விவகாரம் பிரான்ஸ் ஜனாதிபதி தேர்தலிலும் எதிரொலித்தது. பெரும்பாலான மக்கள் ஓரின சேர்க்கை திருமணத்தை ஆதரிக்கின்றனர்.

இதை கருத்தில் கொண்டு பிரான்ஸ் அமைச்சரவையும் ஓரின சேர்க்கையாளர் திரு மணத்தை சட்டரீதியாக அங்கீகரிக்கும் தீர்மானத்துக்கு ஒப்புதல் அளித்துள்ளது. விரைவில் இந்தச் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும். (அ-2)



அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா இரண்டாவது முறையாக தேர்வு செய்யப்பட்டதை அடுத்து அவரது பூர்வீகமான கென்யாவின் கோகிலோ நக ரில் வெற்றிக் கொண்டாட்டம் களைகட்டியுள்ளது. ஒபாமா வின் பாட்டி சாரா மற்றும் உள்ளூர்வாசிகள் வெற்றிக் கொண்டாட்டங்களில் ஈடுபடுவதைப் படத்தில் காணலாம்.

# தற்கொலை தாக்குதலில் படைவீரர்கள் உயிரிழப்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் கராச்சி நகரில் துணை இராணுவப்படை தலைமை அலுவலகம் மீது தற்கொலைப் படைத் தாக்குதல் இடம்பெற்றுள் ளது.

நேற்று காலையில் இத்தாக்குதல் இடம்பெற்றுள்ளது. வெடிகுண்டுகள் நிரப்பிய வாகனத்தில் வந்த தீவிரவாதி இராணுவ அலு வலகம் மீது மோதினான். இதில் பாதுகாப்பு படை வீரர் ஒருவர் பலியானார்.

பொலிஸ்காரர்கள் உட்பட 14 பேர் காயமடைந்தனர். இந்த தற்கொலை படை தாக்குதலில் இராணுவ அலுவலகத்தின் ஒரு பகுதி கட்டடம் இடிந்து விழுந்தது. பல கட்டடங்களுக்கு பாதிப்பு ஏற்பட்டது. காய்கறி லொறியில் 100 கிலோ வெடி பொருட்களை நிரப்பி இந்த தாக்குதல் நடத்தியதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அணுவுலைக்கு யுரேனியம் வழங்கப்படும்



(புதுடில்லி)

இந்திய அணுவுலைக்கு யுரேனிம் வழங்கப்படும் என கனடா பிரதமர்ஸ்டீபன்ஹார்ப்பர் தெரிவித்துள்ளார்.

ஹார்ப்பர் இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு வருகிறார். இந்த சுற்றுப் பயணத்தின்போது இந்தியா -கனடா நாடுகளுக்கிடையிலான வர்த்தகம், பாதுகாப்பு, நல்லுறவு தொடர்பாக இருநாட்டு பிரதமர்களும் பேச்சுவார்த்தை நடத்தினர்.

அணுவுலை செயற்பாட்டுக்குத் தேவைப்படும் மூலப்பொருளான யுரேனியம் அதிகமாக கிடைக்கும் நாடுகளில் கனடா முதலிடம் வகிக்கின்றது.

இந்திய அணு உலைகளுக்கு தேணவயான யுரேனியத்தை தொடர்ந்து வழங்குவதாக கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்னர் கனடா இந்தியாவுடன் ஒப்பந்தம் செய்து கொண்டது.

இருப்பினும் நாங்கள் வழங்கும் யுரேனியத்தை அழிவுக்கான நோக்கங்களுக்கன்றி ஆக்கபூர்வமான தேவைகளுக்காக மட்டுமே இந்தியா பயன்படுத்தும் என்பதை உறுதிப்படுத்திக் கொண்ட பின்னரே நாங்கள் யுரேனியத்தை வழங்குவோம் என்று கனடா கூறி வந்தது.

இந்நிலையில் உடனடியாக இந்தியாவுக்கு யுரேனியம் வழங்க முடிபு செய்து ஒப்பந்தம் நேற்று கையெழுத்தானது. (அ-2)

# 2 ஜி வழக்கை விசாரித்து வந்த சி.பி.ஐ.அதிகாரி உயிரிழப்பு

2ஜி அலைக்கற்றை முறைகேட்டு வழக்கை விசாரித்து வந்த சி.பி.ஐ. அதிகாரி சுரேஷ் குமார் பல்சானியா (வயது 44) மரணம் அடைந்துள்ளார்.

தனியார் வைத்தியசாலை ஒன்றில் அனுமதிக்கப்பட்டிருந்த அவர் நேற்று முன்தினம் இரத்தக் கோளாறால் மரணத்தை தழுவியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வருடத்தில் சிறந்த பணிக்கான பொலிஸ் உயர் விருதை குடியரசு தினத்தில் பெற்றவர்.

2 ஜி வழக்கை விசாரித்து வந்த பல்சானியா, முன்னாள் தொலைத் தொடர்பு அமைச்சர் ஆ.ராசா, தி.மு.கவின் எம்.பி. கனிமொழி ஆகியோருக்கு எதிராகவும் தொலைத் தொடர்பு நிறுவகங்களுக்கு எதிராக குற்றப் பத்திரிகை பதிந்து தாக்கல் செய்தவர் அது தொடர்பான வழக்கையும் விசாரித்து வந்தார்.

மேலும் இது தொடர்பாக எழுந்த கடிதப் பரிமாற்றம் குறித்தும் மலேசியாவில் பல தகவல்களை திரட்டி வந்தார்.

அதுமட்டுமல்லாமல் கொமன்வெல்த் முறைகேடு தொடர்பாக சுரேஷ் கல்மாடியின் விவகாரத்தில் லண்டனுக்குச் சென்று விசாரணை நடத்திய இரு நபர் குழுவில் பல்சானியாவும் ஒருவராவார்.

இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தஊழல்விசாரணைகளில்தன்னை முழுவதும் ஈடுபடுத்திக் கொண்ட நேர்மையான சி.பி.ஐ. அதிகாரி ஒருவர் 44 வயதில் திடீரென மரணம் அடைந்தது சி.பி.ஐ. வட்டாரத்தில் அதிர்ச்சியையும் வருத்தத்தையும் ஏற்படுத்தியுள்ளது. (அ-2)

# ஆந்திராவில் கொட்டித் தீர்த்தது மழை; 80 ஆயிரம் நிவாரண கிராமத்தில் மக்கள்



ஆந்திராவில் பெய்த மழை காரணமாக 5 இலட்சம் ஏக்கர் பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளன.

ஆந்திராவில் கடந்த 4 நாட்களாக கடலோர மாவட்டங்களில் கன மழை பெய்து வருகிறது.

இதன் காரணமாக கிழக்கு மற்றும் மேற்கு கோதாவரி மாவட்டங்களில் 3 இலட்சம் ஏக்கர் நெற்பயிர்கள் மற்றும் பருத்தி பயிர்கள் நீரில் மூழ்கின. 100 இற்கும் மேற்பட்ட கிராமங்கள் வெள்ள பாதிப்பிலிருந்து மீளவில்லை. வீடுகள் மற்றும் வீதிகளில் புகுந்த வெள்ள நீர் இன்னும் வடியவில்லை.

இதனையடுத்து 80 ஆயிரம் நிவாரண முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.மீட்பு பணிகளில் அதிகாரிகள் மெத்தனப்போக்கு காட்டி வருவதாகவும் கிராம மக்கள் குற்றஞ்சாட்டினர். மேலும் ரயில் தண்டவாளங்களில் சூழ்ந்துள்ள மழை நீர் அகற்றப்படாததால் ரயில் சேவை வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து கனமழை காரணமாக இதுவரை 29 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதனிடையே வெள்ளம் பாதித்த இடங்களுக்கு தேவையான உதவிகளை அளிப்பதாக பிரதமர் மன்மோகன் சிங் ஆந்திர மாநில முதல்வர் கிரண்குமார் ரெட்டியிடம் தெரிவித்துள்ளார். (அ-2)

# அடுக்குமாடி கட்டடம் இடிந்ததில் 3 பேர் பலி; 20 பேரை காணவில்லை

(ஆக்ரா)

ஆக்ராவில் அடுக்குமாடி வணிகர் வளாகம் ஒன்று திடீரென இடிந்து வீழ்ந்ததில் 3 பேர் பலியாகியுள்ளனர்; 20 பேர் வரை இடிபாட்டினுள் புதைந்துள்ளனர்.

இக்கட்டடம் இடிந்து வீழ்ந்த போது பொருட்கள் வாங்க வந்தவர்களும் ஊழியர்களும் நூற்றுக்கு மேற்பட்டோர் அகப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

அவர்களில் 3 பேர் அந்த இடத்திலேயே உயிர் இழந்தனர். இடிபாட்டுக்குள் புதைந்து கிடந்த 10 பேரை மீட்டனர். இன்னும் 20 பேருக்கு மேல் இடிபாட்டுக்குள் புதைந்து கிடக்கின்றனர்.அவர்கள் கதி என்ன நடந்ததென தெரியவில்லை. அவர்களை மீட்கும் பணி தீவிரமாக நடந்து வருகிறது. (அ-2)

## பாரதச் செய்தி

# பெங்களூரில் தீ விபத்து; போக்குவரத்து பாதிப்பு

(பெங்களூர்)

பெங்களூர் நகரில் எளிதில் தீப்பற்றக்கூடிய இரசாயனப் பொருட்கள் மற்றும் பெயிண்ட்டுகள் அதிக அளவில் இருப்பு வைத்திருந்த பெயிண்ட் குடோனில் நேற்றுக்காலை 9 மணியளவில் தீ விபத்து ஏற்பட்டது

இதுபற்றி தகவல் அறிந்ததும் 22 தீயணைப்பு வண்டிகளில் தீயணைப்பு படை வீரர்கள் விரைந்து சென்று பற்றி எரியும் தீயை அணைத்துள்ளனர். தீ விபத்து ஏற்பட்ட போது குடோனில் எவரும் இல்லாததால் உயிரிழப்பு தடுக்கப்பட்டுள்ளது

தீ கொழுந்துவிட்டு எரிந்ததால் அந்த பகுதி முழுவதும் புகை மண்டலமாக காட்சி அளித்தது. அந்த பெயிண்ட் குடோன் சட்ட விரோதமாக அங்கு செயற்பட்டு வந்ததாக குறிப்பிடப்படுகிறது. (அ-2)




சட்டீஸ்கர் மாநிலம் நாரண்பூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சுவாமி விவேகானந்தர் சிலை முன்பாக விளக்கேற்றி வழிபட்ட ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியையும் அருகில் மாநில ஆளுநர் சேகர்தத் மற்றும் முதல்வர் ராமன்சிங் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# காதல் விவகாரம் கலவரமாகியது

(சென்னை)

காதல் பிரச்சினையால் தர்மபுரியில் ஏற்பட்ட கலவரத்தில் 100 இற்கும் மேற்பட்ட வீடுகள் தீ வைத்து கொளுத்தப்பட்ட சம்பவம் இடம் பெற்றுள்ளது.

தர்மபுரி நாயக்கின் கொட்டாய் நத்தம் காலணியைச் சேர்ந்த கல்லூரி மாணவர் இளவரசனும் பக்கத்துக்கிராமமான கோணங்கி நாயக்கின் ஹள்ளியைச் சேர்ந்த கல்லூரி மாணவி திவ்யாவும் காதலித்து திருமணம் செய்து கொண்டனர்.

இதனால் திவ்யாவின் தந்தை நாகராஜ் தற்கொலை செய்து கொண்டதாக கூறப்படுகிறது.

தகவல் அறிந்து உறவினர்கள் மற்றும் அவரது சமூகத்தை சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் ஒன்று திரண்டு நத்தம் காலணியில் உள்ள மற்றொரு சமூகத்தைச் சேர்ந்தவர்களின் வீடுகளை தீ வைத்து கொளுத்தினர்.

. இதில் நூற்றுக்கும் மேற்பட்ட வீடுகள் சாம்பலாகின .மேலும் இரு சக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்களுக்கும் தீ வைக்கப்பட்டன.

வீதியில் மரங்களை வெட்டிப் போட்டு தீயிட்டு கொளுத்தி வன்முறையில் ஈடுபட்டதையடுத்து அப்பகுதியில் அதிகளவு பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். (அ-2)

# ஒடிசா கடற்கரையில் ஒபாமாவின் மணல் சிற்பம்



அமெரிக்க ஜனாதிபதியாக இரண்டாவது முறையாக தெரிவு செய்யப்பட்டுள்ள பராக் ஒபாமாவின் உருவத்தை ஒடிசா கடற்கரை மணலில் சர்வதேச மணல் சிற்ப கலைஞர் ஒருவர் உருவாக்கியுள்ளார்

ஒடிசா மாநிலத்தைச் சேர்ந்த சர்வதேச மணல் சிற்பக்கலைஞர் சுதர்சன் பட்நாயக் உலகம் முழுவதும் நடைபெறும் முக்கிய நிகழ்வுகளை அவ் வப்போது மணல் சிற்பமாக வடித்து வருகிறார். ஒபாமாவின் பின்னணியில் வெள்ளை மாளிகையின் உருவத்தையும் வடித்துள்ளார். இதை ஏராளமான மக்கள் ஆர்வத்துடன் பார்த்துச்செல்கின்றனர். (அ-2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

முழுமையாகப் புரிந்து கொள்ளாத அறிவு நமக்குச் சொந்தமாகாது.
~கதே

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## ஒபாமாவின் வெற்றிக்காக ஏங்குவதும் எங்கள் நிலைமையாயிற்று!

அமெரிக்க நாட்டு ஜனாதிபதித் தேர்தலில் பராக் ஒபாமா இரண்டாவது தடவையும் வெற்றி பெற்று அமெரிக்காவின் ஜனாதிபதியாகி உள்ளார்.

அமெரிக்க நாட்டின் ஜனாதிபதித் தேர்தல் முடிபுகளை உன்னிப்பாக அவதானிக்கும் அளவில் எங்கள் நிலைமை உள்ளது.

உலகின் அதி உச்ச வல்லரசு நாடான அமெரிக்க நாட்டின் ஜனாதிபதித் தேர்தல் முடிபுகளை நாம் அவதானிப்பது உலகமயமாதலின் விளைவோ அல்லது சர்வதேசம் பற்றி அறிய வேண்டும் என்ற ஆர்வக்கோளாறோ அல்ல.

எங்கள் இலங்கைத் திருநாட்டின் ஆட்சிப் பெருங்குடிகள், எங்களை ஆளும் இனமாக நினைக்காது அடிமைகளாக – எதுவும் கேட்கவும் கதைக்கவும் முற்படக்கூடாதவர்களாக ஆக்கியுள்ள கொடூரமே, அமெரிக்க நாட்டின் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் எங்கள் கவனம் நகர்கின்றது.

இலங்கை இன விவகாரம் தொடர்பில் தெளிவு நிலையில் இருக்கக்கூடிய பராக் ஒபாமா மீண்டும் ஜனாதிபதியானால் எங்களுக்கு ஏதேனும் கிடைக்கும் என்ற நம்பிக்கை காரணமாகவே, ஒபாமாவின் வெற்றியில் ஒரு வகையான குட்டிப்புளுகு ஏங்களுக்கு.

என்ன செய்வது! அரசியல் தலைமை, பலம் வாய்ந்த இன அமைப்பு, பொருளாதார இருப்பு என அனைத்தையும் போரின் தோல்விக்கு இரையாக்கிய இனம் ஏனைய நாடுகள் உதவ மாட்டாதா என ஏங்குவதும் தன் அறிவிற்கெட்டியவாறு இந்த நாடு எங்களுக்கு உதவும் என்று நம்புவதும் இயல்பு.

இதில் நம்மை அழித்து நமக்கு உதவுவது போல நடிப்பவர்களையும் நம்புகின்ற பரிதாபங்களும் நடந்தேறும்.

கடும் இழப்புகளின் விளைவாக இப்படியான நிலைமை ஏற்படுவது யதார்த்தமான உண்மை.

அந்த வகையில் ஒபாமாவின் வெற்றியில் ஒருவகை திருப்தி.

நாங்கள் அடைந்திருக்கக்கூடிய திருப்தி பற்றி அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா அறிந்திருப்பாரா என்றால் அதுதான் இல்லை.

அதேநேரம் ஒபாமாவின் வெற்றியால் புளுங்கக்கூடிய இலங்கை அரசு,

தாங்கள் தேர்தலில் வெற்றியடைந்து அமெரிக்காவில் இரண்டாவது தடவையும் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதையிட்டு பெரு மகிழ்வடைகின்றோம். இலங்கைக்கும் அமெரிக்காவுக்குமான உறவு மேலும் வலுவடையும் என்பது நிறுத்திட்டம் என்று வாழ்த்துச் செய்தி அனுப்பப் போவதும் உறுதி.

உண்மையான விசுவாசத்தோடு நோக்கின் மக்கள் ஒருபுறம், உள்ளொன்று வைத்து வெளியில் ஆலாவர்ணம் காட்டும் தரப்பு இன்னொரு புறமாக இயங்கக்கூடிய இந்த உலகில், அடிமைப்பட்டவர்களின் மீட்புக்கு அடிமைத்தனத்தில் இருந்து மீண்டவர்களே உதவ முன்வராத சூழமைவும் உண்டு.

எதுவாயினும் அமெரிக்காவின் ஜனாபதியாக ஒபாமா மீண்டும் வர வேண்டும் என்பதில் உறுதியாக இருந்த அமெரிக்க நாட்டில் வாழும் தமிழர்களின் உணர்வை ஒபாமா புரிவதும் புரிந்து கொள்ள வைப்பதிலும் தமிழ்த் தரப்புகளுக்கு நிறையவே பொறுப்பு உண்டு.

## நூலக தினமும் பரிசளிப்பு விழாவும்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நூலக தினமும் பரிசளிப்பு விழாவும் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு கல்லூரியின் பீடாதிபதி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தின ராக வைத்திய கலாநிதி லயன் வை.தியாகராசா அவர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக சட்டத்தரணி சோ.தேவராசா (கலை இலக்கியப் பேரவை) அவர்கள் கலந்து சிறப்புரையை நிகழ்த்தவுள்ளார்.

இந்நிகழ்வில் கலை இலக்கியப் பேரவையின் புத்தகப் பண்பாட்டுப் பயணம் என்னும் நிகழ்வும் வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டியில் வெற்றியீட்டிய முகிழ்நிலை ஆசிரியர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் இடம் பெறவுள்ளதென கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் தெரிவித்துள்ளார். (ந-8)

## குடும்பக் கட்டுப்பாட்டு சிகிச்சைக்கு பௌத்த பிக்குகள் எதிர்ப்பு

(கொழும்பு)

குடும்பக் கட்டுப்பாட்டு சத்திர சிகிச்சைக்கு பௌத்த பிக்குகள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

பண்டாரகம பிரதேசத்தில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. பண்டாரகம சுகாதார வைத்திய காரியாலயத்தில் 34-வயதுக்கு அதிகமான 40 தாய்மார்கள் இந்த சத்திர சிகிச்சையை மேற்கொள்ளத் தீர்மானித்திருந்தனர்.

எனினும், பௌத்த பிக்குகளின் கடுமையான எதிர்ப்பைத் தொடர்ந்து சத்திரசிகிச்சை இடைநிறுத்தப்பட்டது. இந்த சத்திர சிகிச்சையை நிறுத்தும் போராட்டத்திற்கு பௌத்த பிக்குகள் பாடசாலை மாணவ; மாணவிகளையும் இணைத்துக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சிங்கள இனத்தை அழிக்காதே என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோஷமெழுப்பி தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

அரச சார்பற்ற நிறுவனமொன்று இந்த சத்திர சிகிச்சைக்கு அனுசரணை வழங்கியிருந்தது. (ந-11)

## குளவி கொட்டியதில் ஒருவர் உயிரிழப்பு

மஸ்கெலிய, சாமிமலை தோட்டத்தில் குளவிக்கொட்டுக்கு இலக்கான 60 வயதுடைய ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தோட்டத்தில் விறகு சேகரிக்கச் சென்ற ஒருவரே நேற்று முன்தினம் குளவிக் கொட்டுக்கு இலக்கானதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

குளவிக்கொட்டுக்கு இலக்கான அவர் மஸ்கெலிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸார் மேலும் குறிப்பிடுகின்றனர். (அ)

## குருநகர் பகுதியில் டெங்கு ஒழிப்பு!

குருநகர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்துடன் இணைந்து டெங்கு தொடர்பான விசேட வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதன் முதற் கட்டமாக குருநகர் தொடர்மாடிப் பகுதியில் யாழ்.மாநகராட்சிமன்ற சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் அ.எ.ஞானஜோதி தலைமையில் விசேட விழிப்புணர்வுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

இதன்போது மக்கள் மத்தியில் சமுதாய சுகாதாரக் குழுக்கள் அமைக்கப்பட்ட தோடு அவர்களோடு இணைந்து பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் தலைமையில் தொண்டர்கள், சமூக சுகாதார உத்தியோகத்தர்கள், சுகாதாரப் பாதுகாவலர்கள் இணைந்து சிரமதான நிகழ்வுகள், தாழ்ந்த பகுதிகள் நீர் தேங்கா வண்ணம் மண்போட்டு நிரப்பல், ஒவ்வொரு வீதிகள் தோறும் விசேட விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

இவ்விசேட நிகழ்வில் பிரதம பொது சுகாதார பரிசோதகர், குருநகர் பொது சுகாதார பரிசோதகர், கரித்தாஸ் கியூடெக் நிறுவன வெளிக்கள உத்தியோகத்தர், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். இதன்போது டெங்குக் கட்டுப்பாடு தொடர்பான விசேட காணொளியும் காட்சிப்படுத்தப்பட்டது. இவ் வேலைத் திட்டமானது தொடர்ச்சியான முறையில் நடைபெறத் திட்டமிட்டுள்ளதாக யாழ்.மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி குறிப்பிட்டுள்ளார். (அ-9)

## இணுவில் இந்துவின் பரிசளிப்பு விழா

இணுவில் இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு கல்லூரி அதிபர் மு.செல்வஸ்தான் தலைமையில் நடைபெறவுள்ளது.

வட மாகாண கணக்காய்வு பணிப்பாளர் வை.குகதாஸ் பிரதம விருந்தினராகவும், வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.கைலாசநாதன், ஓய்வுநிலை முன்னாள் இந்துக் கல்லூரி அதிபர் சு.தம்பித்துரை ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ந)




### கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

எமக்கு விருப்பமானவர்களைப் பற்றி எண்ணும்போது அவர்கள் எந்தப் பொருள்போல இருப்பார்கள்? எனக் கற்பனை செய்வதுண்டு. ஒருவர் மீது கொண்ட விருப்பம் அவர் தொடர்பாலும் தோற்றத்தாலும் இன்னொன்றோடு ஒப்பிட்டு நோக்க வைக்கும். என் தாய் எனக்குத் தெய்வம் போன்றவள் எனப் எலர் சொல்லக் கேட்கிறோம். தெய்வத்தை நேரில் காணாவிட்டாலும் அது நாம் கேட்பதைத்தரும் என்ற நம்பிக்கை எல்லோருக்கும் உண்டு. ஆனால் தாயை நாம் சிறுவயதில் கேட்பவற்றையெல்லாம் தரும் அன்புருவாகவே காண்கின்றோம். எம் துன்பத்தை அவள் போக்கும் போது கடவுளாக நினைக்கிறோம். இந்த உலகியல் அனுபவம் பலருக்கு உண்டு.


மணிவாசகர் இறைவனை நேரில் தரிசித்தவர். திருவடி தீட்சை பெற்றவர். ஆனால் உலக வாழ்வியலால் இறைவனைப் பிரிந்து விடுகிறார். அவர் மீண்டும் இறைவனைக் காணவேண்டும் என விரும்பியபோது இறைவன் தனக்கு எப்படியிருந்தான் என நினைத்துப்பார்க்கிறார். அவருடைய நினைப்புகள் சொல்லோவியங்களாக தீட்டப்பட்டுள்ளன.

எனக்குத் தந்தையைப் போன்றவனே என முதலில் உறவு நிலையில் காட்டுகிறார். அடுத்து சாகாத நிலையளிக்கும் அமுதம் என்கிறார். இறப்பில்லாத நிலையைத்தரும் அமுது என்று சொன்னவர் ஆனந்தன் என்கிறார். இறைவனைப் பார்த்தபோது அவ்ரடைந்த ஆனந்தம் நினைவுக்கு வருகிறது. அந்த ஆனந்தநிலையை அடுத்து ஒரு சுவையுணர்வால் காட்டுகிறார். என் உள்ளம் உருகும் வண்ணம் இனிமையால் வாயூறும் தேனைப் போன்றவன் என எல்லோரும் உணரும் வண்ணம் கூறுகிறார். எல்லாவற்றுக்கும் மேலாக இறைவனின் மெய்யடியார்களைப்போல என்னையும் உனக்கு உரிமையுடையவனாக்கி நினது திருவருட்பெருக்கை பருகும் வண்ணம் ஞானாசாரியனாகக் காட்சிதந்ததைக் காட்டுகிறார். இறைவனின் தூய்மையான கோலமும் செவ்வொளி விளங்குகின்ற சடைமுடியும் அவர் நினைவில் நிறைந்திருப்பவை.

இத்தகைய தோற்றநிலைக்கு அப்பால் இறைவனின் அன்புள்ளம் அவரைப் பெரிதும் ஆட்கொண்டதையும் விளக்குகின்றார். அன்பர்களுக்கும் அடியார்களுக்கும் என்றும் துணையாக இருப்பவன் இறைவன். தொண்டர்களுக்குத் தளர்ந்த இடத்துப் புதைபொருள் போல நின்று உதவுவான். எல்லோரையும் காக்கும் மன்னன் இறைவன். அப்படியாக இருக்கும் இறைவன் எதற்காக அடியவனாகிய என்னைப் பொய்யாகிய இவ்வுலகத்தில் வருந்தும் படியாக வைத்திருக்கிறான் என்பதே மணிவாசகருடைய மன வருத்தமாகும். என்றும் அழியாத பேரின்பத்தை நல்கும் இறைவனிடம் அவர் விநயமாக வேண்டுதல் செய்யும் பாடல் எமக்கும் ஓர் கருத்தைத் தெளிவாய் எடுத்துரைத்துள்ளது. இந்த உலகத்து வாழ்க்கையில் எமக்கு ஏற்படும் துன்பங்களை இறைவழிபாட்டால் தீர்க்கமுடியும். இறைவன் எம்மோடு இணைந்து இருப்பவன் என்ற நம்பிக்கையை மணிவாசகர் ஏற்படுத்துகிறார். இறைவன் தோற்றத்தை அவர் காட்சிப்படுத்திக் காட்டியுள்ளார். சுடர்முடியைத் தனித்துவமாகக் காட்டுகிறார். இறைவனது தொழும்பாளர் என அடியவர்களைக் குறிப்பிட்டுள்ளார். தொழுதல் வழிபாட்டில் ஒரு செயற்பாடாக உள்ளது. கைகள் இரண்டையும் சிரசில் வைத்து வழிபடுவதே தொழுதலாகும். எனக்கு நீயே கதி என அடைக்கலம் ஆதலே இதன் பொருளாகும்.

**அப்பனே யெனக் கமுத னே ஆ**
**னந்த னெயக நெக அள் ளூறுதேன்**
**ஒப்பனே யுனக் குரிய அன்பரில்**
**உரிய னாயுனைப் பருக நின்றதோர்**
**துப்பனே சுடர் முடியனேதுணை**
**யாள னேதொழும் பாளர் எய்ப்பினில்**
**வைப்பனே யென்னை வைப்பதோ சொலாய்**
**நைய வையகத் தெங்கள் மன்னனே**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org






யாழ்ப்பாண கோட்டமட்ட 16 வயதுப்பிரிவு காற்பந்தாட்ட இறுதிப்போட்டி அண்மையில் சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது

இப்போட்டியில் இரண்டாம் இடத்தினை பெற்ற சென். ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை அணியினரை படத்தில் காணலாம்.

# உடுவில் உதயசூரியன் அணி இனிங்ஸ்சால் அபார வெற்றி

உடுவில் உதயசூரியன் - உடுவில் தமிழ் ஒளி அணிகளுக்கிடையே நடைபெற்ற ஒருநாள் டெஸ்ட் போட்டியில் உடுவில் உதயசூரியன் அணி இனிங்ஸாலும் 164 ஓட்டங்களினாலும் வெற்றி பெற்றுள்ளது.

இவ்விரு அணிகளுக்குமிடையிலான 5 ஒருநாள் டெஸ்ட், இரண்டு இருபது-20 போட்டிகளில் வருடா வருடம் மோதி வருகின்றன.

இதில் முதலாவது ஒருநாள் டெஸ்ட் போட்டி அண்மையில் உதயசூரியன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய உதயசூரியன் அணி முதல் இனிங்ஸில் 6 விக்கெட்டினை இழந்து 300 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது ஆட்டத்தை இடை நிறுத்தியது. இதில் யஸ்ரின் 82 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தமிழ்ஒளி அணி முதல் இனிங்ஸில் 65 ஓட்டங்களுக்குள் மடங்கியது.

தொடர்ந்து பலோன் முறையில் இரண்டாம் இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய போது 71 ஓட்டங்களுக்குள் அடங்கியது. இதனால் உதயசூரியன் அணி இனிங்ஸாலும் 164 ஓட்டங்களிலும் அபார வெற்றி பெற்றது. உதயசூரியன் அணி சார்பில் கலிசார் 8 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். தமிழ்ஒளி அணி சார்பில் மதுசன் 4 விக்கெட்டுக்களை வீழ்த்தியதுடன் 42 ஓட்டத்தினையும் பெற்றுக் கொடுத்தார்.




# புருஷோத்மன் ஞாபகார்த்த கிரிக்கெட் போட்டி

பருத்தித்துறைக் கடலில் சங்கமமான ஹாட்லிக் கல்லூரியின் மைந்தன் புருஷோத்மன் ஞாபகார்த்தமாக கரவெட்டி மகேசன் விளையாட்டுக் கழகம் நடத்தும் மாவட்ட ரீதியிலான 6 பேர் 5 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட்போட்டி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதில் பங்கு பற்ற விரும்பும் கழகங்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# நக்கீரன் வி.கழகத்தின் விளையாட்டுப் போட்டிகள்

(கரவெட்டி)

அல்வாய் வடக்கு நக்கீரன் விளையாட்டு கழகத்தின் 64 ஆவது நிறைவு விழாவை முன்னிட்டு தீபாவளி தினத்தன்று விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இதில் கயிறிழுத்தல், அஞ்சல் ஓட்டம், கிறிஸ்கம்பம் ஏறுதல், முட்டி உடைத்தல், 1500 மீற்றர் ஓட்டம் போன்ற விளையாட்டுக்களும் மற்றும் கிராமிய விளையாட்டுக்களும் இடம் பெறவுள்ளன.

இதில் பங்குபற்றும் விளையாட்டுக் கழகங்கள் பதிவுகளை மேற்கொண்டு போட்டியில் பங்குபற்றுமாறு நக்கீரன் விளையாட்டுக்கழகம் அறிவித்துள்ளது. (3-24)

# தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் மரதன், சைக்கிள் ஓட்டப் போட்டி



தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் மரதன், அரை மரதன் ஓட்டம் மற்றும் சைக்கிள் ஓட்டப் போட்டிகள் நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

இப்போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் வீர, வீராங்கனைகள் விரைவாக தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு போட்டி அமைப்பாளர்களால் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இப்போட்டிகள் நாளை 10 ஆம் திகதி சனிக்கிழமை மாத்தளையில் நடைபெறவுள்ளதாகவும் இதில் யாழ். மாவட்ட வீர, வீராங்கனைகள் பங்குகொள்ள விரும்பின் அவர்களுக்குரிய போக்குவரத்து ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும். முதலிடத்தைப் பிடிக்கும் வீர, வீராங்கனைகளுக்கு பெறுமதியான பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும் எனவும் ஒவ்வொரு மாவட்டத்திலும் மட்டுப்படுத்தப்பட்ட வீரர்களே பங்குபற்ற முடியும் எனவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்தனர்.

# உதைபந்தாட்டப் போட்டி

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளில் உதைபந்தாட்ட அணிகளுக்கிடையிலான சுற்றுப்போட்டிகள் இன்று காலை 8.30 மணிக்கு மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியால்ய மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

16 வயது பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டியில் பங்குபற்றவுள்ள அணிகள் உரிய நேரத்திற்கு மைதானத்திற்கு சமூகம் தருமாறு தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (3-29)

# இன்று ஆரம்பமாகிறது மேசைப்பந்தாட்டப் போட்டி

வவுனியா பிரதேச செயலகமும் கொழும்பு பிங்பொங் அக்கடமி அமைப்பும் இணைந்து வடக்கு, கிழக்கு மாகாணங்களின் மாவட்ட அணிகளுக்கு இடையிலான மேசைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

வவுனியா நகரசபை உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறவுள்ள இந்தச் சுற்றுப் போட்டியில் பாடசாலை விளையாட்டு வீரர்கள் பங்குபற்றவுள்ளனர். இந்த சுற்றுப் போட்டியில் யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து 20 வீரர்கள் கொண்ட அணி கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி போட்டியில் பங்குபற்றுவதற்கான யாழ்.மாவட்ட அணி நேற்று வவுனியா சென்றுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கின் அபிவிருத்தியிலும் அரசு தன்னை அர்ப்பணித்துள்ளது

## வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்து ஜனாதிபதி உரை



வடக்கு மாகாண அபிவிருத்தியிலும் அரசு தன்னை அர்ப்பணித்து வருகிறது என ஜனாதிபதி நேற்று வரவு செலவுத் திட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றும் போது குறிப்பிட்டார்.

அவரின் உரையின் முக்கிய பகுதி....

எமது அரசாங்கத்தின் எட்டாவது வரவு செலவுத் திட்ட உரையினை இப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதனையிட்டு நான் மகிழ்ச்சியடைவதுடன்,

மகிந்த சிந்தனை எதிர்கால தூரநோக்கினை அடிப்படையாகக் கொண்டு சமாதானம், மீள்கட்டமைப்பு மற்றும் அபிவிருத்தி பாதையொன்றில் இந்நாட்டினை செலுத்துவதற்கு எமது அரசாங்கத்தினால் முடியுமாக இருந்தது என்பதையிட்டு நான் பெருமைப்படுகிறேன்.

இவ்வரவு செலவுத் திட்டம் 3 முக்கிய நிகழ்வுகளின் பின்னணியில் சமர்ப்பிக்கப்படுகிறது. முதலாவது: இப் பாராளுமன்றம் 58ஆவது பொதுநலவாய பாராளுமன்ற மாநாட்டினை நடத்தி முடிப்பதற்கு அனுசரணையை வெற்றிகரமாக வழங்கியுள்ளது.

இரண்டாவது: தற்போது நாம் 3 வித்தியாசமான மாகாணங்களில் மாகாண சபைத் தேர்தல்களை நிறைவு செய்திருக்கின்றோம்.

இதேபோன்று, வட மாகாணத்திற்கும் எமது அர்ப்பணிப்பினை ஆற்றும் வகையில் அரசாங்கம் பல்வேறுபட்ட அபிவிருத்தி முன்னெடுப்புகளை செயற்படுத்தியுள்ளது.

பொருளாதார வளர்ச்சிக்காக புதிதாகக் கிடைக்கப்பெற்ற சூழலின்பால் வடக்கு மக்கள் காட்டுகின்ற ஆர்வம் மிகவும் உறுதியானதாகும்.

70 ஆயிரம் குடும்பங்களுக்கு குடிநீர் வசதியினை வழங்குகின்ற யாழ்ப்பாணம்-கிளிநொச்சி நீர் வழங்கல் திட்டத்தினை செயற்படுத்துவதனை வடக்கிலுள்ள மக்கள் பெரிதும் பாராட்டியுள்ளனர்.

அவர்கள் இரணைமடுக் குளத்திற்கு நீரைக் கொண்டுவருகின்ற மொறகஹந்த நீர்ப்பாசனத் திட்டத்தில் மிகவும் ஆர்வம் கொண்டுள்ளனர்.

இந்த வரவு செலவுத் திட்டத்திற்கு முன்னர் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மாவட்ட மதியுரைக் கூட்டங்களில் பங்குபற்றிய உள்ளூர் பிரதிநிதிகளைச் சந்தித்ததன் மூலம் நான் ஊக்கமடைந்துள்ளேன்.

சமாதானம் மற்றும் அபிவிருத்தியினை ஊக்குவிப்பதற்கு சனநாயக பிரதிநிதித்துவதற்கு வசதியளிப்பதற்காக அடுத்த வருடம் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்கும் உறுதியான அர்ப்பணிப்புடன் உள்ளோம். இதன்படி வடக்குத் தேர்தலை 2013ஆம் ஆண்டளவில் நடத்தத் திட்டமிட்டுள்ளோம்.

மூன்றாவது: இப் பாராளுமன்றம், உள்ளூராட்சி சபைகள்(விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் மற்றும் உள்ளூராட்சி சபைகள் (திருத்த) சட்டமூலம் இரண்டினையும் ஏகமனதாக ஏற்றுக் கொண்டுள்ளது.

**வறுமையற்ற இலங்கை**

எமது நாட்டில் வறுமை 8.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த போதும் சில குறை வருமானம் பெறும் குடும்பங்களுக்கு மத்தியில் நீர், வீடமைப்பு மற்றும் துப்புரவு ஏற்பாட்டு நிலைமைகள் என்பன நியாயமான அளவு மேம்படுத்தப்பட வேண்டியுள்ளன.

நிரல் முகவர்களின் அனைத்து கள மட்ட அலுவலர்களுடனும் இணைந்து ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவுகளுக்கும் நியமிக்கப்பட்டுள்ள 14 ஆயிரம் புதிய பட்டதாரிகளும் ஒவ்வொரு கிராமங்களிலும் உள்ள வறிய மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்கு வறுமை தணிப்பு ஊக்குவிப்பாளர்களாக ஈடுபடுத்தப்படுவர்.

கௌரவ சபாநாயகர் அவர்களே!

எமது நாடு 335 பிரதேச சபைகளைக் கொண்டிருக்கின்றது. இது 12 மாநகர சபைகளையும் உள்ளடக்கியுள்ளது. இவை அனைத்திலும் இருந்தான வருமானம் வருடம் ஒன்றிற்கு ரூ.100 மில்லியனுக்கு அதிகமாகும். 53 நகர சபைகளினதும் வருமானம் ரூ.25 மில்லியனில் இருந்து ரூ.100 மில்லியன் வரையான வீச்சில் காணப்படுகின்றது.

இந்த நகர மற்றும் மாநகர சபைகள் சமூகத்திற்கு சேவை வழங்கவேண்டிய இவற்றினது கடப்பாடுகளை நிவர்த்தி செய்வதற்கு போதிய வருமானத்தினை நியாயமானளவு கொண்டிருக்கிறது.

இந்த சபைகளுக்குச் சொந்தமான பல வர்த்தக சொத்துக்கள் முறையாகப் பயன்படுதப்படுவதில்லை.

எனவே ஆதனங்களை விலை மதிப்பீட்டில் சிக்கல்களைப் போக்கி ஆதன வரிகளுக்கான விலை மதிப்பீடுகளை ஒருசீராக உயர்த்துவதற்கு உள்ளூராட்சி மன்றங்கள் நடவடிக்கை எடுக்குமென நான் நம்புகிறேன்.

கௌரவ சபாநாயகர் அவர்களே!

206 உள்ளூராட்சி மன்றங்கள் ரூ.10 மில்லியனுக்கு குறைவான வருமானங்களைப் பெறுகின்றன. அவை எமது நாட்டின் அபிவிருத்தி குன்றிய பிரதேசங்களில் அமைந்துள்ள பிரதேச சபைகளாகும்.

எனவே பிரதேச சபைகளுக்கு அவற்றினது வருமானத்தினை வருடம் ஒன்றிற்கு 10 மில்லியனாக உயர்த்துவதற்காக நேரடி பண உதவிகளை வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

கௌரவ சபாநாயகர் அவர்களே!

எமது நாடு சமூக அபிவிருத்திக்கு பெயர் பெற்ற நாடொன்றாகும்.

இலவசக் கல்விக் கொள்கையானது பாடசாலை, பல்கலைக்கழகம் மற்றும் வாழ்க்கைத் தொழிற்கல்வி வலையமைப்பினை நாடு முழுவதிலும் நிலையாக அபிவிருத்தி செய்வதற்குப் பங்களிப்புச் செய்துள்ளது.

பாடநூல்கள், சீருடைகள், பருவச் சீட்டுகள் மற்றும் மதிய போசன உணவு என்பவற்றினை இலவசமாக வழங்குதல் இலவசக் கல்வியின் மூலம் நன்மையடைவதற்கு குறிப்பிடத்தக்க பெறுமதி சேர்ப்பொன்றாகும்.

அரசாங்கம் 2012இல் தேசிய வரவு செலவுத் திட்டத்தில் இருந்து ரூ.154.2 பில்லியனை இலவசக் கல்விக்காக வழங்குவதற்கு அதன் அர்ப்பணிப்பினை பேணியுள்ளது.

கல்வி மீதான அரசாங்கத்தின் செலவினம், மொத்த அரசாங்க செலவினத்தில் 9 சதவீதமாக இருப்பதுடன் ஆரம்பப் பாடசாலை முதல் பல்கலைக்கழகம் வரையான இலவசக் கல்வியை வழங்குவதற்கான செலவினமாகும்.

இலங்கையின் இலவசக் கல்விக்கான செலவினம் ஏனைய நாடுகளின் இலவசக் கல்விக்காக அரசாங்கங்களினால் செலவிடப்படும் செலவினங்களுடன் ஒப்பிடுகையில் நியாயப்படுத்த முடியுமானதொரு அந்தஸ்தில் காணப்படும் என நான் நம்புகிறேன். இந்த நாட்டிலுள்ள பெற்றோரும் அவர்களது சிறுவர்களை வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்கள், சர்வதேசப் பாடசாலைகள், உயர் கல்வி நிறுவனங்களுக்கு அனுப்புவதற்காக தனது பணத்தினை செலவிடுகின்றனர்.

இப் பின்னணியில் கல்விக்காக ரூ.306 பில்லியனை செலவிடுவதுடன் இது தேசிய வருமானத்தில் 4.1 சதவீதமாகும்.

கௌரவ சபாநாயகர் அவர்களே! அபிவிருத்தியடைந்த மனிதவள அடிப்படையினை அடைந்துகொள்வதற்கான நிலைமாறல் பலசவால்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இரண்டாம் நிலைக் கல்வியில் அதே போன்று கணனி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலம் போன்ற துறைகளில் எமது சிறுவர்களை சேர்த்துக் கொள்வதில் 80 சதவீதத்தினை இலக்காக கொள்ள வேண்டியுள்ளது.

ஒவ்வொரு வருடமும் பாடசாலைகளுக்கு செல்கின்ற மாணவர்களில் 10 சதவீதத்தினர் பல்கலைக்கழகங்களுக்குச் செல்வதற்கான வழிகளை உருவாக்குவதற்கும்,எ 40 சதவீத மானவர்கள் வாழ்க்கைத் தொழில் மற்றும் தொழில்நுட்பக் கல்வியின்பால் செல்வதற்குமான ஏற்பாடுகளை உறுதிப்படுத்த பேணப்படும்.

'இறக்குமதி செய்யப்பட்ட மதுபானம் மற்றும் ஸ்பிரித்துகள் மீது விதிக்கப்பட்டிருந்த இறக்குமதித் தீர்வையினை 25 சதவீத்தால் அதிகரிப்பதற்கு முன்மொழிகின்றேன்.

கௌரவ சபாநாயகர் அவர்களே!

2004ஆம் ஆண்டிற்கு முன்னர் இளைப்பாறியவர்களில் பெரும்பாலானவர்கள் 70 வயதைவிட அதிகமானவர்களாகும்.

அவர்கள் 2006ஆம் ஆண்டுக்குப் பின்னர் இளைப்பாறியவர்களுடன் ஒப்பிடுகையில் நியாயமான அளவு குறைந்த சம்பள அளவுத் திட்டங்களில் இளைப்பாறியவர்களாவர்.

இளைப்பாறுனர்கள் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 10 ஆயிரத்தினை விட குறைந்த ஓய்வூதியத்தினைப் பெறுகின்றனர். எனவே அவர்களுக்கு சில நிவாரணங்களை வழங்கும் வகையில் 2004ஆம் ஆண்டுக்கு முன்னர் இளைப்பாறியவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.750 இனையும் 2005இல் இருந்து 2006வரை இளைப்பாறியவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.500 இனையும் விசேட கொடுப்பனவாக வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

இந்த அதிகரிப்பில் 50 சதவீதத்தினை 2013 ஜனவரியில் இருந்தும் மீதியினை 2013 ஜுலையில் இருந்தும் வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

அனைத்து ஓய்வூதியம் பெறுநர்களுக்கு வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவினை மாதம் ஒன்றுக்கு 500 ரூபாயினால் அதிகரிப்பதற்கு நான் மேலும் முன்மொழிகின்றேன்.

கௌரவ சபாநாயகர் அவர்களே!

இந்த அரசாங்கம் அரசாங்க ஊழியர்களுக்கு சம்பளங்கள், வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு மற்றும் ஏனைய கொடுப்பனவுகளை அதிகரித்துள்ளது.

அரசாங்க ஊழியர்களுக்கிடையில் காணப்பட்ட சம்பள முரண்பாடுகள் திருத்தப்பட்டுள்ளன. ஆசிரியர்களின் சம்பள நிலுவைகள் தீர்க்கப்பட்டுள்ளன.

விசேட சேவை தொடர்பான கொடுப்பனவுகளும் உயர் தொழில் புரியுநர்கள் மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

வீட்டு வசதி, வாகனம் மற்றும் பிற கடன் வசதிகள் விரிவாக்கப்பட்டுள்ளன.

அக்ரஹார மருத்துவக் காப்புறுதித் திட்டம் மற்றும் உபஹார தொலைத் தொடர்பு வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

அரசாங்க சேவைக்கு ஆட்சேர்ப்பு மீதான மந்த நிலை நீக்கப்பட்டுள்ளதுடன், புதிய ஆட்சேர்ப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

2006இல் இருந்து ஏறக்குறைய 91 ஆயிரம் வேலையற்ற பட்டதாரிகள் அரசாங்கச் சேவைக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டதுடன் நிறுவனமயப்படுத்தப்பட்ட அபிவிருத்தி அலுவலர்கள் சேவைக்கான புதிய சேவைப் பிரமாணக் குறிப்பு அவர்களது தொழில் மேம்பாட்டுக்காக உருவாக்கப்பட்டுள்ளன.

மொழி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் உயர் தொழில் திறன்களை அரசாங்க ஊழியர்களுக்கு மத்தியில் மேம்படுத்துவதற்கு துரிதப்படுத்தப்பட்ட பதவியினர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் விரிவாக்கப்பட்டுள்ளன.

வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

கௌரவ சபாநாயர்கள் அவர்களே! அஹ்ரகார காப்புறுதித் திட்டத்திற்கான கொடுப்பனவினை ரூ.125 ஆக திருத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

மரணத்தின்போது 1 இலட்சம் ரூபாயினை காப்புறுதிப் பயனாகப் பெறுவதற்கும் சிறுநீரக மாற்று, புற்றுநோய் மற்றும் இருதய சத்திர சிகிச்சைகளுக்காக ரூ.5 இலட்சம் ஆகவும் அதிகரிப்பதற்கு நான் மேலும் முன்மொழிகின்றேன்.

கௌரவ சபாநாயகர் அவர்களே!

இங்கு நான் சமர்ப்பித்த வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் அனைத்தும் 2013 இல் இருந்து ஆரம்பமாகும் அடுத்த 3 வருடங்களின்போது அடையப்பட வேண்டிய 3 முக்கிய நோக்கங்களை இலக்காகக் கொண்டு தயாரிக்கப்பட்டவையாகும்.

எமது நாட்டினை வறுமையற்ற நடுத்தர வருமான பொருளாதாரமாக மாற்றுவதுடன் உணவு, நீர் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு என்பவற்றினை உறுதிப்படுத்தும் அதே வேளை, தரமான கல்வித்திறன் அபிவிருத்தி ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப எழுச்சி ஒன்றின்பால் நாட்டினைக் கொண்டுசெல்வதாகும்.

நிதி நெருக்கடிகள் மற்றும் பாதகமான சர்வதேச நிலைமைகள் காணப்பட்டபோதிலும் அரசாங்க சேவை மற்றும் தனியார் துறை கட்டமைப்பில் மேலதிக ஊக்குவிப்புக்களை வழங்குவதற்கு நான் தீர்மானித்துள்ளேன்.

ஏனெனில் மேற்குறிப்பிட்ட இலக்குகளை அடைந்து கொள்வதற்காக அபிவிருத்தி செயன்முறைக்கான பொறியியலாளராக அரசாங்க மற்றும் தனியார் துறையின் அர்ப்பணிப்பு மாத்திரமே. இருக்க முடியும் என நான் நம்புகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொலிஸ் பொறுப்பதிகாரி சுட்டு தற்கொலை

எல்பிட்டிய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஒருவர் தன்னைத்தானே சுட்டு தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

நேற்றிரவு 9.35 மணியளவிலேயே மேற்படிச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

சி.ஐ.போதாகொட என்பவரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவராவார். எல்பிட்டியப் பிரதேசத்தில் அமைந்துள்ள அவரது இல்லத்திலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு குறிப்பிட்டது. (ந-11)

## வரவு செல...

தயாரிக்கப்பட்டு புதிய முறையில் பொதியிடப்பட்ட ஓர் பண்டமாக இந்த வரவு செலவுத் திட்டத்தை நோக்க வேண்டும்.

வரவு-செலவுத் திட்டத்தில் அரசாங்க ஊழியர்களின் சம்பளங்கள் அதிகளவில் உயர்த்தப்படவில்லை என விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

2013-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட சமர்ப்பிப்புத் தொடர்பில் கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (ந-11)

## டிசம்பர் 8...

8 வதுமான வரவு செலவு திட்டத்தை நிதி அமைச்சர் என்றவகையில் ஜனாதிபதி மகிந்தா நேற்று பாராளுமன்றில் சமர்ப்பித்து உரையாற்றினார்.

நாட்டின் பரந்தளவிலான பொருளாதார அபிவிருத்தியை மையமாகக் கொண்டு இந்த வரவு செலவு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தொழிற்சங்கங்கள, வர்த்தக சமூகங்கள், புத்திஜீவிகள், பொதுமக்கள்போன்றஅனைவரினதும் ஆலோசனை பெறப்பட்டுள்ளது. (ந-11)

## ஆதரிப்...

பாக இடம்பெயர் மக்கள் மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு தொடர்பில் குறிப்பிடத்தக்களவு நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

வடக்கு, கிழக்கு வாழ் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையிலான திட்டங்கள் கிடையாது.

எனினும், வடக்குத் தேர்தல்பற்றி வரவு-செலவுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள் ளது.

வரவு-செலவுத்திட்டம் தொடர்பில் நாடாளுமன்றில் நடைபெறும் விவாதங் களின் பின்னர் வரவு செலவுத் திட்டத்தை ஆதரிப்பதா, இல்லையா என்பது தீர்மானிக்கப்படும் என சம்பந்தன் தெரிவித்துள்ளார். (ந-11)

## பட்ஜெட்டை...

இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளனர். வரவு செலவுத்திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு உரிய வேதனங்கள் வழங்கப்படவில்லை.

சாதாரண மக்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்படவில்லை. விவசாயிகள், தொழில்துறையினருக்கு உரியநிவாரணங்கள் வழங்கப்படவில்லை.

வடக்குக் கிழக்கு மற்றும் பெருந்தோட்டத் துறையில் தமிழ் மக்களுக்கு எவ்வித பயன்களும் இந்த வரவு செலவுத்திட்டத்தில் இல்லை என்ற காரணங்களைக் கொண்டே தாம் இந்த முடிபை எடுத்ததாக ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது. (ந-11)

## பராக் ஒபா...

2-வது தடவையாக ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ளதன் மூலம் அமெரிக்க மக்கள் ஒபாமா மீது வைத்துள்ள நம்பிக்கையை பிர திபலிப்பதாக வாழ்த்துச் செய்தியில் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனநாயகம், உலக அமைதி மற்றும் சர்வதேச உறவுகள் ஆகிய விடயங்கள் தொடர்பில் ஒபாமாவின் கொள்கைகளை தொடர்ந்தும் முன்னெடுத்துச்செல்வதற்கான ஆணையை அமெரிக்க மக்கள் வழங்கியுள்ளனர்.

ஜனாதிபதி பராக் ஒபாமாவிற்கு தாம் உட்பட இலங்கை மக்கள் வாழ்த்துக்களை தெரிவிப்பதாகவும் ஜனாதிபதி மகிந்த தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். (ந-11)

## ஜயலத் ஜய...

அவருக்கு தீவிர சிகிச்சைப் பிரிவில், சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாக மருத்துவமனை பணிப்பாளர் தெரிவித்தார்.

ஏற்கெனவே அவர் பல தடைவைகள் உடல் உபாதைகள் காரணமாக மருத்துவ சிகிச்சைகைகளைபெற்றுள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர்களின் மாநாட்டுக்காக வெளிநாட்டு பயணமொன்றின் போதும் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன திடீர் சுகவீனமுற்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். (ந-11)

## பிரதம நீதி...

நீதியரசருக்கு எதிராக குற்றவியல் பிரேரணை விசாரணைகள் பக்கச்சார்பின்றி நடை பெற வேண்டும் என்பதற்காகவே தாம் ஐக்கிய நாடுகளின் உதவியை நாடுவதாக குறிப்பிட்டுள்ளார்.

இதே வேளை இந்தக் குற்றவியல் பிரேரணை அரசியல் நோக்கம் கொண்டது என்றும் பழிவாங்கல் நடவடிக்கை என்றும் எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தியுள்ளன.

எனினும் அதனை அரசாங்கம் மறுத்துள்ளது. (ந-11)


## 31ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி அழைப்பும்

கடந்த 10.10.2012 புதன்கிழமை இறைபதம் எய்திய எமது குடும்பத்தலைவர் **அமரர் சின்னான் நடேசன்**



அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 09.11.2012 வெள்ளிக்கிழமை அதிகாலை 7.00 மணியளவில் தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்தில் நடைபெறவுள்ளது. அந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ள வீட்டுக் கிருத்திய நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

தும்பளை தெற்கு, பருத்தித்துறை. -நன்றி- இங்ஙனம் : குடும்பத்தினர்

(சி-1464)


## அரசுடன்...

கட்சியுடன் இணைந்து செயற்பட வேண்டுமென கோரியுள்ளார்.

நாட்டை அபிவிருத்திப் பாதைக்கு இட்டுச் செல்லும் தமது முயற்சிக்கு எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்பு அவசியம் எனவும், அதற்காக அனைவரும் அரசாங்கத்துடன் கைகோர்த்துக் கொள்ள வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

மேலும் அரச ஊழியர்களிற்கு அடுத்த வருடத்தில் இருந்து 1,500 ரூபா வாழ்க்கை செலவு கொடுப்பனவை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் நிதியமைச்சரான ஜனாதிபதி மகிந்த நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

13 லட்சம் அரச ஊழியர்களுக்காகவும் 5 லட்சம் ஓய்வூதியக் காரர்களுக்காகவும் ஊதியம் வழங்க அரசாங்கம் பெருந்தொகை பணத்தை செலவிட்டு வருவதாகவும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

அத்துடன் அரசஊழியர்களின் ஊதியம் தொடர்பான திட்டத்தை மீண்டும் உருவாக்க புதிய சம்பளஆணைக்குழுவை நியமிப்பது எனவும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. (ந-11)


## அன்பொளி கல்வியகம்

யாழ். இந்துக்கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2012
சித்தியடைந்த மாணவர்களுக்கான

### பரிசளிப்பு நிகழ்வு

எமது கல்வியகத்தில் கற்றுச் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு 10.11.2012 சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு சரஸ்வதி மண்டபத்தில் (ராஜா கிறீம் ஹவுஸ்) நடைபெறும். மாணவர்களைத் தவறாது கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இயக்குநர்,
ஆசிரியர்கள், உதவி ஆசிரியர்கள்.

(சி-1458)

## கட்டார் நாட்டில் உடனடி வேலை வாய்ப்பு

இரண்டு வாரத்தில் பயணம். கீழ்க்காணும் வேலை வாய்ப்புக்கள் உடன் காத்திருக்கின்றன.

**A/C Mechanic, A/C Mechanic helper, Meason, Carpenter, Pulumper, Roomboy, Officeboy, Diver, Electrician, Cook, Clener, Labour, Steelfixer**

இன்னும் பல வேலை வாய்ப்புக்கள் காத்திருக்கின்றன.

அதி உயர் சம்பளம்

தங்குமிடம், மருத்துவம் இலவசம். (மிகக் குறைந்த கட்டணத்தில் பயணிக்கலாம் விரையுங்கள்)

Lanka Voice Vavuniya 0750650084

(சி-1468)

## விசேட கலந்துரையாடல்

யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து கேபிள் ஒப்பரேட்டர்களுக்குமான விஷேட சந்திப்பு ஒன்று நாளை (சனிக்கிழமை 10.11.2012) மாலை 4.00 மணிக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் யாழ்.அலுவலகத்தில் இடம் பெறவுள்ளது. அனைவரையும் தவறாது சமுகமளிக்கு மாறு கேட்டுக் கொள்கின்றோம்.

கந்தசாமி கமலேந்திரன் (கமல்)
யாழ்.மாவட்ட அமைப்பாளர்
ஈ.பி.டி.பி.

(923)





Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.11.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.